செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு ௪௬ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௨, மார்கழி<br>சனவரி 1972 | பரல் ௫ |
|---|---|---|

# நீதியின் வெற்றி

அடக்கத்தை அறியாமை என்றும், பண்பைப் பைத்தியக் காரத்தனமென்றும் எண்ணும் இயல்பு தனிப்பட்ட மனிதரிடம் மட்டுமன்றி, அனைத்துலக அரசியலிலும் காணப்படுகின்றது என்பதற்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்வது இந்தியா - பாகித்தான் சிக்கலாகும்.

ஏனெனில் பாகித்தான் அரசு கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவின் ஆற்றலைப் பற்றித் தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டு, இந்திய மக்களின் குடியாட்சிப் பண்பையும் அடக்க உணர்வையுங்கண்டு, இந்தியா போர்த்திறம் அற்றது என எண்ணி, இந்தியாவினின்று தான் பிரிந்துபோன 1947ஆம் ஆண்டு முதற்கொண்டு இந்தியாவுக்குத் தந்துவந்த தொல்லைகளுக்கு அளவேயில்லை.

காசுமீரத்தை உரிமை கொண்டாடத் துவங்கி, இந்திய எல்லையில் அடிவைக்கும் அளவுக்குப் பாகித்தானின் அரசியல் வெறி வளர்ந்துவந்தது. இத்தகைய வெறியால் நாளடைவில் அஃதோர் அடக்குமுறைகொண்ட வல்லாட்சி நாடாக மாறித் தன்னுடைய நாட்டின் ஒரு பகுதியாகிய கிழக்குப் பாகித்தான் மக்களையே அடிமைகொண்டு கொடுங்கோல் ஆட்சி நடத்தும் அளவுக்குச் சென்றது.

இதற்கிடையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் உருண் டோடின. அவற்றை விரிக்கப்புகின் அஃதொரு நீண்ட

வரலாறுக விரியும். அவற்றையெல்லாம் அடுத்துவரும் கட்டுரை கவிதைகள் ஆகியன ஒருவாறு விளக்கும். எனவே இந்தியா - பாகித்தான் போர்பற்றியும், அதில் இந்தியா பெற்ற வெற்றியினைப் பற்றியும் மட்டுமே ஈண்டுக் காண்போம். ஏனெனில் இது போர்முடிந்து வெற்றிமுரசு கொட்டும் வேளை.

கிழக்கு வங்காளத்தில், மக்கள் கருத்துக்கு மதிப்புத் தராமல், காலநிலை உலகநிலை ஆகியவற்றை அறியாமல் அடக்குமுறை ஒன்றிலே மட்டும் நம்பிக்கை வைத்துப் பன்னூருயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்து, ஏறக்குறைய ஒருகோடி மக்களைப் புகலற்றவர்களாக்கி, அவர்களை இந்தியாவுக்குள் துரத்திவிட்ட பாகித்தானின் கொடுஞ்செயல் உலகறிந்த ஒன்று.

இங்ஙனம் பாகித்தான் செய்த கொடுமைகளைக் கண்டு தாய்மையுள்ளங்கொண்ட இந்திரா காந்தியாரின் அரசு பெருந்துன்பத்திற்குள்ளாயிற்று. ஒருபுறம் கிழக்கு வங்க மக்கள் மீது கொண்ட பரிவு, மற்றொருபுறம் புகலற்றவர்களால் சீர்கெட்டு வரும் இந்தியப் பொருளாதார நிலை ஆகிய இரண்டுஞ் சேர்ந்து பாகித்தான் அரசைத் தட்டிக் கேட்கவேண்டிய நிலை இந்திய அரசுக்கு ஏற்பட்டது. எனவே எச்சரிக்கை விடுத்தது இந்தியா. கிழக்குவங்கத் தலைவர் முஜிபுரை விடுதலை செய்; வங்கத்தைப் பங்கப்படுத்தாதே என்றது.

இதுகண்டு இந்தியாமீது சீறிப் பாய்ந்தது பாகித்தான். அமெரிக்காவின் ஆதரவை நம்பி, ஆழந்தெரியாமல் காலை விட்டது. இந்திய நகரங்கள்மீது குண்டுவீசிப், போர்! போர்! என ஆர்ப்பரித்தது. தூங்கும் புலியை இடறிய சிதடன்போல இந்தியாவை வலுச்சண்டைக்கு இழுத்தது.

இத்தனைக்கும் பிறகுமா வாளாவிருப்பர் நம் இந்திரா காந்தியார்? எதிர்த்தாக்குதல் எழுந்தது; எண்ணிப் பதினான்கே நாட்களில் பாகித்தான் படைகள் பணிந்தன. ஆணவப்படலம் முடிந்தது! அடைக்கலப்படலம் தொடங்கிற்று! கிழக்கு வங்கம் விடுதலைபெற்றது! இந்திரா காந்தியாரின் ஆற்றலைக் கண்டு உலகமே வியந்தது. அநீதி அழிந்தது; நீதி வென்றது என மகிழ்ந்தனர் நல்லோர்.

இந்நிலையில், பல்லாண்டுகளாய் ஏடுகள் பல வெளியிட்டு நாடும் மொழியும் நனிசிறக்கப் பணியாற்றிவரும் நம் கழகம்

நாடுகாக்கும் பணியிலும் தன்பங்கு யாதென எண்ணிச் செந்தமிழ் ஏடாம் செந்தமிழ்ச்செல்வி வாயிலாக மக்களிடையே நாட்டுப்பற்றினை ஊட்டவும், புத்துணர்ச்சி ஏற்படச்செய்யவும் திட்டமிட்டது. ஏனெனில் போர்ப்பணிகளில் எழுத்துமூலம் எழுச்சியூட்டுதலும் சீரியதோர் பணியாகும். பண்டைத் தமிழகத்தில் மக்களிடையே நிலவிய வீர உணர்ச்சிக்கு அக் காலப் புலவர் பெருமக்களின் எழுச்சியூட்டும் புறப்பாடல்களே காரணமன்றோ ?

எனவே போர் துவங்கிய காலத்திலேயே போர் முரசு கொட்ட எண்ணியது நம் செந்தமிழ்ச்செல்வி. நமது எண்ணம் வெளிப்படுமுன் வெற்றி முரசு ஒலிக்கத் தொடங்கிற்று. ஆகவே செல்வி வெற்றி முரசு மலராக ஈண்டு மலர்கின்றது.

பாவியற்றுந் திறன்வாய்ந்த பாவலர்கட்கு உணர்ச்சி யூட்டும் பாடல்களைப் புனைவதற்கு இஃதோர் ஏற்றகால மாதலால் இந்தியா பாகித்தான் போரைப்பற்றி எழுச்சியூட்டும் பாடல்களை இயற்றி யனுப்புமாறு வேண்டிப் பாவலர் சிலர்க்கு அறிக்கை அச்சிட்டு அனுப்பினோம். எமது வேண்டுகோளுக் கிசைந்து நாற்பதுக்கு மேற்பட்ட பாவலர்கள் உள்ளத்துக்கு உணர்ச்சியும் செவிக்கினிமையும் தரும் வகையில் பல்வேறு பாவினங்களில் பாடல்களை யாத்து அனுப்பிவைத்தனர். அதனால் அவர்கள் தங்களது பாப்புனையும் ஆற்றலை உலகறியச் செய்யும் வாய்ப்பினைப் பெற்றதோடு நம் நாட்டையும் ஏட்டையும் மாண்புறச் செய்தனர் என்றால் அது மிகையாகாது. அவர்கட்கெல்லாம் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இவ்வெற்றி முரசு மலர் இரண்டு வகையில் ஏற்றம் பெற்றுத் திகழ்கிறது. எங்ஙனமெனில், இந்தியா போரில் பெற்ற இவ்வெற்றியினைக் கொண்டாடுகின்ற இதே நேரத்தில் கிழக்கு வங்க மக்களின் உள்ளத்தில் கோயில் கொண்டிருந்த தலைவரும், தமது அஞ்சா நெஞ்சத்தால் அனைத்துலக நாடு களின் கருத்தைக் கவர்ந்தவருமான முஜிபுர் ரகுமான் விடுதலை பெற்ற செய்தியும் சேர்ந்து நம்மையெல்லாம் பெருமகிழ்வில் திளைக்கச் செய்கின்றது. விடுதலை பெற்ற ரகுமான் அவர்கட்கும் அவர் தம் நாட்டு மக்கட்கும் நம்முடைய உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இவை அனைத்துக்குங் காரணமாயிருந்த நம் இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கட்கும், அவர் தம்

குடியாட்சிப் பண்பறிந்து பக்கத்துணை நின்ற நாடுகளுக்கும், சிறப்பாக உருசிய நாட்டிற்கும் இந்திய மக்களாகிய நாம் பெரிதுங் கடமைப்பட்டுள்ளோம்.

அமெரிக்கா சீனுபோன்ற வல்லரசுகள் பாகித்தானுக்குத் துணை நின்றமை கண்டும், ஐ. நா. அவையில் பெரும்பான்மை நாடுகள் இந்தியாவிற்கு எதிராக வாக்களித்தமை கண்டும், அஞ்சாநெஞ்சோடு போரைத் தொடர்ந்து நடத்திய மாண்பினையும், அல்லற்பட்டு ஆற்ருது அழுது கண்ணீர் சிந்திப் புகல் தேடி வந்த கிழக்கு வங்க மக்களின் துயர்துடைக்க அம்மையார் மேற்கொண்ட முயற்சிகளையும் எண்ணிப் பார்க்கும்போது நமக்குப் பெரியதொரு வியப்புத் தருகின்றதன்ருே; அம்மையாரின் இத்தகைய வீர தீரச் செயல்கள் உலக வரலாற்றிலேயே இந்தியாவுக்குச் சிறப்பானதோர் இடத்தைத் தேடித் தந்துவிட்டன எனில் அது மிகையன்று. எனவே அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து நாட்டுப்பணியாற்ற இறைவன் அருள்புரிவாணுக.

போரில் வெற்றிகண்டு திரும்பிய வீரர்கட்கு நம் வாழ்த்துக்களையும், போரிற் புறங்கொடாது உயிர்நீத்த வீரர்கட்கு நமது வீர வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிருேம். வாழ்க இந்தியா! வளர்க மக்களாட்சி!

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!

---

## நன்றி

இம் மலர் சிறப்பான வகையில் வெளிவருவதற்கு ஒத்துழைத்த பாவலர் பெருமக்களுக்கும், படங்கள் கொடுத்துதவிய இந்திய அரசு செய்தி விளம்பரத்துறை (Press Information Bureau) யினருக்கும் அலை ஓசை, முரசொலி வெளியீட்டாளர்கட்கும், மலர் கைப்படிகளைத் திருத்தியும் செப்பஞ் செய்தும் பதிப்புத்துறைக்குத் துணைபுரிந்த திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

ஆசிரியர்.

# வெற்றி முரசொலி

## "துந்துபி"

*" கயிலாய மலையுள்ளார் காரோ ணத்தார்*
*கந்தமா தனத்துள்ளார் காளத் தியார்*
*......................"*

என்று கயிலாய மலைய இறைவனே காளத்தி மலையிலும் இருப்பதாக, எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே பாடி, இந்திய நாட்டின் இணைப்பினை உணர்த்தினர் மெய் யடியார்கள்.

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் — இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள்; எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று பாரத நாட்டின் ஒருமைப்பாட்டினை ஓதினார் பாரதியார்.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

என்பது, உண்மைச் சமயத்தை ஓர்ந்துணர்ந்த உள்ளத் துதிக்கும் உயர் ஞானக்குரலாகும். ஒற்றுமையை வளர்ப்பதே உயர்ந்த சமயம் என்பது பாரத நாட்டின் பண்பாட்டுக் கொள்கை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இப்பண்பாட்டிலே வளர்ந்தது இந்திய நாகரிகம்.

ஆனால், ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த பாரத மக்கள் இந்தப் பண்பாட்டினை மறக்கும் நிலை ஏற்பட்டது, அந்நிலையை ஏற்படுத்தினர், சில அரசியல் தலைவர்கள். இதன் விளைவாகச் சமயப் பூசல்கள் எழுந்தன. மக்களிடை சினம் வளர்ந்தது; செங்குருதி சிந்தியது. மதத்தின் பெயரால் மக்கள் மாய்ந்தனர்! இந்திய நாடு இரண்டானால்தான் விடுதலை கிடைக்கும் என்ற இடர்நிலை எழுந்தது.

பிரிந்தது பாரதம், பிறந்தது பாகித்தானம். பிரிவிலே பிறந்த பாகித்தானம் பிளவுடன் தோன்றியது. கிழக்கு—மேற்கு என்ற பிளவுக்கிடையே ஆயிரம் மைல் இடைவெளி! இடத்தால் மட்டும் பிளவுபடவில்லை, எண்ணத்திலும் அது பிளவுபட்டிருந்தது!

மதம் என்ற பெயரால் மதம் பிடித்து நின்ற மக்கள் நாட்டிலே மக்களாட்சி எவ்வாறு மலரும்? வல்லடியில் நம்பிக்கை கொண்ட மக்களுக்கு வல்லடி ஆட்சியே கிடைத்தது. படைத்தலைவர்கள் பாகித்தானின் தலைவர்கள் ஆனார்கள்! மக்களாட்சி முறை மாண்டு மறைந்தது அந்நாட்டில்!

மேற்குப் பிரிவினர் கிழக்குப் பிரிவினரைத் தங்கள் கீழுள்ள குடிமக்கள் எனக் கருதி நடத்தினர். கிழக்கு நாட்டுச் சணலும், தேயிலையும், காப்பியும், கனிப்பொருள்களும் மேற்கு நாட்டை மேம்படச் செய்யவே பயன்பட்டன. கிழக்கு நாட்டு மொழியான வங்கம் கீழ்மொழியாகக் கருதப் பட்டது. அரசாங்க மொழியென்ற அரியணையில் உருது மொழி அமர்ந்தது. பொருளாதார நிலையில் மேற்குப் பிரிவு வளர்ந்தது, கிழக்குப் பிரிவு வாடியது.

இந்நிலை எத்தனை நாட்கள்தாம் நீடிக்க முடியும்? அடங்கியிருந்த கிழக்கு மக்கள் ஆர்ப்பரித்து எழுந்தனர். மக்கள் வாக்கு என்ற மாண்புமிக்க முறையால் கிழக்கு வங்க மக்கள் தங்கள் உரிமை வேட்கைக்கு உருக் கொடுத்தனர்; உரிமைக் குரலெழுப்பும் ஒப்பற்ற தலைவரைத் தேர்ந்தெடுத்தனர்.

மேற்குப் பிரிவைவிடக் கிழக்குப் பிரிவில்தான் மக்கள் தொகை மிகுதி, பெரும்பான்மை மக்கள் கொண்ட கிழக்குப் பிரிவினர் தேர்ந்தெடுத்த தலைவர்தாம் பாகித்தான் நாட்டுத் தலைவர் ஆகியிருத்தல் வேண்டும். ஆனால், ஆட்சி நடத்தும் அரியணையில் அமர்ந்த படைத்தலைவனுக்கு அரியணையை விட்டு அகலுவதற்கு மனம் வரவில்லை. எனவே, வஞ்சகம் கொண்ட வல்லடி ஆட்சியினர் மேற்குப் பகுதியிலிருந்து படைகளைக் கொண்டு வந்து கிழக்குப் பிரிவு மக்களை அடக்கமுற்பட்டனர்!

ஒரு நாட்டின் படையினர், அந்நாட்டு மக்கள்மீதே படையெடுத்துத் தாக்குவதென்பது வரலாறு காணாத நிகழ்ச்சியாகும். ஆனால், பாகித்தானியப் படையினர் அந்நாட்டின் பகுதியாக இருந்த கிழக்கு வங்க மக்கள்மீது தங்கள் கொடுந் தாக்குதலைத் தொடங்கினர். எத்தனையோ மக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தனர், பட்டாணியப் படையினர். அப்படையினர் செயலை மிருகச்செயல் என்றால் அது விலங்கினங்களை இழிவுபடுத்துவதாகும். புலி தன் பசியாற்றிக் கொள்ளுவதற்கே மான்மீது பாய்கின்றது; பூனை தன் உணவுக்கெனவே எலியைக் கொல்லுகின்றது. ஆனால், மனிதன் மனிதனைக் கொல்லுவதற்குக் காரணமே இல்லை;

காழ்ப்புணர்ச்சியால் கொல்லும் கயமை மனிதனிடந்தான் உள்ளது!

பெண்கள் என்றும் பிள்ளைகள் என்றும் பாராமல், முதியோர் என்றும் முடவோர் என்றுங் கருதாமல், கிழக்கு வங்க மக்களை வேட்டையாடினர், பாகித்தானியப் படையினர். இதனால் எத்தனையோ இலட்சம் பேர் இறந்து மறைந்தனர். தலைவனை இழந்த குடும்பம், தனயனை இழந்த தந்தை, கணவனை இழந்த மனைவி, பசுங்குழவியைப் பறிகொடுத்த தாய் — இவ்வாறாக ஏறத்தாழ ஒருகோடி மக்கள் இந்திய நாட்டிற்குள் வந்து தஞ்சம் புகுந்தனர். பாரதநாடு அவர்களைப் பரிந்து வரவேற்று உண்டியும் உறையுளும் அளித்து ஓம்பியது.

மனித வரலாற்றிலேயே பாகித்தானியப் படையினரின் பாதகச் செயல்கள் மிகமிக இருண்டதொரு பகுதியாகும். இருபதாம் நூற்றாண்டிலுங்கூட, மனிதன் காட்டு விலங்குகளை விடக் கொடியவனாக இருந்தான் என்பதற்கு எடுத்துக் காட்டாகும்! இதைவிட விந்தை என்னவெனில் பெரும்பாலான உலகத்து நாடுகள் இந்தப் பித்தர் செயலைக் கண்டிக்க வில்லை! அலை அலையான பிணக்குவியல்களைத் தொலைக் காட்சியில் கண்டுங்கூட அந் நாட்டு அரசினர் இக் கொடுமையை எதிர்த்துக் கூறவில்லை. வல்லரசுகளின் கல்லிதயங்கண்டு நல்லிதயங்கொண்டோர் நலிந்தனர்.

இந்நிலையில் பாகித்தான் படைகள் திடுமென வட இந்திய நகரங்களின்மீது குண்டுவீசித் தாக்குதல் செய்தது. இதுகண்டு இனியும் வாளாவிருத்தல் ஆகாது எனக் கொதித்தெழுந்தது நம்முடைய பாரதம். மனித உரிமையைக் காப்பதற்கும், மக்களாட்சியின் மாண்பினை நிலைநாட்டுதற்கு மெனப் பாரதப்படை புறப்பட்டது. வங்க விடுதலை வீரர்களுக்கு உதவியாக நின்று, இரண்டு வாரப் போரிலே பாகித்தானியப் படையைத் தோற்கடித்தது இந்தியப் படை! வங்க நாட்டிலே இந்தியப்படை அடைந்த வெற்றி, வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெறுவதாகும். நாட்டைப் பிடிக்கவென நம் படை செல்லவில்லை; நல்லாட்சியை நிறுவவே அது சென்றது. கொடுங்கோன்மையை நடுங்கச் செய்தனர் நம் படை வீரர்கள்.

மக்களாட்சியின் மாண்பினை எடுத்தோதி உலகில் அம்முறையைப் பரப்புவதே தன் கடமை என்று அயராது கூறி வந்த அமெரிக்க நாடு பாகித்தான் பக்கம் நின்று பரிந்து

பேசியது, பாரதத்தைப் பழித்தது! எனினும், பாரத அரசின் உள்ளங் கலங்கவில்லை, உறுதி குலையவில்லை. நீதியை நிலை நாட்டுவதில் எத்தகைய இடர்கள் வந்தாலும் எதிர்த்து நிற்போம் என்ற நேர்மையுறுதி இந்திய மக்கள் இதயத்தில் இறுகி நின்றது!

திடங்கொண்ட பாரதத்தின் தீரப்படையிடம் மடங் கொண்ட பாகித்தானம் மண்டியிட்டுத் தோற்றது. நீதி வென்றது, அநீதி தோற்றது; நன்மை ஓங்கியது, தீமை ஒடுங்கியது; மக்களாட்சி வந்தது, மல்லர் ஆட்சி மறைந்தது. தங்கம் போன்ற வங்கதேசம் தரணியில் மலர்ந்தது!

பெற்ற பொன்னாட்டைத் தாய்நாடு என்பர். எனவே, இந்திராகாந்தி அவர்களின் தலைமையில் நம் நாடு பெற்ற இவ்வெற்றி தாய்க்குலத்தின் வெற்றி எனல் சாலப் பொருத்த மாகும்.

பாரதம் பாகித்தானுடன் நடத்திய இரண்டு வாரப் போரிலே பாரதத்தின் முப்படையினர் காட்டிய வீரமும் தீரமும் இந்திய வரலாற்றுக்கு ஏற்றமளிப்பனவாம். இதனால், உலக நாடுகளிடை இந்தியாவின் பெருமை ஓங்கி உயர்ந்தது.

நம் நாட்டு வருங்காலத் தலைமுறையினர் இந்தப் போரினையும் இந்திய நாடு அடைந்த வெற்றியையும் பற்றிப் படித்துப் பெருமையடைவார்கள். வல்லாட்சியை அகற்றி நல்லாட்சியை அமைக்கவென நடந்த இப்போர் இன்று நம் மிடையே வாழும் கவிஞர்கள் மனத்திலே எத்தகைய உணர்ச்சிகளை எழுப்பியது என்பதை வருங்காலத் தலைமுறை யினர் அறிவது வரலாற்றுக்கு வளமேற்றுவதாகும். தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரர்கள் பலர் இப்போரிலே ஈடில்லா வீரத்துடன் சமர் செய்துள்ளனர். இந்தப் பொற்காலத்தில் உருவாகியுள்ள நம் சமுதாயத்தின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் நல்லிசைப் புலவர்கள் பல்வகைப் பாக்களைப் புனைந்துள்ளனர்.


இந்த வெற்றி முரசுப் பாமாலையை, அறப்போரிலே வெற்றி ஈட்டித் தந்த வீரர்களுக்கு அணிவித்து அஞ்சலி செலுத்துவதில் "செந்தமிழ்ச் செல்வி" பெருமையடைகிறது.

———

# போர் வெற்றி முரசுப் பாமலர்

போர்வெற்றி கொட்டிவரும்
    புகழ்முரசு மலராகப்
புத்தாண்டில் பூத்து
    மணம்குலுங்கும் இதழாகப்
பேர்சொல்லும் நெல்லையொளிர்
    பிறங்குசைவ சித்தாந்தப்
பெருங்கழகப் பதிப்பேற்றுப்
    பேணுகின்ற தமிழ்த்தொண்டர்
சீர்நல்கும் நடுவரசு
    சிறப்பீந்த மரைச்செல்வர்
செந்தமிழ்சேர் பணியோடு
    செருவகற்றப் பணியாற்றும்
ஏர்செல்வர் சுப்பையா
    எழில்நாட்டுப் பற்றுளத்தை
இலங்குசெந் தமிழ்ச்செல்வி
    இனிதேற்று வருகின்ருள்.

வித்துவான் பெ. சுப்பையா
திருநெல்வேலி.



# எழுந்தது அமைதிச் சிங்கம்

டாக்டர்
சாலை இளந்திரையன்
எம்.ஏ., பிஎச்.டி.,
தில்லிப் பல்கலைக் கழகம், தில்லி.

பயிரோடு வருங்களைபோல் உலக அன்னை
    பயந்தனளோ மக்களுடன் பகைநோய் தன்னை
செயிரோடு கொடுமைகளை வளர்க்கின் றார்ஏன் ?
    செழுநிலத்தைச் சிலர்சிவப்பாய்ப் புரிகின் றார்ஏன் ?

இந்தியமென் றொருநாடாய்க் கிடந்த மண்ணில்
    இருவீடு வைத்தெழுந்த அண்ணன் தம்பி
சிந்தியது போதாதோ உயிரை அன்பை ?—
    சிவந்தார்கள் கண்முகங்கள் மீண்டும் ஏனோ ?

நேருவெனும் ஓரினியன் தலைமை யின்கீழ்
    நேர்மையெனும் பயிர்தழைக்க வாழ்ந்த நம்மை
யாரெவரோ போர்க்கிழுத்தால் வியக்க மாட்டோம் ;—
    ஏனிழுத்தார் பாகித்தான் தம்பி மார்கள் ?

ஒருவீட்டில் ஊடுசுவர் எழுந்த தாலே
    உவன்கொடிய னுவதுண் டோ அண்ண னுக்கே ?—
இருவீட்டுப் பிள்ளைகளும் துள்ளி யாடும்
    எழில்முற்றம் கொலைக்களமாய் இயல்வ துண்டோ ?

ஆயிற்றுப் போர்க்களம்இவ் அருமை நாட்டில்
    ஆர்த்திட்ட பாகித்தான் ஆட்சி யாலே
போயிற்று நம்மறவர் பொறுமை ?—எங்கும்
    பொங்கிற்று வெப்புடைய குருதி வெள்ளம்

வங்கத்தை ஒருதோளாய் மேற்குப் பாக்கு
    மண்ணதனை ஒருதோளாய்க் கொண்டி ருந்தோர்

'எங்கட்கே இன்பெல்லாம்!' என்றார்;—ஏனோ
இடத்தோளை முடத்தோளாய்ச் சாய்க்க நின்றார்.

நற்குருதி ஓட்டமதைத் தடுத்துக் கீழை
நறுந்தோளைச் சூம்பல்தோள் ஆக்கச் சூழ்ந்த
வற்கடரை நினைந்தத்தோள் திமிர வேஅப்
பாக்கென்னும் ஒருடலம் உலைந்த தம்மா!

'ஒருடலின் உள்ளேதோ சிறுநோய் என்றே
உலகமுடன் நாமுமதைப் பார்த்தி ருந்தோம்.......
காருளத்துத் தீயோரால் உடலின் கூறு
கழன்றுகொண்டே இருந்ததனை அறிந்தோ மில்லை!

ஊட்டஞ்செல் லாக்கிளைகீழ் மண்ணில் தோய
ஓரிரண்டு வேர்வெடித்து மண்ணில் பாய—
பாட்டுக்குப் பொருளாயோர் புதுநா டாகப்
பரந்ததுவே கீழ்வங்கம் தனிநா டாக!

கண்ணோடு தோளோடு கனிவி னோடு
கனகனென நிமிர்ந்தெழுந்த வங்கப் பிள்ளை
மண்ணோடு மண்ணாக என்றே மேற்குப்
பாக்கரசு கொடுமைமழை பொழிந்த தங்கே!

எப்படையும் இல்லாத வங்கப் பிள்ளை
இதயமெனும் ஒருபடையோ டெழுந்து நிற்க
முப்படைகள் கொண்டதனை முறித்துப் போட
முழுமூச்சாய் மோதியது பாக்குச் செந்நாய்!

அண்டையிலே எழுமோலம் நெஞ்சில் பாய
'அடதம்பி நிறுத்து' என்று குரல்கொ டுத்தோம்;
மண்டையிலே ஏறவில்லை—யாயாக் கானின்
மறமறவர் கொடுமையதே ஏறிற் றங்கே!

நூறாக ஆயிரமாய் இலக்க மாக
நுழைந்தார்கள் திக்கற்றோர் இப்பக் கத்தே!—
ஆறாகப் பெருகினர்கள் அன்பு தேடி
அம்மம்மா எனவந்த அழுகை மக்கள்!

இதுகொடுமை பாக்கப்பா—அழுகைக் கேனும்
இரங்கப்பா எனச்சொன்னோம்; மீண்டும் சொன்னோம்!
மதுவருந்தித் தீப்பந்தம் ஏந்தி நின்ற
பாக்கனுமார் சிறுசெவியும் சாய்த்தா ரில்லை!

நாடோறும் உடைப்பெடுத்த மக்கள் வெள்ளம்
நம்மண்ணில் பரவிடவும்,—அந்த வெள்ளப்
பாடுறும் கண்ணீரோ மனிதப் பண்பு
படும்பாடு சொல்லிநமை வெறியேற் றிற்று !

காடழித்து நாடமைத்து மனிதப் பண்புக்
கவின்வளர்த்த வரலாறு நமக்குச் சொந்தம் !—
ஈடிலதாம் உறவுரிமை எல்லை தன்னை
எங்கெங்கும் விரித்தகதை நமக்கே சொந்தம் !

சொந்தமெனக் கனிவுடைமை வளர்த்த நந்தம்
தூயவெளி முற்றத்தே யாரோ மூடன்
சிந்துவதோ மனிதாபி மானந் தன்னை ?—
சீற்றமின்றி நாமதனைப் பார்ப்ப தேயோ ?

பொங்கிவந்த சீற்றத்தை அமைதி நாட்டப்
பொன்விலங்கு தடுத்திடவே,—அழுது கொண்டே
'இங்கிதுபோல் நடக்கிறது தடுப்பீர் !' என்றே
எவ்வுலகும் செவிடுபட ஓல மிட்டோம்....

அமெரிக்கர் மேலேறிக் கொண்ட நிக்சன்
'ஆ ஆ ஆ !' எனச்சிரிப்புப் பெருக்கி நின்ருன் ;—
நமதூரின் 'அருட்செல்வர்' பலர்போல் நிக்சன்
நரர்குருதி அருந்துவதில் கெட்டிக் காரன் !

கொரியாவில் வியத்நாமில் குடித்த ரத்தக்
குறுந்துளிகள் சொட்டுகிற வாயால் நிக்சன்
'சரியாகச் செய்கின்ருன் யாயா என்றன்
நண்பன்' எனப் பணச்சிரிப்புச் சிரித்தி ருந்தான் !

கொள்ளிவைக்கும் அனைவரினும் பெரிய கொள்ளி
கொழுகொம்பாய்க் கிடைத்திடவே பாக்கு யாயா
அள்ளிவைத்தான் தாக்குதலை இந்தி யத்தே ;—
அமைதிநெறிச் சிங்கத்தை இடறி விட்டான் !

இமயமுதற் குமரிவரை ஒருநா டாக
இந்நாடு முழுமையுமோர் இதய மாக
அமையநடக் கின்றதெனும் ஒருமை ஓரான்
அறியாமைத் திருவடிவன் படையெ டுத்தான்...

சிந்தியது போதுமடா குருதி என்றே—
சேர்ந்திருக்கும் நெறியொன்றே பற்றி நிற்கும்

இந்தியத்தில் அயலவரின் படையா?—இந்த
எழில்மண்ணில் மாற்ருனின் குண்டு வீச்சா ?

அறஞ்சொன்ன நெஞ்சுக்கே கத்திக் குத்தா ?—
அரவணைத்த தோளுக்கே சவுக்கு வீச்சா ?
புறம்வந்த திக்கற்ரோர் அனைவ ருக்கும்
புகல்தந்த வீட்டுக்கோ நெருப்பு முத்தம் !

'உள்வீட்டுச் சண்டைஎன ஒதுங்கி நின்றும்,
ஒருசெஞ்சோற் றுதியன்போல் கருணைகூர்ந்தும்
கள்ளாமை கவராமை கடைப்பி டித்த
கைகளுக்கோ நெருப்புக்கோல் இழுப்புத் தண்டம் !?'

பொங்கினநம் முப்படைகள் வீறு கொண்டு ;—
புதுக்கின நம்பழவீர வரலாற் றேட்டை !
வங்கமதைச் சூழ்ந்தமுகில் வெளுப்பா யிற்று ;—
வாய்வீரப் பாக்கித்தான் சரணு யிற்று !

கண்ணீரில் மூழ்கிவிட்ட கீழ்வங் கத்தைக்
கைநீட்டித் தூக்கிவிட்ட இந்தி யத்தின்
மண்வீரர் வான்வீரர் கப்பல் வீரர்
மாவீரம் வரலாற்றுக் குவப்பா யிற்று !

'வலியநாம் சண்டைக்குப் போவ தில்லை ;—
வந்துவிட்டால் இந்தியத்தார் விடுவ தில்லை !'
எலிகளுக்கும் நரிகளுக்கும் இந்தச் செய்தி
இன்னுமொரு முறைசொல்லி நினைவு செய்தோம்....

'நிமிர்ந்துநட இந்தியனே உனது நெஞ்சம்
நீதிக்குச் செவிலித்தாய் ! உனை எதிர்த்துத்
திமிர்ந்துவரும் படைநூலாம் படையாம் !' என்றே
சிரிக்கின்ற திவ்வுலகம் மகிழ்வி னோடு...

மனிதநல உரிமைக்கு மதிப்புச் செய்தோம் ;—
மறம்மறந்த தில்லை—மறு பதிப்புச் செய்தோம் !
இனியநெறிக் கென்றும்நாம் துணையி ருப்போம் ;—
ஏனென்ருல் எம்நாடு தருமப் பண்ணை....



# அஞ்சலி செலுத்திடுவோம்

நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை
நாமக்கல், சேலம்.

போர் முரசு கொட்டி—நாட்டுள்
புகுந்த பகையை வெட்டி
பார் புகழ வென்றோம்—ஏதும்
பழி யிலாது நின்றோம்.

அரசு கெட்டுச் சேனை—கொண்டு
அடக்கும் பாக்கித் தானை
முரசு கொட்டிச் சென்றே—முற்றும்
முறிய டித்து வென்றோம்.

பரத நாடு முற்றும்—தமிழன்
பங்கு கொண்ட சுற்றம்
விரத மாக அதனைத்—தமிழர்
வீறு கொண்டு காப்போம்.

மறக் குலத்து வீரன்—தமிழன்
மாண்பு மிக்க தீரன்
இறக்க அஞ்ச மாட்டான்—மானம்
இழந்து கெஞ்ச மாட்டான்.

அண்ணல் காந்தி பக்தர்—போரை
அறிய மாட்டோ மென்று
எண்ணி எவரும் வந்தால்—அவரை
எமனுக் கிரையாய்த் தருவோம்.

போர் தொடுக்க மாட்டோம்—வந்தால்
புறங் கொடுக்க மாட்டோம்

யார் தொடுப்ப ரேனும்—அவர்கள்
அழியத் தானே வேணும்.

எந்த நாட்டின் மீதும்—படை நாம்
எடுக்க மாட்டோமெப் போதும்,
இந்த நாட்டைச் சீண்டும்—எவரும்
இறக்கத் தானே வேண்டும்.

நேரு பெற்ற மங்கை—ஆளும்
நெறி யறிந்த நங்கை
வீறு கொண்டு நின்றார்—நமக்கு
வெற்றி கொண்டு வந்தார்.

கருணா நிதி அவரும்—தமிழர்
கடமையை ஊட்டி விட்டார்
சரணா கதியைப் பகைவர்—அடைந்த
சங்கதி கேட்டு விட்டோம்.


வீர மரணம் பெற்றோர்—மற்றும்
வேறு இரணம் உற்றோர்
யாரும் அவர்க ளுக்கு—வணங்கி
அஞ்சலி செய்திடு வோம்.

---

## இந்திரா தவறுடையர் அல்லர்

*"கிழக்கு வங்கத்தில் யாகியாகான் செய்த கொடுமைகளைத் தடுத்து நிறுத்த மேலை நாடுகள் எதுவும் முன்வராத காரணத்தால், தமது கடைசி முயற்சியாக இந்திரா காந்தியார் அங்கு இந்தியப் படைகளை அனுப்ப நேர்ந்ததே யன்றி வேறில்லை. இப்போர் நிகழக் கூடாது என்றுதான் அம்மையார் கடைசி வரையில் நினைத்திருந்தார். ஆனால், அது முடியாமற் போயிற்று. எனவே நடுநின்று சிந்திக்கும் எவரும் இஃது இந்திரா காந்தியாரின் தவறு என்று சொல்ல மாட்டார்கள்."*

*—இலண்டன் 'சண்டேடைம்ஸ்' என்னும் இதழில் ஜான்கிரிக் என்பார் எழுதியுள்ள கட்டுரையின் கருத்து.*



# எம் உறுதிக்கிணையும் உண்டோ?

கவிஞர் சி. து. கன்னிசாமி
கண்டரச்சேரி.

கீழ்வங்க நாட்டினிலே பாகித் தானக்
    கெடுமதியர் செய்தவெலாம் கிளத்தற் காமோ
சூழ்புயலாய்ப் பேய்களெனச் சூழ்ந்து நாட்டின்
    சொத்துரிமை சுகமனைத்தும் சூறை யாடி
வாழ்வொழித்தார் கொலைபுரிந்தார் மக்கள் இந்த
    மண்புகுந்தார் சரணென்றார் வாழ வைத்தோம்
ஆழ்துயரம் போக்கல்ஒரு குற்றம் ஆமோ?
    அதைக்காட்டி நமையடர்த்தார் ஆய்வி லாதார்.

தனித்தலைவர் முஜிபுரினைச் சிறையில் தள்ளிச்
    சதிபுரிந்தார் கொலைவெறியர் தளரா மாந்தர்
இனிப்பொறுப்ப தில்லையென எழுச்சி கொண்டார்
    இகல்வேங்கைக் குழுவானார் 'யாகி யாகான்
மனச்செருக்கை அறுத் தெறிவோம் வங்க மண்ணின்
    மறுவதனைத் துடைத்திடுவோம் வாரீர்' என்றார்
மனத் தொருமை படைத்தெழுந்த மக்கள் வெள்ளம்
    மாற்றலர்க்கோர் இடியேறாய் வளர்ந்த தம்மா!

மருண்டமனக் கொடும்பேயர் வங்க மண்ணில்
    மலர்ந்திட்ட புரட்சிக்கு நமது நாடே
அரண்தருவ தாகுமென ஐய மின்றி
    அறிந்தனர்போல் அளந்துரைத்தார் அழகு நாட்டின்
திரண்டவலி ஈதெண்ணார் செருக்கில் ஊன்றும்
    செயல்முடிவைச் சிந்திக்கும் திறமும் இல்லார்
புரண்டுவரும் புற்றீசல் என்ன நாட்டில்
    புகுந்திட்டார் அவர்உய்ந்து போதல் உண்டோ!

நஞ்சனைய பாகித்தான் நரிகள் இந்த
நாட்டினிலே தரும்நலிவும் நைவுற் றேங்கித்
தஞ்சமென வந்தடைந்தார் பல்லோர் தம்மைத்
தாங்கிடுநம் தனிப்பொறுப்பும் தாழா தெண்ணி
விஞ்சுபுகழ்ப் பிரதமர்அம் மேலை நாட்டு
வித்தகர்க்கு விரித்துரைத்தார் விரும்பிக் கேட்ட
வஞ்சமனக் கரவுடையார் வருந்தி னார்போல்
வாயுரைகள் பற்பலவும் வழங்கி னால்.

சீனரொடும் அமெரிக்கர் நமக்குத் தீமை
செய்ம்முறையில் பாகித்தான் சிறுமைக் கெல்லாம்
ஆனபெருந் துணையானார் ஆனா லென்ன?
அறமுணரும் சோவியத்து நாட்டார் ஆங்கு
மானமுறும் நட்புணர்வில் பார தத்து
மாட்சிமைக்குத் துணைபுரிய நின்றார் மண்ணில்
ஈனரவர்க் கெளியேமோ! எதிர்த்து வந்தார்
என்படுவர்! எம்உறுதிக் கிணையும் உண்டோ!

'தம்முடலும் செம்பொருளும் ஆவி தானும்
தாய்நாட்டின் உரிமைக்குத் தந்த மேலோர்
செம்மரபில் வந்துதித்த திறலீர்! சிங்கச்
செழுங்குருளை புலிக்கணங்காள்! தீயர் கூட்டம்
இம்மெனுமுன் எழுந்தலறி ஓட இன்னே
இயற்றுகநீர் போர்' என்றார் இந்தி ராவாம்
எம்முரிமை நாட்டிறைவி ஆணை ஏற்றார்
இரைவேட்ட புலிகளென எழுச்சி கொண்டார்.

போர்முரசம் திசையதிரப் புலிகள் என்னப்
புறப்பட்டார் படைமறவர் புரட்சி வங்கப்
பார்தனிலும் மேற்கினிலும் பாகித் தானர்
படைகுலைந்தார் இடியதிரப் பயந்து சாயும்
கூரெயிற்று நாகமதன் கூட்ட மென்னக்
குடர்சரிய மானமொடும் கொள்கை வீழ
யார்துணையும் பயனின்றி இரிந்தார் மாய்ந்த
இரும்பிணங்கள் குருதியலை ஈர்த்த தம்மா!

எண்ணேறும் விண்ணூர்தி எரிந்து வீழ
எடுத்தபடை யொடுமறவர் இனங்கள் சாயத்
தண்ணீரிற் கப்பலெலாம் சரிய மானம்
தவிர்ந்திட்ட பாகித்தான் சழக்கர் நந்தம்

மண்ணுசை இதுபோதும் மறவர் ஈந்த
    மரணவடி இறுதிவரை மறத்தற் காமோ!
எண்ணமற், சரண் அடைவ தொன்றே இங்கண்
    இயல் வதெனச் சரண்புக்கார் இசைந்தோ மன்றே.

பூட்டோவின் பொய்ம்முழக்கம் யாகி யாகான்
    புகன்றிட்ட ' இறுதிப்போர் ' எல்லாம் புன்செய்க்
காட்டாற்று வெள்ளமெனக் கடுகி ஓயக்
    கண்ட னம்யாம் பெருவெற்றி கலங்கா நெஞ்சின்
ஈட்டமிகு முப்படைகள் இன்று போரில்
    எழுச்சிமிக வினைததவெலாம் எண்ணி மேலை
நாட்டவர்கள் வியக்கின்றார் நண்ணார் எண்ணி
    நாணுற்றார் நடுங்கியுளம் நைகின் றாரால்!


ஈரெழுநாட் போரதனில் இந்தி யத்தாய்
    எய்துபெரும் வெற்றியினில் இந்த மண்ணின்
சீரதனை உயிரீந்து காத்த சிங்கச்
    செம்மல்களை ஆறுமுகம் போன்ற தீர
வீரர்களைக் கைகால்கண் மேனி குன்றி
    விழுப்புண்கள் பெற்றுயர்ந்த விறலோர் தம்மை
ஈரமனத் தொடுநன்றி எய்தி யெண்ணு
    திருந்திடிலிம் மனிதகுலத் தேற்ற மென்னும்?

மாவீர சக்கரமே முதலா மாட்சி
    மல்குபெரும் விருதுற்றார் மண்ணில் வானில்
தாவாத கடற்போரில் தழலாய்ச் சீறித்
    தரியலரைப் புறங்கண்டு சாய்ந்தார் யார்க்கும்
ஓவா நற் பரிசுபல உதவற் குற்றார்
    ஓங்கிடுநங் கலைஞர்முதல் அமைச்சர் ஒல்லை
சாவாத புகழ்கொள்வீர் தாரீர் செமபொன்!
    தாய்க்குலமும் உதவிடுக! குருதி தாரீர்!

புறப்புண்கள் ஆறுமுன் பொய்யர் நெஞ்சு
    புகைகின்றார் பூடடோவின் புரட்டு வாதம்
சிறைக்குள்ளே முஜிபுர்படும் சிறுமை யெல்லாம்
    சிந்திப்பின் அதுவிளங்கும்; ' சென்றார் நெஞ்ச
உறைபபினிலே தாககவரின் ஓங்கு காவல
    உற்றிடுநம் வீரர் இவண் உள்ளார் தீயர்
இறப்பதினி உறுதி ' என இந்தி ராவும்
    இயம்புகின்றார் படைக்குதவி இன்றே செய்வோம்!

———

# நமது வெற்றி முரசு



தவத்திரு
சுத்தானந்த பாரதியார்
யோக சமாசம், அடையாறு.

வெற்றிவெற்றி என்றுமுரசு கொட்டுவோம்
வீரம் வீரம் என்று முன்முன் எட்டுவோம்
எற்றிவீசி எதிர்பகையைச் சாடுவோம்
எங்கள் அன்னை யின்புகழைப் பாடுவோம்
பாடுவோம்—சாடுவோம்—வாகை—சூடுவோம்

எடுங்கள் ஆயு தங்களை
இகல் நடுங்கப் போர் செய்வோம்
விடுங்கள் பேடி அச்சத்தை
வீறுகொண்டு போர் செய்வோம்
போர்போர்! போர்போர்! போர்போர் போர்!

ஐம்பத்தைந்து கோடிமக்கள் யாங்களே
அறமும் பொருளும் இன்பவீடும் அறிகுவோம்
நம்பியன்பு செய்யுந் தொண்டர் நாமெல்லாம்
நாடுவாழ நாமும்வாழ லாகுமே— (வெற்றி)

பண்படாத பகையரக்கர் கொட்டத்தைப்
படைக்களச் சமரிலே அடக்குவோம்
குண்டுவீசிக் கொல்பகைத் திறத்தினைக்
குண்டுவீசி யேகுமைத்து வெல்லுவோம் (வெற்றி)

வேறு

செல்வோம் சுதேசப் புதல்வர்—நம்
சீர்த்தி பெருகுமிந் நாளே
கொல்பகை குருதிக் கொடியைத்—தாங்கிக்
கோபப் பொருமை குமுற—நம்

எல்லையிலே தொல்லை செய்யும்—அந்த
ஈனப் பதர்களை வீழ்த்தி
ஒல்லையில் ஓம்சுத்த சக்தி—என்ற
உலகம் புகழப் பொலிவோம் (வெற்றி)

பண்டு புகழ்பெறு நாட்டேர்—முன்னே
பாய்ந்தும் பலத்தினைக் காட்டேர்
குண்டுக்குக் குண்டு கொடுப்பீர்—அவர்
குத்துக்குக் குத்து விடுப்பீர்
திண்டிறல் உண்டு நமக்கு—நாம்
திருக்குறளின் வழிவாழ் வோம்
மண்டல மக்கள் எல்லாரும்—இங்கே
வாழ்வாங்கு வாழ்வகை செய்வோம் (வெற்றி)

கூற்றே யெதிர்த்து வரினும்—நாம்
கூடி யெதிர்த்துக் குமைப்போம்
ஆற்ற லுண்டிங்கு மிகவும்—நாம்
அணுகுண்டுப் போரையும் வெல்வோம்
சீற்றங்கொண் டேயிங்கு *தாவும்—வெடி
தீய்ந்து கரிந்து மண்ணுக
மாற்ற மறிந்த புலவர்—உண்டு
மாதவ சக்தி வலவர் (வெற்றி)

வீரன் ஒருவன் விழுந்தால்—நூறு
வீரர் எழுந்துமுன் னிற்பார்
போரிலே சிந்திய ரத்தம்—புகழ்
பொங்க நம்வரலா றெழுதும்
கார்முக ராமனைப் போலே—கீதைக்
கண்ணன்—விசயரைப் போலே
சூரனை வென்ற முருகன்—போலச்
சூழும் அதர்மத்தை வெல்வோம் (வெற்றி)

வேறு

கட்டுக ளைஉடைப் போம்—பகைவர்
காவல்க ளைத்தகர்ப் போம்
மூட்டிடும் டாங்கு களை—நாமும்
முண்டியு டைத்தெறி வோம்

---

* தாவும் வெடி=I. C. B. M.

முற்றுகையை முறிப்போம்—தரை
மூரிவிண் போர்கொடுப் போம்
நெற்றிக்கண் ணன்அருள் வான்—வீர
நெருப்பை வளர்த் திடுவோம்	(வெற்றி)

வென்றுயிர் கொண்டு வரின்—வெற்றி
வீர நடம் புரிவோம்
கொன்றுயிர் மாய்ந்து விடின்—எங்கள்
கொற்றம் கவிதை பெறும்
பொன்றும் உடல் கொடுத்தே—என்றும்
பொன்றுப் புகழ் பெறுவோம்
சென்று புதுப் பிறவி— சேரத்
தேசத் தொண்டிற் குறுவோம்—ஓம்	(வெற்றி)

வேறு

நமதுநாடு நமதுவீடு நமதுசக்தி பாரதம்
குமுதமிட்டு முத்தலைகள் கொஞ்சுகின்ற பாரதம்
இமயந்தொட்டுக் குமரிமட்டும் எழில் குலுங்கும் பாரதம்
அமுதஞான அமைதிகண்ட அமரர் நாடு நம்மதே— (வெற்றி)


உலகுபோற்றும் உண்மைவீரர் ஒளிருகின்ற பாரதம்
பலமிகுந்த ஆத்மசக்தி வளருகின்ற பாரதம்
நலமிகுந்த வேதவாழ்க்கை இலகுகின்ற பாரதம்
நிலவி நீடு வாழி இன்பம் சூழ வைய மெங்குமே.	(வெற்றி)

---

## நிக்சனின் தவறு

"கிழக்குப் பாகித்தானில், பாகித்தான் அரசு செய்த படுகொலைகளுக்கு ஒரு முடிவு காண்பதற்காகவே இந்தியா அங்குப் படைகளை அனுப்ப நேர்ந்தது. எனவே பாகித்தானை இந்தியா தாக்கியதில் பொருளிருக்கிறது. இதனை இந்தியாவின் 'ஆக்ரமிப்பு' என்று திருவாளர் நிக்சன் குற்றம் சாட்டுவது தவறு."

— செனட்டர் மெக்கோவர்ன் (அமெரிக்கக் குடியரசுக் கட்சிப் பெருமகனார்)



# முரசொலி கேளீரோ?

செஞ்சொற்கொண்டல்
திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ.

அ. வ. த. கல்லூரி,
மன்னம்பந்தல், மாயூரம்.

**போ**ர்முரசு கொட்டிப் புறப்பட்டாள் இந்தியத்தாய்!
புறமுதுகு காட்டி யகப்பட்டார் மாற்றார்கள்!
**சீ**ர்முரசு கொட்டிச் சீறினாள் செந்தமிழ்த்தாய்!
செருக்கழிந்து மறந்தொலைந்தார் சிறுமைநரிக் கூட்டத்தார்!

**பண்**பாடு வழுவாப் பாரதத்தார் தமையிகழ்ந்து
பாதை வழுவநின்ற பாதகர்கள் தாம்தொலையக்
**கண்**போல் மறவர் கருத்தொன்றிப் போரிட்டார்;
காவல் நெறிபோற்றிக் களித்ததிந்தப் பெருநாடே!

**பது**ங்கு குழிநின்றும் படைக்காவல் நிலையமைத்தும்
பாதகர் குடில்தோறும் பாய்ந்தழித்தும் நம்மறவர்
**பிது**ங்கு விழியோடே பிணமாக்கிக் கடன்முடித்தார்!
பேசாப் பெருவெற்றி பேசிநிற்கும் நம்நாடே!

**அன்**பு நெறிகாத்த அரியவளம் தாம்படைத்த
ஆதவனும் பாரதத்தை மேகமெலாம் மூடிடுமோ?
**வன்**பு நெறிதொலைத்து வையமெலாம் ஓங்கிடவே
வளர்க்கும் திறமுடைய நமக்கிலையோ பெருமறமே?

**களங்**கள் பலகண்ட காவலர்கள் மேவியதால்
கனலாம் பெருவீரம் சுடர்விட்ட பெருநாடு!
**உளங்**கள் ஒருநெறியில் ஒத்திடவே போரென்றால்
உரத்தோ டெதிர்ந்தவர்கள் உயிர்குடிப்பர் நம்மறவர்!

வேறு

**நா**டு பிடித்தவர் வாடி ஒளிந்திட
நடந்தது கடந்தது நம்படையே!

கேடு பிடித்தவர் ஓடி யொளிந்திடக்
 கிளர்ந்தது வளர்ந்தது நம்படையே !

விண்ணில் பறந்தது மண்ணில் சிறந்தது
 வென்றது கொன்றது நம்படையே !
எண்ணில் வளர்ந்தது ஏட்டில் கிளர்ந்தது
 எத்தனை யோநம் படைநலமே !

ஆறு முகத்தொடு கணபதி யென்றநம்
 ஆற்றல் மறவர் களங்கண்டார் !
சீறு முகத்தொடு செருவிடை யன்னவர்
 திருநட மாடிய திறமறவேம் !

தோளை உயர்த்திய வீரர் குழாமினி
 தூங்குவ தென்பதைத் தானறியார் !
காலை கிளர்ந்திட லாமென வீரம்
 காட்டிய வாகை தனையணிந்தார் !


பாகித் தானியர் தோற்றினி தோடிய
 பாங்கினைப் பாட்டினிற் பாடுவமோ ?
தாகித் தோமெனச் செந்தமிழ்ச் செல்வி
 தனிமுர சறைகுதல் கேளீரோ ?

---

## நீதிக்கும் அநீதிக்குமிடையே நடைபெற்ற போர்

**"இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெற்ற இந்தப் போர் நீதி நேர்மைகளைக் கொண்டதோர் ஒழுங்கு முறைக்கும் படை பலத்திற்கு மிடையே நடைபெற்ற போராகும். மக்களாட்சியைச் சீர் குலைத்து, ஒரு கோடி மக்களை அகதிகளாக்கி இந்திய மண்ணுக்கு விரட்டி விட்ட யாகியாகானின் அடாத செயல்களே இந்தப் போரின் அடிப்படைக் காரணங்களாகும்."**

—இலண்டன் 'சண்டே டெலிகிராப்' தலையங்கக் கருத்து.



# நிறைவெற்றி வாழ்த்துகின்றோம்


காந்தியுகக் கவிஞர்
எஸ். டி. சுந்தரம்
செயலர், தமிழ்நாடு சங்கீத நாடக
சங்கம், சென்னை.


தன்மானம் காத்த போரில்
தம்முயிர் நீத்த வீரர்
பொன்னடி போற்று கின்றோம்
புகழ்முடி சூட்டு கின்றோம்
அன்னவர் குடும்பம் வாழ
அனைத்தையும் செய்வோ மென்று
அன்னைமேல் ஆணை யிட்டு
அரியதோர் சபதம் ஏற்போம்.

சத்தியம் வென்ற திங்கே
சாந்தியில் உலகம் வாழ்க
சுதந்திரம் வென்ற திங்கே
சுயமரி யாதை வாழ்க
இந்தியா வென்ற திங்கே
எம்படை வீரம் வாழ்க
இந்திரா காந்தி வாழ்க
எம்கொடி கொற்றம் வாழ்க !

ஆசிய ஜோதி பெற்ற
அருந்தவச் செல்வி தன்னை
ஏசிய எதிரி பற்றி
எரிந்திடச் செய்த போரில்
தூசெனப் பகைவர் சேனை
துடித்தது சாம்ப லாகப்
பாசமார் வெற்றி கொண்ட
பாரத ரத்னம் வாழ்க.

பாரத ரத்ன மான
    பண்பமை தன்மை வாழ்க
வீரத்தின் தேவி கண்ட
    வித்தக வெற்றி வாழ்க
தீரத்தின் தோள்கள் விம்மத்
    தியாகத்தில் அமர ராகி
நேரத்தில் நாட்டைக் காத்த
    நிகரிலா வீரர் வாழ்க.

சக்திஎம் படைகள் முன்னே
    சாய்ந்தனன் எதிரி இந்நாள்
முக்திக்கு வழியைக் கேட்டு
    மூர்க்கனே மூச்ச டைத்தான்
திக்கெட்டும் முரசு கொட்டத்
    தீயவன் அடிப ணிந்தான்
சத்தியப் படைகொண் டோங்கும்
    ஜயசிங்க நாடு வாழ்க.

வைத்திய னில்லா ஊரில்
    வந்ததோர் கொள்ளை நோய்போல்,
பைத்தியக் காரர் சேர்ந்து
    படத்தினைக் கிழித்த தேபோல்
நித்தமும் படையெ டுத்து
    நிலமக்கள் பலரைக் கொன்றான்
புத்திளம் புயலே யாகிப்
    புகுந்தன நம்ப டைகள்!

புண்ணிய வங்க மக்கள்
    புதியதோர் நாடு பெற்றார்
எண்ணிய எண்ணி யாங்கு
    எய்தினர் எமது நாட்டுத்
திண்ணிய படைகள் தந்த
    தீவிர உதவி பெற்றுக்
கண்ணிய சுதந்தி ரத்தைக்
    கண்டனர் வங்க நாட்டார்.

வேட்டையே ஆட வந்த
    வெறிப்பயல் படைக ளின்று
ஆட்டமே கண்ட தாங்கு
    அரசியற் குரங்குக் கூட்டம்

போட்டதோர் திட்ட மெல்லாம்
பொடிப்பொடி யான தின்று
ஈட்டியில் தைக்கப் பட்ட
இதயமாய்த் துடிக்கின் றார்கள்.

வாட்டுது வாட்டு தந்தோ
வருபகை வீழ்ந்த தின்னாள்
மாட்டிய பகைவர் கூட்டம்
மரணத்தின் பள்ளத் தாக்கில்
கூட்டிய பகைநெ ருப்பைக்
குமுறிய பகைநெய் ஊற்றி
மூட்டிய மடையர் வீழ்ந்து
மூங்கிலைப் போல்எ ரிந்தார்.

எரிகின்ற ஈமக் காட்டில்
எழுகின்ற பழியின் தீயில்
சரிகின்ற பாகித் தானில்
சாய்ந்திட்ட பேய்க ளிந்நாள்
புரிகின்ற நடனங் கண்டு
புகைகின்ற சூட்டில் வெந்து
தெரிகின்ற பகையைத் தீய்க்க
தீரவெம் படைகள் வாழ்க !

வருகின்ற படைவீ ரர்க்கு
வாழ்த்துக்கள் கூறு கின்றோம்
விரிகின்ற பெருமை சேர்ந்த
வீரரின் தியாகச் செல்வம்
தருகின்ற வெற்றி கண்டு
தலையினால் வணங்கு கின்றோம்
நெறிகொன்றார் தம்மை வென்றார்
நிறைவெற்றி வாழ்த்து கின்றோம்.

ஐயகோ நீதி சொல்ல
ஆங்கொரு நல்லோ னில்லை
பையன்கள் சண்டை போலப்
பரவிடும் அந்த நாட்டில்
பொய்யிலே புலமை வல்ல
பூட்டோதான் புத்தி சாலி (இந்தப்)
பையனின் சொல்லைக் கேட்டால்
பாகித்தான் படுநா சந்தான் !

தலைவனே இல்லா வீட்டில்
    தடுமாறும் பிள்ளையைப் போல்
தலைமை யேயில்லா நாட்டில்
    தலைகளே கொழுத்தார் போரில்
கலகலத் தேப யந்து
    கால்முட்டி முறிந்து வீழ்ந்து
வெலவெலத் தேயெ ழுந்து
    மெல்லுயிர்ப் பிச்சை கேட்டான்.

அறிவிலான் ஆட்சி கண்டால்
    அந்நாட்டில் அமைதி ஏது?
நெறியிலான் அமைச்ச னானால்
    நீதியே தந்த நாட்டில்?
வெறிகொண்ட பாகித் தானில்
    வெற்றிக்கு வேலை யில்லை
திறமிலார் இல்லா நாட்டில்
    தீமைக்கு எல்லை யில்லை.

சரிகின்றார் மக்கள் பாவம்
    சதியினில் மடிகின் றார்கள்
சரியில்லை கேட்பா ரில்லை
    சர்வாதி காரி ஆங்குச்
சிரிக்கின்றான் தெரிந்து தீமை
    செய்கின்றான் பாவம் மக்கள்
மரிக்கின்றார் வாய்பே சாத
    மந்தையாய் மாய்கின் றார்கள்.

வாய்பேசா உணர்ச்சி யந்த
    வாக்காளர் உள்ளத் துள்ளே
போய்வீசும் புதிய வெள்ளம்
    புயலெனக் குமுறிப் பொங்கும்
தீய்கின்ற குழம்பு மாகித்
    திக்கெட்டும் திமிறிக் கொட்டிப்
பாய்கின்ற புரட்சி யாகிப்
    பரவுமே போர்ப்பூ கம்பம்.

மண்வெறி கொண்ட நூறு
    மறக்களம் கண்ட துண்டு
நுண்ணெறிப் படைகள் வந்து
    நுழைவதைக் கண்ட துண்டு

கண்ணற்ற பாகித் தானிக்
கள்வரின் படையைப் போலப்
பெண்வெறிப் படையை இந்தப்
பெருநிலம் கண்ட தில்லை.

முற்றுகை யிட்ட நாட்டில்
முதலிலே கொடியை ஏற்றி
வெற்றியை நாட்டு வார்கள்
வெறிகொண்ட இப்ப·யல்கள்
சுற்றியே வளைத்து வங்கச்
சுடர்க்கொடிப் பெண்கள் தம்மை
பற்றியே அழித்து விட்டார்
பயங்கரம்! வெட்கம்! பாவம்!

பாவத்தை விதைத்தான் அன்று
பழிவந்து விளைந்த தின்று
தீவைத்தான் குழந்தைக் கன்று
தீவந்து எரித்த தின்று
சாபத்தைப் பெற்ற பேய்கள்
சவத்தினைத் தின்ற நாய்கள்
ஆபத்து ஆபத்தென்றார்
அயோக்யக் கொள்ளைக் கூட்டம்

தீபத்தை இருட்டே என்றால்
திருடனே அரசன் என்றால்
பாவத்தின் உருவ மான
படுபாவி தலைவன் ஆனால்
கூவத்துச் சவத்தி னுக்குப்
பூவைத்த கதையைப் போல
தீவைத்த கையா வெல்லும்
தீமையா உலகை ஆளும்?

பைத்தியக் காரன் பூட்டோ
பேப்பரைக் கிழித்துப் போட்டான்
சத்தங்கள் போட்டுப் பார்ப்பான்
சட்டையும் கிழிப்பான் நாளை
கெஞ்சினால் மிஞ்சு வார்கள்
மிஞ்சினால் கெஞ்சு வார்கள்
நஞ்சினைச் சோற்றில் வைக்கும்
நயவஞ்சத் துரோகக் கும்பல்

வேறு

அரசியலில் வாழ்பவரே
அமைச்சர்களே ஆள்பவரே !
ஒருசிலவாம் வார்த்தைகளை
உங்களுக்கும் சொல்லுகிறோம்
வருதுயரப் போரெதிர்த்து
வளநாட்டைத் தான்காத்த
தமதுயிரைக் காக்காமல்
தான்மறைந்த வீரர்களின்
பெருவீரத் தியாகத்தை
மறவாதீர் மந்திரிகாள்.
சிறந்த ஜெயசத்தியத்தைச்
சிதையிட்டு அழிக்காதீர்.
மறந்தும் எதிரியிடம்
மானத்தை விற்காதீர்
மறவாதீர் மறுபடியும்
மாநாடு பேசாதீர்
தாட்சண்யம் எனச்சொல்லி
தாஷ்கண்டு செய்யாதீர்
ஆட்சிப் பதவிக்கு
அலிப்பயலை வணங்காதீர்
சூழ்ச்சிக்கு வலைபட்டு
சுயபுத்தி இழக்காதீர்.
வீழ்ச்சிக்கு மறுபடியும்
விதைக்காதீர் வினைவித்தை
பொருளாதாரப் புரட்சி
பெருகிடவே செய்யுங்கள் !
பொதுவுடைய பூங்காவில்
புகழ்மலரச் செய்யுங்கள்
விதியிதனைச் செய்யுங்கள்
வேதனைகள் தீருங்கள்
புதியதொரு சமுதாயம்
பூப்பதுவே இந்நாட்டின்
இதயத்தின் வெற்றியிது
இந்தியா வெற்றியிது ?
பதமுயர்ந்த பாரதியின்
பைங்கவிதைக் கட்டளையாம்!



# சுதந்திர வங்கச் சுடர்முகம் பொலிக!

**வல்லம் வேங்கடபதி, எம்.ஏ.,**
தமிழ்த்துணைப் பேராசிரியர்
பச்சையப்பன் ஆடவர் கல்லூரி,
காஞ்சிபுரம்.

உரிமையைப் பறித்தும் மக்கள்
    உயிரினை முறித்தும் நெஞ்சில்
எரியினை வளர்த்தும் நாட்டை
    ஏழைமைப் படுத்தும் ஆட்சி
சரியென ஒப்பி னால்தான்
    சரித்திரம் தொடரு மென்னும்
நரிமன யாகி யாவை
    நல்வங்கம் பொறுப்ப துண்டோ?

சுட்டெமை வீழ்த்தி னாலும்
    சுகங்களைப் பொசுக்கி னாலும்
வெட்டியே கூறு கூறாய்
    வெங்கழுகுக் கிரையிட் டாலும்
இட்டமாம் சுதந்தி ரத்தை
    இழக்கவே மாட்டோ மென்றே
கொட்டினர் முரசம்! ஆங்கே
    கொதித்தது வங்க ரத்தம்!

பிள்ளையைத் தாயே தின்னும்
    பேயமையை அறமாய்ப் பேணும்
நொள்ளையன் ஆளும் மண்ணில்
    நோவொடு சாவும் சேர்ந்தே
வெள்ளமாய்ப் பாய்வ தல்லால்
    வேறெது நடக்கும்? அந்தோ
கள்வெறி யாகி யாகான்
    கலக்கினன் கிழக்கு வங்கம்!

கொடியவன் ஏவி விட்ட
கொள்ளை நாய்ப் படைக்கூட் டத்தின்
அடிஉதை கொலைக ளெல்லாம்
ஆற்ருெணு ஏழை மக்கள்
நடந்தனர் பார தத்துள்
'நல்லநாள்' வருமென் றெண்ணி!
இடமவர்க் கீந்தே அன்னை
இனியநல் தருமம் காத்தாள்!

இத்தனை புரட்சிக் கிங்கே
இந்தியா பொறுப்பா மென்றே
புத்தியை அடகு வைத்தே
புகன்றனன் யாகி யாகான்!
சொத்தையாம் இராணு வத்தைச்
சுவரென எல்லை யெங்கும்
வைத்தனன் நிறுத்தி! வீணில்
வழக்காடிப் பார்ப்போ மென்றே!

எல்லையில் பாகித் தான
எலிகளின் வாலாட் டத்தை
ஒல்லையில் விரைந்து தாக்கி
ஒடித்தவர் முதுகெ லும்பைக்
கொல்லையில் குப்பை யாகக்
கொட்டிய நமது வீரர்
வெல்வினைத் திறத்தை எண்ணி
வியந்திடும் உலகு கண்டோம்!

முப்படை மறவர் போரின்
முனையினில் முழுமூச் சாக
எப்படை எப்பக் கத்தில்
எதிர்த்துமே சூழ்ந்திட் டாலும்
அப்படை சாகச் சாக
ஆற்றிய சாக சங்கள்
எப்படி அடுக்கிச் சொல்வேன்?
எச்சொலகொண் டுரைக்க வல்லேன்?

'தாக்குவோம் தாக்கித் தாக்கித்
தகர்ந்திடச் செய்வோம்! உம்மைப்
போக்குவோம்' என்றே பூட்டோ,
புகன்றவாய் வீர மெல்லாம்

தாக்கிய நமது வீரர்
 தாக்கினில் தொடைந டுங்கி
தூக்கியே இருக ரத்தைத்
 துதித்ததும் நகைப்பே யன்றோ ?

புறங்கொடா ஆண்மை யாளர்
 புலிநிகர் ஆற்ற லாளர்
பிறந்தபொன் நாட்டைத் தாக்கிப்
 பிழைசெய்த பாகித் தானச்
சிறியரைச் சாடிச் சாடிச்
 சிங்கங்கள் நாங்க ளென்றே
சிறந்தனர் வாகை சூடிச்
 செகமெலாம் வாழ்த்தக் கூடி !

புதுமையில் புதுமை யான
 புரட்சியை வரலாற் றேடோ
இதுவரை கண்ட தில்லை
 இனிஇதோக் காணச் செய்தோம் !
விதியினை மாற்றி வைத்தோம்
 விரிநீரைத் துடைத்து விட்டோம் !
சுதந்திரக் கிழக்கு வங்கச்
 சுடர்முகம் பொலிக என்றே !

---

## கிழக்கும் மேற்கும்

மேற்குப் பாகித்தானியர் உண்பது கோதுமை; கிழக்கு வங்க மக்கள் உண்பது அரிசி; மேற்கே பேசப்படும் மொழி உருது; கிழக்கே பேசப்படுவது வங்காள மொழி; மேற்குப் பாகித்தானியர் சர்வாணி, குழாய்கள் அணிவர்; கிழக்கு வங்க மக்கள் மேற்கு வங்க மக்களைப் போல் வேட்டியும் சிப்பாவும் அணிவர்; கிழக்கு வங்கப் பெண்கள் பெரும்பாலோர் புடைவை உடுத்துவர், சிற்றூரில் வாழ்வோர் இரவிக்கை அணிய மாட்டார்.

# நாடு காக்கும் நல்லமைச்சர்கள்



இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சா
மாண்புமிகு ஜகஜீவன்ராம்



இந்திய வெளிநாட்டுத் துறை அமைச்சர்
மாண்புமிகு சுவரண்சிங்



இந்திய ருசிய அமைதி உடன்படிக்கையில்
9—8—1971 இல்
இருநாட்டு வெளிநாட்டுத்துறை அமைச்சர்களும்
ஒப்பமிடல்





பாக். படையெடுப்பை எதிர்த்துத் தமிழகத்
தலைநகரில் அணிவகுத்துச் சென்ற மகளிர் பேரணி



காடு மலை மேடுகளைக் கடந்து முன்னேறும் இந்தியத் தரைப்படை மறவர்கள்



விண்ணதிரச் செல்லும் இந்திய வான் படையினர்




வங்காள தேசத்திலுள்ள பாக். சேனைத்தலைவர் நியாசி
சரண் ஆவணத்தில் ஒப்பமிடுதல்



திருமதி தயாளு கருணாநிதி அம்மையார் திரட்டிய நன்கொடைகளைத்
தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி தில்லியில்
இந்தியத்தலைமையமைச்சர் இந்திரா அம்மையாரிடம் ஒப்புவித்தல்

# புதுக்கினர் எமனுக்கு வாய்

"கவிஞர்கோ"
கோவை. இளஞ்சேரன்
நாகைத் தமிழ்ச்சங்கம், நாகை.



"அன்பெனில் உனக்குநான் ஆள் ஆள் ஆள்—அதை
அடுபகை எனிற்கடுந் தேள் தேள் தேள்;
வன்பெனில் வந்துபார் தூள் தூள் தூள்—வசை
வாலதைச் சுருட்டிநீ மீள் மீள் மீள்;
பண்பெனில் உனக்குநான் கேள் கேள் கேள்;—அறப்
பண்புடை உலகமே கேள் கேள் கேள்"
என்பதே இந்தியச் சூள் சூள் சூள்—உடன்
றெழுந்தன வெற்றிகொள் தோள் தோள் தோள்.

"என்னருங் காளையே பாய் பாய் பாய்!—எழும்
எதிரியாம் புல்லரை மேய் மேய் மேய்!
மண்ணிலும் விண்ணிலும் தேய் தேய் தேய்!—மடை
மறிகடல் தன்னிலும் சாய் சாய் சாய்"
என்றனள் இந்திரா தாய் தாய் தாய்—உடன்
எழுந்தனர் இந்தியச் சேய் சேய் சேய்.
பொன்றினர் பகைவரைப் போய்ப் போய்ப் போய்—புழை
புதுக்கினர் எமனுக்கு வாய் வாய் வாய்.

தாக்கிட எடுத்தனை போர் போர் போர்—தடை
தகர்த்தனர் முப்படை வேர் வேர் வேர்;
மூக்குடை பட்டனை ஓர் ஓர் ஓர்—முடை
மூளிக்குப் பின்னுண்டோ ஏர் ஏர் ஏர் ?
ஆக்கினர் தனிவங்கச் சீர் சீர் சீர்—அரும்
வங்கத் திழப்பினல் பார் பார் பார்,
பாக்கித் தானமுன் பேர் பேர் பேர்—குறை
*பாக்கித் தானமே தேர் தேர் தேர்.

---

*பாக்கித்தானம் - பாக்கிப்பட்ட இடம்

எடுபடை யின்றியே நாம் நாம் நாம்—முன்
இசைத்தனம் விடுதலைத் தீம் தோம் தீம்;
விடுபடை கொண்டொரு தேம் தேம் தேம்—நறும்
விடுதலை வங்கம தாம் ஆம் ஆம்
படிதுணை நின்றனம் யாம் யாம் யாம்—பகர்
புகழ்க்கொடி கொண்டனம் ஆம் ஆம் ஆம்.
பொடிபொடி யாய்ப்பகை போம் போம் போம்—புகும்
பொட்டைமி ரட்டல்கள் சாம் சாம் சாம்.

நாட்டிற் கிறப்பவன் ஆண் ஆண் ஆண்;—அவன்
வீட்டிற்கு நாமன்றோ தூண் தூண் தூண்?
கேட்டினை ஓட்டினன் காண் காண் காண்;-அவன்
கூட்டுக்கு நாமன்றோ பூண் பூண் பூண்?
நீட்டுவம் பொன்பொருள் ஊண் ஊண் ஊண்; — அது
நீட்டா தொதுங்குதல் வீண் வீண் வீண்.
நாட்டறம் கூட்டுவோன் ஆண் ஆண் ஆண்; — அது
நமக்கென்ன என்பவன் சாண் சாண் சாண்.


பங்குறும் போரெதும் பேய் பேய் பேய்—பகைப்
பாகித்தான் நமக்கொரு நோய் நோய் நோய்.
கங்குசீ ணமளட்டிக் காய் காய் காய்—இவை
கனவினும் மறந்திடல் தீய் தீய் தீய்!
அங்கொரு இந்திரா யாய் யாய் யாய்—தமிழ்
இங்கொரு கலைஞராம் சேய் சேய் சேய்.
துங்கசோ வியத்தொடு தோய் தோய் தோய்— நலம்
துலங்கிடும் வாழ்த்துவம் தாய் தாய் தாய்.

வந்தவிப் போரிதால் தான் தான் தான்—புது
வங்கம லர்தந்த தேன் தேன் தேன்.
இந்தியப் போர்த்திறம் வான் வான் வான்—புகழ்
இட்டது பாரினில் மேன் மேன் மேல்.
நந்தபக் குளபிரி வேன் ஏன் ஏன்—என
நாட்டினா ஒற்றுமைத் தேன் தேன் தேன்
பைந்தமிழ மேலாணை யான் யான் யான - உடன்
பாரித்தோர் கண்ணீவன் காண் காண் காண்!

———

# புதியதோர் புறநானூறு

கவிஞர் முருகு சுந்தரம், எம். ஏ.,
நகராட்சி உயர்நிலைப்பள்ளி
பெரமனூர், சேலம்.



தந்தையால் பெருமை பெற்றோர்
    தரணியில் உண்டு; பெற்ற
மைந்தரால் பெருமை பெற்ற
    மாந்தரும் பலபேர் உண்டு
தந்தையால் பெருமை பெற்ற
    தையலே! உன்சி றப்பால்
'இந்திரா தந்தை நேரு'
    என்றின்று சொல்ல வைத்தாய்!

இருந்தமிழ்ச் செய்யு ளோசை
    எதுகையால் சிறக்கும்; வந்து
பொருந்திடும் அணியால் பாட்டில்
    புதுப்பொருள் சிறக்கும்; எங்கள்
அருந்துயர் தீர்ப்ப தற்கே
    அருமருந் தாக வின்று
வருந்திரு மகளே! உன்னால்
    வரலாறு சிறந்த தன்றே!

முத்தமிழ் நாட்டில் மூதின்
    முல்லையர் பலபேர் தோன்றிச்
சித்திரச் சொற்கள் பேசும்
    செய்யுளில் வாழு கின்றார்
புத்தரின் நாட்டில் இன்று
    புதியதோர் புறநா னூற்றை
இத்தரை வியந்து போற்ற
    எழுதநீ தொடங்கி விட்டாய்!

அரசியல் அறிவில் நேரு
ஆற்றலில் சர்ச்சில் நெஞ்ச
உரத்தினில் ஸ்டாலின் தூய
உள்ளத்தால் லிங்கன் வெற்றித்
திறத்திஞல் செழியன் போன்ற
திருமதி அவர்க ளெல்லாம்
ஒருத்தராய்த் திரண்டு வந்த
ஊர்வலம் நீயே அன்ரே?

பெண்டென்று நாக்கொ ழுப்பால்
பேசிய பாக்கித் தானக்
குண்டரைக் குனிய வைத்த
கோமதி இந்தக் காந்தி
மண்டலம் உன்றன் ஆட்சி
மாட்சியால் பெரும திப்புக்
கொண்டதைக் கண்டோம் உன்றன்
கொள்கையை வாழ்த்து கின்ரேும்.

---


## இழப்புகள் இங்கும் அங்கும்

14 நாட்கள் நடைபெற்ற இந்தியா - பாகித்தான் போரில் இரு நாட்டிற்கும் ஏற்பட்ட இழப்புக்கள் வருமாறு:

| | பாகித்தான் | இந்தியா |
|---|---|---|
| விண்ஊர்திகள் | 94 | 45 |
| டாங்குகள் | 244 | 73 |
| போர்க் கப்பல்கள் | 4 | 1 |
| நீர் மூழ்கிக் கப்பல்கள் | 2 | இல்லை |
| பீரங்கிப் படகு | 16 | ,, |
| இதரப் படகுகள் | 12 | ,, |

# ‘வங்கநாடு’ தோன்றியதே!

திரு. கோ. வே. பெருமாள்,
எம். ஏ., பி. டி.,
தமிழ் விரிவுரையாளர்,
ம. தி. தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி-4.



தூங்கமிகு நல்லோர்கள் தோன்றியசீர் வட்டாரம்
பங்கமிகு பாகித்தான் பாழ்பிடியுள்—தங்கிடுமோ?
சிங்கம்போல் வீரமக்கள் சீறியபோர் முற்றியதால்
‘வங்கநாடு’ தோன்றியதே வந்து.

வாணிகமே நாடிவந்தோர் வளமான நாடுகண்டார்
பேணியிரு நூருண்டாய் பேதம்பல செய்தாண்டார்
நாணினராய் நமைவிட்டு நனிபோழ்தும் நன்றுசெய்தார்
ஏணிபாகித் தானிந்தியா என்றிரண்டாய் வகைசெய்தார்.

பிரிந்துசென்ற பாகித்தான் பெரும்பகுதி மேற்கினிலே
சரிந்துநின்ற மக்கள்வாழ் தனிப்பகுதி கிழக்கினிலே
பரிவின்றி வேறுபட்ட பாராளும் வழக்கினிலே
உரிமையிலே வேட்கைகொளல் உயர்வியப்போ உலகினிலே

நாடெல்லாம் மக்களாட்சி நானிலத்தில் குடியரசே
வீடெல்லாம் விரும்புகின்ற வீறுமிக்க நல்லரசே
பாடெல்லாம் பட்டாலும் பாகித்தான் பாழரசே
கேடெல்லாம் தாங்கவொணுர் கிளர்ந்திட்டார் கேளரசே.

‘காசுமீரம்’ எமக்கென்றே கனலுரிமை பேசிவந்தார்
தூசுபோல நமைமதித்தே துயரடுக்கு வீசிவந்தார்
மாசுமீறும் போதெல்லாம் மாண்பொறுமை காட்டிவந்தோம்
ஏசுவீர இழுப்பினுலே எழுமானம் மீட்டிவந்தோம்.

வாக்கெடுப்பில் வங்கமக்கள் வாழுரிமை வேண்டுமென்ருர்
நாக்கடுப்பில் யாகியாகான் நரபலிகள் தூண்டிவென்ருன்

சோக்கடுக்கும் வங்கபந்து சேக்முசிபூர் இரகுமானே
தாக்கெடுப்புச் சிறைபிடித்தே தரணிபொரு நிலேவளர்த்தார்

அண்டைவீட்டார் அல்லலுற ஆர்பொறுப்பார் அவனியிலே
சண்டையிட்டால் ஒதுங்கிடலாம் சமர்சதியின் பவனியிலே
கண்டோமா நமைநம்பிக் கணக்கற்ருேர் அகதியென்றே
பண்டுரிமை பாராட்டிப் பாரதத்துள் புகுவரென்றே?

துஞ்சுபுலி இடறிவிட்ட சிதடன்போல் யாகியாகான்
வஞ்சினத்தால் 'இந்தியாமேல் பாகித்தான் போர்' என்ருன்
எஞ்சியநம் பாரதத்தாய் இரும்பொறையை விஞ்சிநின்ருள்
தஞ்சமென்ற 'வங்கதேச'த் தனிவிலங்கைத் தறித்தெறிந்தாள் !!'

உயிர்காப்பான் தோழனென்பார் உற்றபோழ்தில் உருசியர்கள்
மயர்வின்றி உலகமன்றில் மா' வீட்டோ? செய்தனரே
அயர்வின்றி ஐரோப்பிய ஆங்கிலநல் நாட்டினரும்
துயர்போக்கும் நடுநிலேமைத் தூணெனவே நின்றனரே.

தன்னிழல்தான் தன்னேவிட்டே தாவாதே உடனுறைவாம்
இன்ருைமை இயற்றியவர் இன்னலுறல் இயல்முறையாம்
சொன்னதீய யாகியாகான் செயலொழிந்தான் அறமுறையாம்
பின்னனும் போட்டோசார் பட்டறிவுப் படுதுறையாம்.

இறந்தகாலம் மறந்தவராய் ஏற்றறிவு துறப்பாரோ?
பிறந்தபயன் அயர்ந்தவனும் பீடுபூட்டோ பிறங்குவனே?
சிறந்தறிவுச் சிந்தனேயால் எஞ்சியதைக் காப்பாரோ?
கறந்தபசு மடுவறுத்தால் காசினியோர் ஏசாரோ?

பக்கத்து நாட்டினிலே பூட்டோ பாகித்தான் ஆட்சியினே ஏற்ருன்
மிக்கதிறல் பெற்றவர்நம் மறவர் மேலூர்தி இயக்குகின்ற வலவர்
எத்திக்குங் கனூர்மீ காமர் எல்லோரும் விழிதிறந்தே காப்பீர்
கொக்கொக்க வாழ்பாகித் தானியர் கொக்கரிப்பின் பொருளுணர்
வோம்.

வங்கத்து வாழ்மக்கள் வளநாடு விடுதலே கண்டார்
தங்கத்து நிறைபெற்ற தமிழ்மறவர் தறுகண் கொண்டார்
சிங்கத்து நிகரான இந்தியரோ புகழே உண்டார்
துங்கத்து வெற்றியினேச் செல்லுயிரால் முரசு கொண்டார்.

பொறுத்ததினிப் போதும் என்ருர் 'போர்ச்சவாலே' ஏற்று நின்ருர்
வறுத்துபோர் திணிப்பு நொந்தார் 'வங்கநாடு' வென்று தந்தார்
ஒறுத்தலினல் இழந்து நின்ற ஒன்ஞர்மேல் பரிவே ஈந்தார்
'திருத்துகபோர்' ஆணே இட்டார் நீளுலகை அளக்க வைத்தார்.

உலகிலுள்ள அனைத்து நாடும் உறவுகொள ஊக்கு விக்கும்
இலகியுள்ள வாய்மைப் பண்பே எடுத்தவுரு இந்திரா காந்தி
விலகியுள்ள உணரார் விரைந்தே விளங்கியபின் வாழ்த்துவர் நன்றே
அலகில்லா ஆற்றல் பெற்றே அருளாட்சி ஆள்க நின்றே.

வீரமிகு சீக்கியரும் வேட்கைமிகு கேரளரும்
ஈரமிகு கன்னடரும் எழில்தருபஞ் சாபியரும்
காரமிகு ஆந்திரரும் கல்விசால்வங் காளியரும்
சாரமிகு குறிக்கோட்கே சார்கூற்றும் அஞ்சவென்றூர்.

பெற்றதாய் மொழியாலே பேசுமின வட்டாரம்
உற்றவொரு வேற்றுமைபோல் உய்த்துணர வைத்தாலும்
கற்றதிறல் இணைப்பொருமைக் கையகலா இந்தியராய்
ஒற்றுமைக்கே உறைவிடமாய் உயர்ந்திலங்குந் தமிழ்நாடே

தமிழணங்கின் தவப்புதல்வர் தமிழவேள் நம் நுண்கலைஞர்
இமிழ்திரைசூழ் உலகினுக்கே எடுத்துக்காட்(டு) ஆம்முதல்வர்
கமழ்மணம்போல் தமிழ்பரப்பும் கருணாநிதிக் குறிக்கோளர்
அமிழ்தொத்த தீஞ்சொல்லர் அறிஞர்திரு வாழ்வலவர்

மாநிலங்கள் மகிழ்ந்தூக்க மாண்திருஇந் திராகாந்தி
தோணலத்தை வலுவூட்ட தொன்மரபுத் துணை நின்றூர் ;
பாநலத்தால் போர்வெற்றி முரசுமலர் சுப்பையா
நீணிலத்தார் எல்லாரும் நீடுபுகழ் வாழியரே.

---

## முஜுபுர் ரகுமான் உயிர் தப்பிய வகை !

இந்தியா—பாகித்தான் போரில், திசம்பர் 17ஆம் நாள், கிழக்கில் பாகித்தான் படைகள் இந்தியப் படைகளிடம் அடைக்கலம் புகும் நேரத்தில் முஜுபுர் ரகுமானைத் தூக்கி விடும்படி யாகியாகான் ஆட்சியினர் ஆணை பிறப்பித்தனர். ஆனல், யாகியாகான் பதவியினின்று விலகப் போகிறூர் என்ற செய்தியறிந்த ரகுமானிருந்த சிறை அதிகாரி மறைவாக ரகுமானைத் தம் வீட்டிற்குக் கொண்டு சென்று இரண்டு நாள் வைத்திருந்து தூக்குத் தண்டனையினின்று அவரைத் தப்பு வித்தார். இச்செய்தியை அச்சிறை அதிகாரி இலண்டனில் தெரிவித்தார்.



# உலகு கண்டு வியந்தது !

திரு. நாரண. துரைக்கண்ணன்

சென்னை

இந்தியனின் இணையற்ற வீரந் தன்னை
இன்றைக்கு உலகுகண்டு வியந்த தம்மா
முந்தியே நம்வீரர் பலபோர் செய்து
மொய்ம்புடனே வெற்றிகளைத் தேடித் தந்தார்
முந்தையோர் மொய்ம்புக்கு முடிவு முண்டோ
முன்போல விறல்வீரம் விளைத்து நின்றார்
சிந்தித்துப் பார்த்திருந்தால் சிறியர் கூட்டம்
செருமுனையில் சந்திக்கத் துணியா ரன்றே !

அன்றைக்கே கடாரத்தை வென்றி கொண்டோர்
ஆண்மைக்கு இலக்கணமாய் நிமிர்ந்து நின்றார்
பொன்றாத இமயத்தின் பிடரி தன்னில்
புலிக்கொடியை மீன்கொடியைப் பொறித்த மைந்தர்
இன்றைக்கும் நேதாஜி படையி னுக்கும்
ஈடில்லா வங்கத்துப் படைக ளுக்கும்
என்றைக்கும் நினைவிருக்க வெற்றி சேர்த்தார்
எந்தமிழர் தோள்வலிமுன் யாரே நிற்பார் ?

பாக்தொடுத்த போரினிலே புலிபோல் பாய்ந்து
பலமுனையில் பாதகரைப் பதற டித்து
ஏக்குற்றுக் கிடந்திட்ட தங்க வங்க
ஏந்திழையார் துயர்துடைத்து வாழ்வு தந்து
காக்கின்ற கடமைதனைக் கருத்தாய்ச் செய்தார்
கண்ணியத்தில் இவர்க்குநிகர் இவரே அம்மா !
நோக்குநல அரங்கிலெலாம் நமக்கே வெற்றி !
நொடியினிலே நீள்விசும்பில் உயர்ந்து விட்டோம்.

வெற்றிகொண்ட எக்களிப்பில் மயங்க வில்லை
வேதனையை விளைத்திட்ட வன்க ணாளர்
நற்புத்தி பெருவிடினும் சரண டைந்தார்
நன்றியுடன் நாம்அபயம் தந்து விட்டோம்
சொற்சிலம்பம் ஆடுநர்க்குப் பதில்சொ(ல்) லாமல்
சோஷலிஸ தேவிபோர் நிறுத்தி விட்டார்
கற்பனைகள் பலபுனைந்து கதைக்கின் றார்பாக்
காதகர்க்குத் துணைநிற்கும் நிக்சன் இன்னும்.

பாரதத்தாய் பெற்றெடுத்த பண்பு மிக்கார்
படைத்தலைமை யேற்றதனல் பீடு பெற்றோம்
பாரதிர முப்படையும் போர்பு ரிந்து
பகைவர்தமைப் பணியவைத்து வெற்றி கொண்டார்
யாருக்கும் அஞ்சாத இந்திரா காந்தி
இனிதாக வழிகாட்டி ஏற்றம்பெற்றார்
பாரதியார் இன்றிருந்தால் பரணி பாடிப்
பண்புருவாம் பாரதத்தைப் போற்று வாரே ;

---


## இந்தியாவுக்கு இந்திரா தேடித்தந்த பெருமை

"இந்தியாவுக்கு ஏற்பட்ட நெருக்கடியை இந்திய நாட்டில் எந்த மூலையில் இருக்கின்ற இந்தியனும் தாங்கிக்கொள்ள மாட்டான். அவன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவனாயினும் சரி, எந்தச் சாதி சமயங்களைச் சேர்ந்தவனாயினும் சரி, எந்தக் கொள்கை உடையவனாயினும் சரி, அவற்றுக் கெல்லாம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமல், அவற்றை மறந்து நாடு காக்கும் போராட்டத்தில் தன்னை ஒப்படைக்க முன் வருவான் என்பதை இந்தியா இந்த முறையும் காட்டிக்கொண் டிருக்கிறது.

பதினான்கே நாட்களில் போரை வெகு திறமையாக முடித்த பெருமை இந்திரா காந்தியைத் தவிர வேறு யார்க்கும் இல்லை. அத்தகைய பெருமைக்குரிய இடத்திலே இந்திரா காந்தியவர்கள் இந்தியாவைக் கொண்டுபோய் வைத்திருக் கிறார்கள்"

தமிழக முதல்வர் கலைஞர்
டாக்டர். மு கருணாநிதி

(27-12-71 இல் மதுரை வங்கநாட்டு விடுதலை விழாப் பொதுக் கூட்டத்தில் பேசியது.)



# இந்தியா—பாகித்தான் போர் வெற்றி

புலவர் குழந்தை

பவானி.

'என்னருந் தமிழ மக்காள் !
　　யானெனச் செருக்கி வந்தே
இன்னல்செய் பாகித் தானக்
　　கொடியரை எதிர்த்து வீழ்த்தத்
துன்னுக' எனவே அன்னை
　　அழைத்திடும் துயர்ச்சொல் கேட்டும்
இன்னமும் தாழ்ச்சி யேனோ ?
　　எழுமெழும் எழுமின் இன்னே.

'இந்தியத் தாய்க்குற் றுள்ள
　　இடர்களைந் திடுக' என்னச்
செந்தமி ழனைய ழைத்தல்
　　செவிப்புலம் படவு மின்றோ ?
முந்தையோர் வீர வாழ்வை
　　முறையொடு கற்றுத் தேர்ந்த
எந்தமிழ் வீர மக்காள் !
　　எழுகபைந் தும்பை வேய்ந்தே.

வலியமண் ணாசை யாலே
　　வம்புசெய் பாகித் தானர்
ஒலியவிந் தஞ்சி வெந்நிட்
　　டோடவே மேற்கு நோக்கிப்
புலியென விரைவீர் வீரப்
　　புறப்பொருட் டுறைகள் முற்றும்
பலமுறை பயின்று தேர்ந்த
　　பைந்தமி ழிளைஞீ ரின்றே.

புலியொடு கயலும் வில்லும்
 பொறித்திம யத்தில் இந்த
ஒலிகட லுலகம் போற்ற
 ஒண்டமி ழகத்தை யாண்ட
வலிகெழு மூவர் தங்கள்
 வழிவரு தமிழீர்! ஒன்னார்
எலியென வெருவி யோட
 எழுமெழும் எழுமி னின்னே.

வீட்டுக்குள் நச்சுப் பாம்பை
 விட்டுவைப் பதுபோல் நந்தாய்
நாட்டுக்குள் பகைவர் தம்மை
 நம்பிவிட் டிருந்த தேயிக்
கேட்டுக்கே தாம்பா கித்தான்
 கேடரை யொழிக்க இன்றே
வீட்டுக்கோர் தமிழர் வீதம்
 வீறுகொண் டெழுகு வீரே.

ஒருமக னல்ல தில்லாள்
 ஒன்னலர் தம்மை வென்று
வருகென வாள்கை தந்தாள்
 வழிவரு தமிழத் தாய்மீர்!
வெருவியே அப்பா கித்தான்
 வீணர்கள் ஓட வென்று
வருகென வாழ்த்தி யுங்கள்
 மைந்தரை யனுப்பு வீரே.

தம்மினந் தம்ம தத்தைச்
 சார்ந்தவர் தமது நாட்டார்
தம்மையே மக்கட் பண்பு
 தானொரு சிறிது மின்றி
அம்மகோ சுட்டுக் கொல்லும்
 அக்கொடுங் கோல ராட்சி
எம்மவ ரேயில் லாமல்
 செய்திட எழுகு வீரே.

இந்தியத் தாயின் கைகள்
 இரண்டையும் பகைவர் கையில்
தந்தது போலப் பாகித்
 தானென நாட்டைப் பங்கித்

தந்ததால் வந்த திந்தத்
தலைவலி மருந்தி தற்குத்
தந்தபோ லதனை மீட்டுத்
தான்கொளல் ஆகுங் கண்டீர்.

வல்லவர் களத்தில் செல்வ
வளமையர் பணத்தில் வல்ல
சொல்லவர் பேச்சில் நல்லார்
தூயசிக் கனத்தில் கையில்
இல்லவர் உழைப்பில் இவ்வா
றெதிரியை ஒழித்துக் கட்ட
எல்லவ ருந்தாம் தம்மால்
இயலுமா றுதவு வீரே.

அல்லிமீ னாட்சி போல
அரசிய லறிவு மிக்க
எல்லமர்[1] தலைவி யான
இந்திரா காந்தி யின்கீழ்
எல்லரும் ஒன்று கூடி
இந்தியத் தாயு வப்ப
வெல்லுவோம் பாகித் தான
வீணரை நமதே வெற்றி!


செருக்கொடு பகைமேம் பட்ட
தீயவப் பாகித் தானர்
வெருக்கொடு வெந்நிட் டோட
விடுதலை பெற்று வங்கம்
மருக்கொடு மலர வாகை
மலைந்தஇந் தியத்தாய் வெற்றிக்
கருக்கொடு புகழ்மேம் பட்ட
இந்திரா காந்தி வாழ்க!

---

1. எல் அமர் - ஒளி மிக்க, மிக்க புகழ் மேய.

# கொள்கைப் போர்

திரு. எழில்முதல்வன், எம்.ஏ.
தமிழ்த்துணைப் பேராசிரியர்.
மாநிலக் கல்லூரி, சென்னை-5.



வேட்டைக் காடாய் வங்க நாட்டை
வீழ்த்தி விட்டு வெறியுடன்
ஆட்டம் போடும் யாயா கானின்
ஆண வத்தை வீழ்த்தவே
காட்டு வெள்ளம் போல்தி ரண்டு
களத்தை நோக்கிச் செல்லுவோம்
வீட்டுக் கோர்ஆள் சென்று போராம்
வேள்வித் தீயில் மூழ்குவோம்

நாடி ரண்டு போடு கின்ற
நற்போ ரல்ல ஈதுகாண்
கூடு கின்ற தத்து வங்கள்
குயிற்றுங் கொள்கைப் போரிது
வாடும் துன்பம் நீங்கி மக்கள்
வாழ்வு மலர வேண்டுமேல்
ஏடும் நாடும் போற்றும் வண்ணம்
இந்தப் போரில் வெல்லுவோம்.

"பாக்"கின் வீழ்ச்சி ஆதி பத்யம்
பார்க்கும் வீழ்ச்சி ஆகுமே
ஆக்கும் வெற்றி மக்க ளாட்சி
அடையும் வெற்றி ஆகுமே
தூக்கு வாளைக் கையில்; உன்றன்
கொடியை உயர்த்து தோளிலே
தாக்கச் சீறிப் பாயும் வேங்கை
தன்னை வீழ்த்தல் பாவமோ?



# படைமற வாகை

மொழிப் பேரறிஞர், பண்டித
ஞா. தேவநேயன், எம்.ஏ.,
காட்பாடி

என்ன இந்த நாட்டில் அமைதி இன்னும் நிலவ வில்லையோ
பென்னம் பெரிய பிரித்தா னியப் பேர ரசையும் வென்றனம்
பொன்ன கர்நல் வாழ்வு வந்து புகுந்த தென்று மகிழ்ந்தனம்
பின்னர் நம்மிற் பிரிந்த சின்னப் பித்தர்க் கஞ்சிப் பணிவதோ.

இந்தி யாவின் இரும ருங்கும் இருபெ ரும்புண் போலவே
அந்த நாளில் வெறிம தத்தால் ஆன பாக்கித் தானையே
வந்து றாமல் தடுத்த லின்றி வாயி ழந்து விட்டனர்
இந்த நாளிற் கையைக் கொல்ல எழுந்த தேமுள் பெருமரம்.

பூனை போற்சி றுத்த நாட்டுப் பொறியி லாத மூடர்தாம்
யானை போற்பெ ருத்த இந்தி யாவை யேயெ திர்க்கின்றார்
தானை தாவு மக்கள் வலிமைத் தரத்தை யெண்ணிப் பார்த்திலர்
போன மூன்று போரில் தோற்றுப் போன தும்ம றந்தனர்.

அமெரிக் கர்நம் மவருக் குதவி யளித்த லின்றி மழுப்பினும்
அமரிக் கையா யிராது பகைவர்க் கான வுதவி செய்கின்றார்
தமருக் குந்தாய் நாட்டிற் கும்வரி தராது பொருது விலகினர்
எழுனைக் குந்தொ டர்பி லாத ஈரி னங்களை யிணைக்கின்றார்.

மறும னத்தி லின்றி யேழை மாந்தர்க் குற்ற துணைவராய்
உறும னத்த ராய்க்கி ளர்ந்தே யுவமை யில்லான் துணைபெறின்
செறும னத்தர் படைதி ரண்டு சீறி வஞ்சினங் கூறினும்
அறுபு னத்திற் கதிர்கள் போல அறுதலைகள் ஆகுவர்.

மானங் கெட்ட வாழ்வு யர்ந்த மக்கள் திணையில் இல்லையே
சீன ருக்குஞ் சோன கர்க்குஞ் சிறிதும் அச்சம் இன்றியே
ஊன ரத்தம் துளியு டம்பில் உள்ள வரையும் பொருமினே
வான வர்பூச் சிந்தி வாழ்த்த வாகை சூடி யாடுவீர்.

வலியப் போர்க்குச் செல்வ தில்லை வந்த போரை விடுவதோ
எலிகள் வெள்ள மேனும் நாகம் இரையின் மாய்ந்து சாய்ந்திடும்
மெலிய ரென்று நம்மைப் பகைவர் மெத்த அவம தித்தனர்
புலிகள் போலப் பாய்ந்து பொருது புகழை யுலகில் நாட்டுவீர்.

கேட்டின் முன்னர்க் கூர்ந்த மதியுங் கெட்டு மழுங்கிப் போகுமே
நீட்ட மாகப் பிரிந்த நாடு நீணி லத்திற் புதுமையே
ஓட்டெ டுத்த பின்னும் இட்ட ஊளை யென்ன பொருளதோ
பூட்டோ திறப்ப தின்றி நாட்டைப் பூட்டி யெங்குப் போகுமோ.

கோடிச் செல்வர் பணத்தை யின்று குன்று போற்கு வித்திடும்
கூடிப் பற்பல் வெள்ள மாகக் குமரர் போரிற் குதித்திடும்
ஓடிச் செய்யும் ஆற்ற லில்லார் ஊன ரத்தம் உதவுவீர்
பேடிக் *கியாசு டின்கி ளைஞர் பேரை வேர றுத்திடும்.

எத்த னைநாள் இருப்பி னும்நாம் இறப்ப துண்மை திண்ணமே
நத்தம் போலக் கேடும் உண்டாம் நல்ல சாக்கா டும்இன்றே
முத்த மிம்மூ வேந்தர் முன்னம் முனைந்து நாவல் காத்தனர்
அத்த கப்போர் முரச றைந்தே யமர்வென் றடலை யாடுவோம்.

---

* கியாசுடின் - Chiyazuddin [*1341 - 4* மதுரையில் சுலுத் தானக (Sultan) விருந்து மாபெருங் கொடுமைகள் செய்தவன்].

---

## உலகிலேயே ஆற்றல் மிக்க பெண்மணி

**'ஆசியா கண்டத்தின் தெற்கே ஒரு பகுதி போர்க்களமாகக் காரணமாயிருந்தது பாகித்தானே யன்றி இந்தியாவன்று. பாகித்தான் தளபதிகளின் பேச்சைக்கேட்டு அவர்கட்கு உதவ முன்வந்த அரசுகள் தாம் இப்போருக்குக் காரணம் எனலாம். இந்திரா காந்தி உலகிலேயே ஆற்றல் பெற்ற ஒரு பெண்மணியாவார்."**

**—இலண்டன் 'டெய்லி மிர்ரர்' என்னும் இதழ் வெளியிட்ட கருத்துக்கள்.**



# வாய்மைக்கே வெற்றி

நெல்லை க. சுப்பிரமணியம், எம்.ஏ.,
தூய யோவான் கல்லூரி,
பாளையங்கோட்டை.

அடக்கமுடை யாரெல்லாம் அறியா ரல்லர்
அடக்குபவர் அறிவறிந்த பெரியா ரல்லர்
மிடுக்கான மிகச்சிலரின் வாழ்வுக் காக
மிகப்பலரின் வாழ்வுபறி போக லாமா ?
படைக்கலனை நம்பியவர் வங்கம் புக்குப்
பாலகரைப் பாவையரைப் பதறச் செய்தார்
ஒடுக்கப்பட் டொடுங்கியவர் உயிரும் வேண்டார்
உரிமைதருஞ் சிறப்பொன்றே வேண்டும் என்றார்.

குண்டுபட்டு மடிந்தவர்கள் போக ஏனோர்
குற்றுயிராய்க் குடும்பத்தோ டோடி வந்தார்
துண்டுபட்ட நாட்டினரே அதனால் உற்ற
துயர்தீர்க்கத் துணிந்ததுதான் குற்றம் என்று
கண்டுகொண்ட மாற்றார்கள் எல்லை மீறிக்
கால்வைத்தார் பாரதத்தில் வீரர் ஆவார்
பெண்டுகளைப் பிள்ளைகளை மறந்து போரில்
பெரிதுழன்று முரசொலித்துப் பெற்றார் வெற்றி !

அதிகார வெறிமிக்கோர் கொடுங்கோல் தாங்கி
ஆண்டதில்லை நீண்டநாள் என்றார் கற்றோர்
சதிசெய்து சமர்க்களத்தில் குதித்து நிற்குஞ்
சழக்கர்களுக் கொருசிறிதும் உய்வே இல்லை
மிதிபட்டு நசுங்கியவர் சிந்துஞ் செந்நீர்
மேதினியில் உரிமையெனும் பயிரைக் காக்கும் !
கதியிதுவோ என்றழுத மாந்தர் கூடிக்
களிக்கின்றார் வங்காள தேசங் கண்டார் !

அடிப்பவரின் கோலுக்குள் அகப்பட் டோடி
அங்கம்புண் பட்டுவிட்ட அரவம் பல்லால்
கடிப்பதற்கே காலத்தைக் கருதும் என்பர்
கருத்தினிலே ஆள்வோர்கள் இருத்தல் வேண்டும்.
துடிப்புள்ள வீரர்களால் தாக்கப் பட்டுத்
தோல்வியுற்றோர் பழிவாங்கும் இழிபண் போடு
நொடிப்பொழுதில் வஞ்சனைகள் மேற்கொள் கின்றார்
நூலறிந்த தளபதிகள் நுவலு கின்றார்.

வீட்டுக்கு வீடொருவர் வீரர் வேண்டின்
வெல்வதற்குச் செல்களன விரும்பி நோக்கி
நாட்டுக்கு நலம்நாடும் நங்கை மார்கள்
நவிலுமொழி செவியினிக்கும் பாட்டே யாகும்
மூட்டிவிட்ட இருமுறையும் களத்தில் மாற்றார்
முதுகிற்புண் பட்டார்கள் மீண்டும் மூண்டால்
காட்டட்டும் புறமுதுகு கயவர் கூட்டம்!
காணட்டும் வாய்மைக்கே வெற்றி என்று!


---

## திரு. வி. க. வும் பாரதியாரும் இன்றிருந்தால்....?

"பெண்ணின் பெருமை" என்று நூலெழுதித் தாய்க்குலத்தின் பெருமையைக் கூறிய திரு. வி கலியாணசுந்தரனார் இன்று வாழ்ந்திருந்தால் "இந்திராவின் பெருமை" என்ற ஒரு தனி நூலே தந்திருப்பாரே!

"புதுமைப் பெண்"ணைக் கற்பனையில் கண்டு மகிழ்ந்த பாரதியார் இன்று வாழ்ந்திருந்தால் "பாஞ்சாலி சபதம்" போல "இந்திரா சபதம்" என்ற பெயரில் குறுங் காப்பியமொன்றைப் படைத்திருப்பாரே!—'தமிழன்'

'செங்கோல்'



# பாட்டுக்குத் தலைவர்

திரு. இரா. பூங்குன்றன்,
எம். ஏ., எம். லிட்.,
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

தென்றலில் சுகத்தைக் கண்டு
தேனினில் சுவையைக் கண்டு
கன்னலில் இனிப்பைக் கண்டு
காதலில் உலகம் கண்டு
தன்னிலை மறந்து நிற்கும்
தணலெனும் இளமைக் காலம்
முன்னிலைப் படையைக் கண்டு
முழங்கினர் வெற்றி வாழ்க!

அணிந்திடும் நகைகள் செல்வம்
அனைத்தையும் தந்து நாட்டைப்
பிணிந்திடும் கொடுமை நீக்கப்
பிரிந்தவர் ஒன்று சேர்ந்தோம்!
பணிந்திட மாட்டோம் நாங்கள்
பதிலடி கொடுப்போ மென்று
துணிந்திடும் உள்ளம் கொண்டோம்
துரத்தினோம் பகைவர் கூட்டம்!


பங்களா தேசம் இன்று
பாரத நாட்டு வீரர்
தங்களால் உரிமை பெற்றுத்
தரணியில் மலரக் கண்டோம்
பொங்கிடும் களத்தில் இனியும்
பொருதிட எவரால் ஆகும்?
வெங்களம் என்றால் எங்கள்
வீரர்க்கு விளையாட் டென்போம்!

நாற்றிசைப் புகழை எங்கள்
நாட்டவர் பெற்று விட்டார்!
தோற்றவர் நீங்கள் மண்ணில்
தொல்புகழ் உங்கட் கில்லை!
மேற்கினில் பாக்கித் தானம்
மீந்தது மகிழ்வீர் இன்றேல்
காற்றினில் பாக்கித் தானம்
கரைந்திடும் கவனம் வைப்பீர்!

பதினான்கு நாளில் உம்மைப்
பணிந்திடச் செய்தோம் என்ன
சதிநீங்கள் இனிச்செய் தாலும்
சழக்கரே! சாய்ந்து போவீர்!
கதியென்று அமெரிக் காவைக்
கயமைமிகு செஞ்சீ னாவைப்
பதியாதீர் உங்கள் நெஞ்சில்!
பண்புடன் நன்றே வாழ்வீர்!

'வீட்டோ'வால் ருசிய நாடு
வீணரை எதிர்க்க வீர
நாட்டோர்நாம் பகைமு டித்து
நலனுற வெற்றி பெற்றோம்!
பூட்டோ தான் தலைவ ரானான்
புழுதிமண் மேட்டின் மேலே;
பாட்டுக்குத் தலைவ ரானார்
பாரத வீர ரெல்லாம்!

வீரனைப் பாட என்றும்
விரைந்திடும் புலவர் கூட்டம்!
வீரனைப் புகழும் என்றும்
விடுதலை பெற்றோர் கூட்டம்!
வீரனை மணக்க என்றும்
விரும்பிடும் பெண்கள் கூட்டம்!
வீரரே வாழ்க! வீரம்
விளைந்திடும் நிலமே வாழ்க!



# தாயகம் புரந்து வாழ்வோம்

வித்துவான் தி. சு. ஆறுமுகம்
(கவிஞர் சிவதாசன்), திருநெல்வேலி

ஆக்கங் கெட்ட பாக்கிஸ் தானால்
அன்று மின்றும் என்றுமே
அல்லல் மெத்த அல்ல லன்றி
நல்ல தென்ப தில்லையே
நோக்கங் கெட்ட நேயர் தம்மின்
நேரெ திர்த்து வருபகை
நீணி லத்து நல்ல தென்று
நுவலு வாரே அறிஞரும்
தாக்கக் கெட்ட நெஞ்சத் தோடு
தண்டு கொண்டே அந்நியன்
தன்மை யின்றித் தாவிப் பாயின்
தாங்கு மாமோ நம்முளம்
ஊக்கங் கெட்டுப் போகு மோவு
ணர்வு மாங்குத் தூங்குமோ ?
உறங்கு கின்ற வேங்கை யையு
சுப்பி விட்ட தொக்குமே.

நேர்மை யான பாதை நின்று
வோட்டெ டுப்பில் வெற்றியை
நேர்ந்து பெற்ற மக்கள் நாட்டை
யாளும் நீதி யில்லையேல்
சீர்மை யென்ப தாகு மோவ
நீதி யாகு மல்லவோ ?
சீறி வங்க மக்கள் பாய்ந்த
செம்மை மாசும் ஆகுமோ ?
பார்ம திக்க உரிமை வேண்டும்
பாவ மற்ற மக்களைப்

பாவி யாகி யாகான் ஆடு
மாடு போன்று மாயப்பதோ ?
ஊர்ம லங்கத் தீயை மூட்டி
ஓட்டு வாரேல் மாந்தரை
உற்ற டுத்த நாட்டி லேயொ
துங்கி டாதெங் கோடுவார் ?

ஓடி வந்த பேதை கட்குப்
புகலி டம்நா மீந்ததை
ஓர்ந்தி டாது தண்டு கொண்டு
குண்டெ றிந்து பாய்வதோ ?
நாடி வந்து போர்தொ டுக்கும்
நாசக் காரப் பேய்களை
நாமி ணைந்து மாய்ப்ப தன்றி
நாளும் கோளும் பார்ப்பமோ ?
பேடி யென்ற எண்ண மோவிப்
புண்ய பூமி யாள்வது
பெண்சி றுததை யென்ப தெண்ணுப்
பேதை மைக்கு ணத்தரும்
ஆடி மாரு தத்திற் பட்ட
பஞ்செ னப்ப றந்ததை
ஆழி சூழும் பார றிந்து
போற்று தேநம் அம்மையை.

நேரு தந்த வீர மங்கை
இந்தி ரா நம் அன்னையும்
நேரி லாத ராம ஞேடு
முப்ப டைத்த லைவரும்
சீரு யர்ந்த அறிஞர் பாதை
செல்லு கின்ற தம்பியாம்
செம்மல் நற்க லைஞர் என்னும்
சிங்க மோடிந் நாட்டிலே
வீறு கொண்ட நற்ற லைவர்
வேண ருண்டு வீழ்வமோ ?
வெறி பிடித்து யார்வந் தாலும்
வீழ்த்தி வாகை சூடுவோம்
வேறு சிந்தை யின்றிச் செல்வம்
ஆவி யாக்கை போயினும்
வீண ரைவி ரட்டித் தாய
கம்பு ரந்து வாழ்வமே.

———



# உலகத்தில் நம் வெற்றி ஓங்கச் செய்வோம்

ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

செங்கை மாவட்டக் கிளை நூலகம்,
ஆலந்தூர்.

போருக்கு வந்தோரே நீங்கள் எங்கள்
புலிக்கோபம் அறிவீரோ இந்தியர்கள்
யாருக்கு நடுங்கியவர் நாங்கள் இங்கே
யார்குடியைக் கெடுக்கின்றோம் தோல்வி என்று
ஊருக்கு வழிதேடி வந்து விட்டீர்
உமக்கெல்லாம் ஓய்வளித்தல் எமக்கு வேலை
தேருக்குக் கொடிவேண்டும் உரிமை வாழ்வைத்
திருடுகின்ற கயவருக்குக் கொடி எதற்கு?

வெறிகொண்ட விலங்குகளே நீங்கள் இங்கே
வீழ்கின்ற படுகுழியை உலகம் காணும்
நெறிகெட்ட பாதையிலே நின்றி ருக்கும்
நிழல்கூடப் பழிசுமக்கும் உங்கள் கண்ணின்
குறிகெட்டு நெடுங்காலம் ஆன தென்று
கூறுதற்கு வரலாறு காத்தி ருக்கும்!
முறிபட்டுத் தேய்கின்ற வேளை உங்கள்
முகம்பார்த்துக் கழுகுகளும் விலகிப் போகும்!

கோடிக்கை உயர்ந்துவிட்டால் பாரில் எந்தக்
கோபுரமும் சரிந்துவிழும் நீதி மாய்க்கும்
வாடிக்கைக் கொண்டிருப்போர் உலகில் நாளை
வாடிக்கொண் டேயிருப்பார் இதனை இன்று
வேடிக்கை பார்ப்போர்கள் உணர வேண்டும்
வெறுந்தலையர் விரைவாக மாற வேண்டும்
ஓடிக்கை தருகின்ற உறவு காட்டி
உலகத்தில் நம்வெற்றி ஓங்கச் செய்வோம்!

மதயானை மத்தகத்தைப் பிளக்கும் வீரர்
வாழ்கின்ற திருநாடே எங்கள் நாடு
சதியோடு துணிவாக வருவா ராஞல்
சாம்பலிலே அவர்சரிதை கலக்கச் செய்வோம்
எதையேனும் உருமாற்றி இங்கே நம்மை
ஏமாற்றும் எத்தருக்கோர் எச்ச ரிக்கை
மதியாமல் வரம்புகளை மீறு வோர்க்கு
மன்னிப்பே இல்லையென முரச றைவோம்!

கீழ்வங்கப் பசுங்கிளியை மேற்குப்பூனை
கிழித்தெறிந்த வேளையிலே தடுத்த வர்யார்
தாழ்வுற்று வந்தோரை நமது நாட்டில்
தாயாக அணைத்தசெயல் குற்ற முண்டோ
வாழ்வற்ற இளங்கொடிகள் வளர்வ தற்கு
வங்காள தேசத்தை ஏற்றுக் கொண்டோம்
பாழுற்ற அவர்வாழ்வு செழிக்கச் செய்வோம்
படைகோடி வந்தாலும் அஞ்ச மாட்டோம்.

பகையெங்கே பகையெங்கே என்று நாட்டில்
பத்துத்திங்கள் நிறையாத கருவும் கேட்கும்
சுகமெங்கே சுகமெங்கே என்று வீரர்
துளைபட்ட மார்பெல்லாம் தடவிப் பார்ப்பார்
புகழெங்கே புகழெங்கே என்றே எங்கள்
போர்க்களத்தில் பெண்களெலாம் தேடிச் செல்வார்
இகழெங்கே இகழெங்கே என்று பார்க்க
இங்கிருப்போர் யாயாகான் மரபே அல்லர்!

மானமெனும் உயிர்பறிக்க ஒப்புக் கொள்ளும்
மனிதர்களே எம்நாட்டில் பிறக்க வில்லை
ஈனமெனும் செயலெல்லாம் உமக்கே சொந்தம்
இருக்கட்டும் இருக்கட்டும் அறத்தின் முன்னே
ஊனமுடன் வருகின்ருய் மக்கள் போற்றும்
உத்தமராம் ரகிமானை என்ன செய்தாய்
சேனைவரும் சிறைக்கதவை உடைப்ப தற்கே
தெரிந்துகொண்டு விடுதலையை வழங்கு வாயே.

முடுக்காத துப்பாக்கி முனைக ளாவோம்
முத்திரைகள் அணியாத வீர ராவோம்
வெடிக்காத பீரங்கிப் படைக ளாவோம்
விண்மீது பறக்காத ஊர்தி யாவோம்

தொடுக்காத போர்முனைகள் என்றே எண்ணித்
துடித்தபடி ஊர்தோறும் பணிகள் செய்வோம்
ஒடுக்காமல் நமக்கினிமேல் உறக்க மில்லை
உழைப்பாளர் தடந்தோள்கள் ஓய்வ தில்லை.

### வேறு

வங்காள நாடே இன்று
வரலாற்றின் புதிய ஏடே
சண்டாளர் கையில் உன்றன்
சரித்திரம் இருந்த வெல்லாம்
மண்ணோடு போன தென்றே
மாகடல் முழங்கக் கேளாய்
கண்ணான உரிமைத் தேரில்
களிப்புடன் பயணம் செய்வாய்
உனக்கெதிர் நின்றோ ரெல்லாம்
ஓடியே ஒளிந்தார் ; தோல்விக்
கணக்கினைக் குவியச் செய்து
காலனைப் போல நின்றாய்
இணக்கமே இன்றி உன்னை
இதுவரை மிதித்த மாக்கள்
வணக்கமாய் உன்றன் வாசல்
வருகின்ற நாளைக் காண்பாய் !

---

## மூன்று வாக்குறுதிகள்

நான் மக்களுக்கு மூன்று வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தேன். அவற்றை நிறைவேற்றி விட்டேன்.


வங்காள தேஷிலிருந்து அகதிகளாக நம் நாட்டுக்கு வந்த மக்கள், அவர்களது தாயகம் திரும்புவதற்கான நிலையை உருவாக்குவேன் என்று சொன்னேன். அதை நிறைவேற்றி விட்டேன்.

வங்காளதேஷ் விடுதலைக்காக போராடிய முக்திபாகினி படைக்கும், வங்காளதேஷ் மக்களுக்கும் எல்லா வகைகளிலும் உதவி செய்வோம் என்று சொன்னேன். அதையும் நிறைவேற்றி விட்டேன்.

எப்படியும் ஷேக் முஜிபுர் ரகிமான் விடுதலை பெறும்படி செய்வோம் என்று கூறினேன். இப்போது அதுவும் நிறைவேறி விட்டது.

—தலைமை அமைச்சர் இந்திரா காந்தி (10-1-72இல் புது தில்லியில் முஜிபுர் ரகுமானுக்கு வரவேற்பளித்தபோது பேசியது)

# சத்தியமே வெல்லும்



வித்துவான்
**திரு. தி. மு. சங்கரலிங்கம்**
கௌமார மடாலயம், திருவாமாத்தூர்.

வங்கமக்கள் சுதந்தரத்தை ராணுவத்தின்
ஆட்சியினால் மடக்கிக் கொன்றும்
பங்கமுற அட்டூழி யம்புரிந்தும்
பாக்கித்தான் படைப்போர் செய்யத்
துங்கமுடன் ஆர்த்தெழுந்த இந்தியப்போர்
வீரரெல்லாம் துணிந்த தாலே
சிங்கமொத்த பாக்கித்தான் பூனையைப்போற்
சரணாகிச் சேர்ந்த தம்மா.

அன்னியமண் ணாசையின்றி வங்கத்துக்
காதரவை அளிக்க எண்ணி
உன்னிவந்த வங்கமக்கட் கிடமளித்த
இந்தியாவாம் உயர்மண் ணின்மேல்
துன்னியஉட் பகைகொண்டு யாகியா
கான்செயும்போர்த் தொடர்பு கண்டு
நன்னியமத் தொடுநந்தம் பாரதமா
வீரரும்போர் நடத்தி னாரே.

மனிதாபி மானமின்றித் தன்னினமாம்
மக்கள்தமை வன்மை யாலே
அனியாய மாய்க்கொடுமைக் குட்படுத்தும்
பாக்கித்தான் ஆட்சி யோரை
குனியாத மறவீர இந்தியப்போர்
வீரர்கள்தம் குண்டு வீச்சால்
முனிவோடு போர்புரிந்தார்; பாக்கித்தான்
சரணடைந்த முறைமை நன்றே.

பாரதநாத் ருவான இந்திரா
காந்தியுளப் பண்பி ருலே
பாரனைத்தும் பாராட்டும் வண்ணம்எதிர்ப்
படையைவெல்லப் படுத்து றங்கும்
வீரமுறு புலியதனை யிடறிவிட்ட
செயல்போல வீறு கொண்டு
சீரணிசெய் யிந்தியப்போர் வீரர்பாக்
கித்தான்மேற் சீறி வென்றார்.

உலகநா டத்தனைக்கும் இந்தியா
வேண்டுகோள் உரைத்தி ருந்தும்
இலகுறுவல் லரசுபல முரண்செய்ய
உருசியா இணக்கம் காட்டப்
பலமகன்ற வங்கமுயர் சுதந்தரங்கொள்
ளாவாறு பாக்கித் தான்பல்
கலகப்போர் இந்தியா மீதுசெய
எதிர்த்துவெற்றி கண்டோம் நாமே.

பாரதத்தின் பிரதமராம் இந்திரா
காந்திதமிழ்ப் பண்பார் நாட்டின்
சீரவிரும் கலைஞரும்சொல் பரிவுரையைக்
கேட்டுமக்கள் திரண்டொன் ருகிப்
போரகலப் பல்விதத்தும் உதவிசெய்து
வெற்றிபெறப் புதிய வங்கப்
பேரரசு சிறந்தொளிர மக்கள்செய்த
அருந்தொண்டு பெரிது மாதோ.

சத்தியமே வெல்லுமெனும் தன்மையுடன்
எவ்வுயிரும் தன்னே டொப்ப
நத்தருமைப் பண்பாடும் பாரதநாட்
டுத்தலைவர் நண்ண லாலே
யுத்தவெறி யாகியா கான்வங்க
நாட்டிடைத்தீங் குளுற்றித் தோல்வி
இத்தருணத் தெய்திஇந்தி யாவெற்றி
மிக்குயர்தல் ஏற்ற மாமே.

---

# தவங்கலைந்தாள் தாய்

திரு. மின்னூர் சீனிவாசன், எம். ஏ.
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.



தென்குமரி மோனதவம் தான் கலைந்தனள்,—கிழக்குச்
செங்கதிர் முகஞ்சிவந்து தான் எழுந்தனன் !
பொங்குகடல் தோள் புடைத்தெழுந் திசைக்கிருள்—தரும
பூமியிதைச் சுற்றிவந்து வாழ்த்திசைக்கிருள்


பண்ணிசையில் ஏழுபேதம் கண்டதுண்டடா !—இன்று
பாரதத்தில் இதய பேதம் கண்டதில்லை நாம் ;
கண்ணன்வாரி உண்ட திந்த மண்ணையல்லவா !—உயர்
கடமை வீரம் சூழ்ந்த திந்த மண்ணில்அல்லவா !

காவில் கொஞ்சும் கிளிகள் போலும் கன்னியர்களும்—இன்று
கற்பிளக்கும் உளிகளாக மாறிநிற்கிருர் ;
பூவில் தூங்கும் வண்டுகளும் ஆர்ப்பரிக்குமே—வந்த
போரை யெண்ணிப் பூசலிட்டுப் பாட்டிசைக்குமே !

நாடிருந்தால் நாமிருப்போம் சத்தியம் இதே !—தாய்
நாடிழந்தால் நாம்மரிப்போம் சத்தியம் இதே !
கூடுவிட்டுப் பறவைகளே சிறகெடுங்களே—என்று
கூவுகின்ற பாரதவான் குரலைக் கேளடா !

'நித்தம்தவம் செய்த குமரி 'சித்தம் மலர்ந்தாள்,—நம்
நெஞ்சில் வெற்றிக் கனலெழுப்பிச் சங்கம் ஊதிஞள் !
மொய்த்தபகை யிருள்பறக்க இதயம் சீறிஞள் —தாள்
முன்னை வீரம் வாகையாலே இன்னும் மீறிஞள் !

———



# தலையால் வணங்கும் !

புலவர் சி. ஞானமணி
சென்னை.

மண்ணில் இரத்தப் பெருக்கு மலைபோல் பிணத்துக் குவியல்
கண்ணில் கருத்தில் தருமம் களைய நிகழ்ந்த நிகழ்ச்சி
விண்ணில் விழுந்த குரலில் விளைந்த துயரக் கதைகள்
எண்ணில் கொடுமை இறைவா எழுதத் தயங்கும் கைகள் !

துடித்துப் பரத மறவர் துயரம் ஒழிக்க விரும்பி
அடித்து நொறுக்க விரைவாய் அணியாய்த் திரண்டு நடந்து
படித்து வியக்கும் முறையில் பகைவர் முனையை உடைத்து
முடித்துக் கொடுத்துப் பகையை முழுதும் புகழை அடைந்தார்.


சிங்கம் நிகர்த்த வடிவில் சிலிர்த்துச் சினத்தே எழுந்து
வங்கம் புரிந்த மறத்தை வகையாய்க் கொடுத்த எதிர்ப்பைப்
பொங்கி வழிந்த உணர்வைப் புவனம் முழுதும் அறிந்தும்
எங்கும் உலகில் பரிவை எதற்கு மறைத்தார் அறிவாய்.

விதியைத் தலையில் திணித்து விளைவை உணரா மனிதர்
சதியை முறித்து முளையில் சகதிக் குழியில் எறிந்த
கதியை நினைத்து நடுங்கிக் களங்கம் சுமத்த முயன்று
மதியைக் கெடுத்துத் திரியும் மமதை அரசு அழியும் !

இந்தியத் தலைமைச் சிறப்பை இருந்த கரும்புக் குணத்தைப்
பிந்திய மனிதர் புகழப் பெருமை உயர்ந்து வளரச்
சிந்திய இரத்தத் துளிகள் செழித்த உறவை வளர்க்க
முந்திய நமக்கு உலகு முழுதும் தலையால் வணங்கும் !

# தாய்க் குலத்தின் அன்புக் கையில்

நெல்லை. ந. சொக்கலிங்கம்
எம். ஏ.,
குமரகுருபரர் கல்லூரி,
திருவைகுண்டம்.



உரிமைக்குரல் கொடுத்தமுசி பூரை
உறவுக்காய் அழைத்துப்பே சத்தான்
வரச்சொன்ன யாகியாதான் தீய
வழிச் சென்று பழிசெய்தான் பொய்மைக்
குரலுக்கு மதிப்புமிகத் தந்து
கோலோச்சும் யாகியாவின் கொட்டம்
உரலுக்குள் இடிபட்ட பின்னும்
ஓலமிடும் பூட்டோவைக் காணீர்!

அண்டைநாட்டை அடிக்கடிதான் போருக்
கழைப்பதிலே அகமகிழும் பூட்டோ
கண்டபடி திட்டுவதில் கனவுக்
கற்பனையில் போர்நிகழ்த்தும் வீரன்!
கொண்டபல தன்னலத்தின் உச்சிக்
கிளையேறிக் குதித்துவிழும் சூரன்!
மண்டிவரும் இருளைப்போல் நெஞ்சில்
மயக்கமிகக் கொண்டவனே பூட்டோ!

(வேறு)

அடுத்தவரைக் கெடுப்பதனை வழியாய்க் கொண்டே
ஆணவத்தால் அமைதியைத்தான் குலைக்க முந்தும்
படுபாவி வீழ்ந்திடுவான்! சொத்தை எல்லாம்
பறித்திடவே எண்ணியதால் வங்க மக்கள்
அடுபோரைத் துவக்காமல் அமைதிப் போக்கில்
அணிவகுத்தார் அடக்குமுறை தலைதூக் கிற்று!
கொடும்பாவி இவனைவிட இல்லை என்று
கூறிடவே சான்றானன் யாகி யாவே!

குருதியாற்றில் நீந்திவந்த யாகி யாவின்
கொடுமைக்கே அமெரிக்கா தலைய சைத்துச்
சரிசொல்லத் தளர்வின்றித் தோளு யர்த்திச்
சொந்தமண்ணைச் செங்குருதி கொட்டிக் காத்த
உறுதியுடை ஒப்பற்ற மறவர் கூட்டம்
உரம்வாய்ந்த கூட்டமெனச் சான்று காட்டி
திருவியபின் நினைவிழந்த பூட்டோ தூக்க
நிலைமாறு துளறுகிறன் ஐயோ பாவம்!

நாடிழந்து வந்தவர்க்காய் நாமு ழைத்தோம்
நாடோறும் பெருகிவரும் வங்க நாட்டார்
ஓடேந்தி வந்ததனல் இந்த நாட்டில்
உயிர்நாடித் துடிப்பினிலே தேக்கம் கண்டோம்
கூடேந்தும் கிளிபோலத் தொல்லை யுற்ற
கோடிமக்கள் ஓடிவந்து புகுந்தார் தஞ்சம்
சூடேந்தும் குண்டுவீச்சில் மேற்க ரங்கில்
துணிந்ததனல் நாடுகாக்கப் புறப்பட் டோம்நாம்!

எல்லையிலே வாழுகின்ற நம்ம வர்க்கே
இடுக்கண்கள் செய்துவந்த பாகித் தானின்
தொல்லைகளைப் பன்முறைகள் பொறுத்தி ருந்தோம்
தூங்குகின்ற புலியைப்போய் எழுப்பி விட்டுத்
தொல்லைக்குள் துடித்துவீழ்ந்த குருடன் போலத்
தூண்டிலிலே அகப்பட்டுத் தவிக்கின் றாரே!
வல்வழக்குப் பேசுகின்ற பாகித் தானின்
வழக்கிங்கே செல்லாது வாய்மை வெல்லும்!

எண்ணத்தில் தூயவராம் இந்தியர் என்ற
ஏற்றத்தை உலகத்திற் கறிவு றுத்தும்
வண்ணத்தில் வங்கத்து நல்லோர் பட்ட
வகைவகையாம் தொல்லைகளைக் களைந்த நந்தம்
எண்ணத்தைப் புரியாத பெரிய நாட்டார்
ஏவுகின்ற சுடுகணைகள் எல்லாம் இங்கே
மண்ணுக்குள் மக்கிவிடும் சருகாய்ப் போக
மாண்புடைய நம்மறவர் வாகை கொண்டார்.

இந்தியாவின் எல்லைகாக்க மறவர் பல்லோர்
ஏற்றமுடன் புறப்பட்டுச் சென்றார் நாட்டுச்
சொந்தத்தை உயிர்க்காற்றாய்க் கொண்ட வீரர்
சுரண்டுவோரின் முகமூடி கிழிப்ப தற்காய்

முந்தினரே மூச்செல்லாம் நாட்டைக் காக்கும்
முழுப்பணியாய்க் கொண்டதனால் வெற்றி பெற்றார்
அந்தியின்பின் வந்தவிருள் பாகித் தானின்
ஆணவத்தைப் போய்ப்பற்றிக் கொண்ட தையோ.


விடுதலைக்கு முழக்கமிட்ட வங்கப் பூக்கள்
வேதனையில் வெம்பிடுதல் முறையோ கூறீர்
கெடுதலைக்கு வழிவகுத்த பூட்டோ இன்னும்
கொக்கரிக்கும் தவளைபோல் வீரம் பேசிப்
படுதோல்வி தழுவுதற்கே ஆவல் பூண்டான்
பண்பென்றால் பலமென்ன விலையென் னென்பான்
சுடுசொல்லில் குளித்திடுவான் பாகித் தானைச்
சூறையாடப் புறப்பட்ட விந்தை பாரீர்.

பிணக்காட்டில் வாழத்தான் விரும்பு கின்றான்
பிணக்கற்ற புதுவழியைச் சமைத்துக் காட்டும்
இணக்கத்தை அவன்நெஞ்சில் காண வில்லை
எக்காளக் குரல்கொடுத்துப் பத்து நாளில்
பிணமலையின் உச்சியிலே நிற்பேன் என்றான்
பேய்த்தன்மை பிடித்துவிட்ட யாகி யாவின்
கணக்கறிந்தோம் கருணைவழி நின்ற நாமோ
கணக்கறிந்து வெற்றிபெற்றோம் வாய்மை யாலே.

ஏற்றசெயல் முடித்திட்ட இந்தி ராவின்
எண்ணத்தின் தூய்மையினை நினைவிற் கொள்வோம்
போற்றுகின்ற புதுமைகளைச் செய்து காட்டும்
போர்மறவர் திறங்கேட்டு நாட்டைக் காக்கும்
ஆற்றலினை நாம்பெறுவோம் அன்னை நாட்டின்
அருந்தலைமை தாய்க்குலத்தின் அன்புக் கையில்
வீற்றிருக்கும் வெற்றித்தாய் வாழ்த்து கின்றாள்
வெற்றிமுர சொலிகேட்டே அணிவ குப்போம்.

(வேறு)

வெற்றி பெற்ற திந்தியாவே
வீரம் வென்ற திங்கென்போம்
செற்ற பகைவர் வீழ்ந்திட்டார்
சிறுமை செய்தார் புகைந்திட்டார்
பெற்ற வெற்றி மிகப்போற்றுவோம்
பிறந்த நாட்டை நனிபேணுவோம்
பற்றி நின்ற பகையெல்லாம்
பறக்கும் பஞ்சாய் மாறிற்றே.



# மாதங்கி

## கலைவாணன்

காரிருள் ஆழ்அதி காலை எழும்பும்
சூரியன் ஒப்பவெம் மாற்றலர் மார்பச்
சோரி வழிந்திடு சூல முயர்த்திப்
பாரில் நிமிர்ந்தெழு பாரத தேவீ !

பாரினிலே ஜன நாயக சக்தி
வீரியம் ஈதெனும் விந்தை விளங்க
ஓரிய ரைப்பல உட்பகை கூடிப்
போரிடு வெங்களம் புக்க பவானீ !

நல்லா ரினமே நலிவுற் றழிய
வல்லாண்மை யுடன் வதை செய்திடுவார்
எல்லோ ரையும்வாட் கிரையாக் கிவிட
மல்லா டிடும் ஏ ! மாதங் கியளே !

அகம்அஞ் சியதால் அயரும் புதிய
யுகசந் தியிலே யூகித் தறிவு
புகவேண் டியதோர் புதுமைக் கதியைச்
சகமுன் சொலஇங் குறுமா வலியே!

சொந்த நிலத்தினில் வந்து புகுந்தோர்
விந்தையில் மோதி விரட்டிட ஈண்டு
வந்தழு வங்கர்கள் வாழ்வை மலர்த்த
"இந்திரை"யாக எழும்பிய அன்னாய் !

தீக்குண மிக்கவர் ஆக்கினை கேட்டு
தூக்கிய 'ரைபிள்' துடித்து வெடிக்கத்

தாக்கிய ஒன்னலர் தன்னடி யின்கீழ்
நாக்கினை நீட்டி நசுங்கிட வைத்தாய்.

தேக்கிடு பாரத தீரமுன் சாய்ந்து
தூக்கிய போர்க் கொடி தீக்கிரை யாக
"ஆக்கிய கா"வெனு ஆணவ மிக்கப்
பாக்கித் தானியப் பாதகர் வீழ்ந்தார்.

முற்றிட் டபகை முடியத் தனியே
செற்றிட் டுதிரம் சிந்திச் சிதற
வெற்றிக் கொடியைச் சுற்றிச் சுழலப்
பற்றித் திகழும் பரமேஸ் வரியே!

உத்தக் களமீ துறும் பகையைக்
குத்திக் குதறும் கொடுவா ளுடனே
தத்தித் திமிதோ மென ஆடிவரும்
சத்திக் கனலே! சரணம்! சரணம்!

---

## விடுதலை

தத்தம் விடுதலைபற்றி எல்லாரும் கருத்தொன்றுபட்டே யிருக்கிறோம். அது எவ்வளவு கிடைத்தாலும் அவ்வளவு நமக்கு மகிழ்ச்சிதான். ஆனல், பிறருக்கு எவ்வளவு விடுதலை என்பதைத்தான் ஒத்துக்கொள்வது அரிதாயிருக்கிறது. ஏனெனில் நமக்கு எவ்வளவு கூடுதல் கிடைக்கிறதோ அந்த அளவு அது பிறருக்குக் குறைகிறது.

—டாக்டர் ஜான்சன்

பிறர் விடுதலை மறுப்பவர்கள் தாமும் அதற்கு உரியவராக மாட்டார். தெய்வ நேர்மையின் கீழ் அவர்கள் நெடுநாள் அதனை நுகரவும் மாட்டார்.

—ஆபிரகாம் லிங்கன்

தனி மனிதன் உடலுக்கு உடல் நலம் எப்படியோ அப்படியே நாட்டு நலனுக்கு உகந்தது விடுதலை. உடல் நலமின்றி மனிதனல் இன்பங்களை நுகர முடியாது. விடுதலை இன்றி நாட்டு மக்களும் இன்ப வாழ்வினைப் பெற முடியாது.

—பாலிங் புரோக்



# ஓடக்காரத் தோழா !

'சிற்பி'
பாலசுப்பிரமணியம், எம். ஏ.,
என். எம். ஜி. கல்லூரி
பொள்ளாச்சி

ஓடக்காரத் தோழா !—ஓ!
ஓடக்காரத் தோழா !
பத்மா நதியில் படகு செலுத்தும்
ஓடக் காரத் தோழா !

விதியின் அலைகள் நெளிந்து தவிக்க
மேக மண்டலம் கேட்டுச் சிவக்க
உதிர கீதம் ஒலித்துப் பாடும்

ஓடக்காரத் தோழா !—ஓ!
ஓடக்காரத் தோழா !

ஒழுகி வழியும் சந்திர தாரையில்
கிளி மிழற்றிய 'கீதாஞ்சலி' *கள்
நினைந்து பாடினையோ ?

வளரும் 'அக்கினி வீணை'†யில் விம்மி
எழுந்து பொங்கிய நாத சுவாலையின்
நலங்கள் பாடினையோ ?

ஓடக்காரத் தோழா !—ஓ!
ஓடக்காரத் தோழா !

---

* தாகூரின் கீதாஞ்சலி

† புரட்சிக்கவி நஸ்ருல் இஸ்லாமின் முதல் கவிதை நூல் 'அக்னிவீணா.

தரைப் புழுதியில் மருக் கொழுந்துகள்
உருக் குலைந்திட மிதித்த பேய்கள்
கொடுமை பாடினையோ ?

உருக்குத் துணுக்கை அரக்கர் விதைக்கக்
கருக்கரிவாள் பிறப்பெடுத்ததன்
அருமை பாடினையோ ?

ஓடக்காரத் தோழா !—ஓ!
ஓடக்காரத் தோழா !

நம்மிரு நாட்டவர் ரத்தத்தில் வங்கம்
சிந்துர திலகம் தீற்றி எழுந்ததன்
பொற்புகள் பாடினையோ ?

இந்திர வில்லின் கணைகள் பட்டு
அந்த மாமத ஆனை விழுந்ததன்
அற்புதம் பாடினையோ ?

ஓடக்காரத் தோழா !—ஓ!
ஓடக்காரத் தோழா !

---


## கொடுங்கோன்மை நிலைக்காது

**அரசியல் முறை எதுவாயிருந்தாலும் (வல்லாட்சியாளர்) கொடுங்கோன்மையை எதிர்த்து நின்று மக்களைக் காக்க மனித உள்ளத்திலேயே ஓர் இயற்கைப் பண்பு இருக்கிறது.**

**—அறிஞர் ஜான்சன்**

**வேற்றுமையுற்ற குடும்பம் நில்லாது—பாதி அடிமைப் பண்பும், பாதி சுதந்திர மக்களையும் உடைய எந்த அரசாங்கமும் நிலைக்க முடியாது.**

**—ஆபிரகாம் லிங்கன்**



# செந்தமிழில் முரசறைவோம்

வித்துவான் பெ. சுப்பையா
தமிழாசிரியன்,
நகர்மன்ற உயர்நிலைப்பள்ளி,
பேட்டை, திருநெல்வேலி.

சிங்கத்தின் திறல்இளைஞ செந்தமிழின் அடல்மறவ
சிறுநரிகள் வாதுக்குச் செம்மாந்து அழைப்பனபோல்
அங்கத்தில் வரிகள்பல அழகுறவே காட்சிதரும்
ஆண்மைமிகு வேங்கையினை அணுகியொரு கரும்பூனை
மங்கிவிட வம்புக்கு மாண்டொழிய இழுப்பது போல்
வந்ததுகாண் பாகித்தான் வாதுபல புரிந்திடவே
பொங்குணர்ச்சி மேலோங்கப் புகுந்துகளம் பார்க்கின்றார்
பொன்மேனி இந்தியத்தாய் பொடிபடவே விடுவாயோ !

போருக்கு அழைத்திட்டார் புல்லர்களின் கூட்டத்தார்
புறமென்னும் தமிழ்நூலைப் புரட்டிப் படித்தறியார்
பாருக்கு முன்னாளில் பக்கத்தே துணையிருந்த
பண் தலைவன் களம்கண்டு பாடல் பரிசானான்
ஏருடைய தன்தமையன் இதயத்தே முறுவலுடன்
ஏகினான் செருக்களத்தே இறுமாந்தே செருவாற்றி
ஊருக்காய் நாட்டிற்காய் ஒப்பற்ற தன்னுயிரை
உவந்தீந்த வரலாற்றை உணர்ந்திடுவாய் இளந்தமிழா

பைந்தமிழில் மொழிபேசும் பாலகனைப் பார்த்தன்னை
பச்சை மரகதமே ! பளிங்கின் திருவுருவே !
கொந்தலர்தார் மணங்கமழும் கோவின் திருவிளக்கே !
கூடிப் பகைவர்நமைக் கொத்த வருகின்றார்
சொந்தமண் காக்கநீ சுறுசுறுப்பாய்ப் புறப்படுவாய்
சுடரெறிவேல் ஏற்றுக்கொள் சுந்தரா என்றீந்தாள்
நந்தா பணிமகனைப் பூச்சூட்டி உடைபுனைந்து
நல்லாசி கூறியவள் விடுத்தனளே களம்நோக்கி !

அறத்தினை அமைதியினை அன்றேபோல் இன்றுவரை
அனைத்துலக நாடுகளும் வியப்புறவே காத்துவந்தோம்
மறத்தினைச் சூளுரைத்த மாற்றானும் யாகியாகான்
வம்பிழுத்து நம்மிடையே வாலாட்டிப் பார்த்திட்டான்
கறவைப் பசுவினைப்போல் கருணையுடன் காத்திருந்தோம்
கன்னித் தமிழ்வீரா களத்திறங்கு என்றுரைத்தான்
திறலற்ற அன்னவர்க்குத் தெரிவித்தோம் வீரப்பண்
சீரான நடைபோட்டுச் செப்பிடுவாய் உன்சீர்த்தி!

துள்ளி எழுந்திடுக! துன்பத்தை அகற்றிடுக!
துஞ்சாது வாள்வீசி துளைத்திடுக பகைமேனி
கள்ளத் தனமுடைய கயவர்களின் கொட்டமதைக்
கலங்காமல் ஒழித்துவிடு காலடிகள் பதியாமல்
வெள்ளக் குருதியினில் விளையாடும் வீரனைப்போல்
வீணர்களைப் பந்தைப்போல் மேலோங்க எறிந்துவிடு
உள்ளபடி இந்தியர்க்கு உறுவீரம் உண்டென்று
உரைத்த பிரதமரின் உரையமுதைச் செவிமடுத்தோம்.

வன்மை எழுத்துக்கள் வண்டமிழ் மொழிக்குண்டு
வாள்மறவர் நெஞ்சமதில் வயிரம்போல் உரமுண்டு
வன்கண் பகைவர்களை வாரிவிடும் திறமுண்டு
மாற்றாரின் நாட்டையொரு மணல்வீடாய் ஆக்கிவிடு
பொன்வண்ணக் கதிரவனும் புறப்பட்டு வரும்போது
புள்ளினங்கள் சிறகார்த்து வெளியேறும் புத்தொளிபோல்
வன்போர் எனக்கேட்டால் திண்தோள் துடித்தார்த்து
வானூர்திப் படைகொண்டு வாள்வீரர் புறப்படுவார்.

தன்னுடல்மேல் குண்டுகளைத் தாங்கிநின்ற போர்வீரன்
சரிந்துவீழ் தன்கையைத் தானோரா தலைநின்ற
இன்னுமொரு கையுண்டு எதிரிகளைத் துகளாக்க
என்றெண்ணி மறுகரத்தால் எறிகுண்டு வீசிவிட
துன்னிவரு செருநர்களின் சுழல்வான ஊர்தியினைத்
துண்டாக்கிச் சாய்ந்தமகன் சுடரொளியாம் ஆறுமுகம்
மன்னுபுகழ் வீரநிலை மண்பதைக்குச் சான்றானான்
மங்காத வரலாற்றை மாணவர்கள் பெறல்வேண்டும்.

இந்தியப் பேரரசின் எழிலார்ந்த செல்வியவள்
இணையில்லா நேருமகள் இந்திரா தேவியன்னை
வந்தெதிரும் தெவ்வினரை வன்மையுடன் போராற்ற
வகையாக அறிவுரையை மறத்தோடு வழங்கினர்காண்!


முந்திவந்த பகைக்கலங்கள் வானமூரும் ஊர்திகளை
முறியடிக்க மெய்வலியார் மொய்ம்புடனே திரண்டார்க்க
சிந்தைமகிழ் அன்புமொழி தினந்தோறும் செப்பிவரும்
சேயிழையாள் செயல்வீரம் சிந்தையினில் தேக்கிடுவோம்.

நிலையான செயல்வீரர் நேர்மைக்கு உருவானார்
நீதியுடன் தமிழாட்சி நிகழ்த்தும் கலைஞரவர்
கலையமுதாம் செந்தமிழின் செல்விக் குழந்தையினைக்
கரத்தேந்திச் செஞ்சொல் கவிதை புனைந்திடுவார்
மலைக்காத தமிழருக்காய் வாழ்வுயர உரமூட்டி
மறுகுதொறும் போர்முரசை வாய்முரசாய் ஒலிசெய்யும்
தலைமை முதலமைச்சர் தங்கமணிக் குணக்குன்றும்
தகும்கருணா நிதியுரையைச் சார்ந்துபணி புரிவோமே!

ஊருறங்கு நேரத்திலும் உள்ளம் உறங்காமல்
உண்ணுகின்ற போதினிலும் உள்ளுவரே நாட்டியல்பை
சீருறவே செயலாற்றும் செம்மல் முதலமைச்சர்
செந்தமிழில் வீரவுரை செப்பிடுவார் திறனோடு
வருகின்ற பகைநாட்டார் வழியின்றி ஓடுதற்கு
வகையாக ஊக்கமுடன் வாரிப் பொருள்குவிக்கும்
உருவெடுத்த ஒண்டமிழர் கருணா நிதியாரின்
ஒப்பற்ற சேவையினை உளமேற்போம் உதவிடுவோம்!

நீலகிரி பெற்றெடுத்த நெடுந்தோள் வலிவீரன்
நேரகவை இருபத்து நிறைந்த இளங்காளை
சாலப் பெயருடைய கணபதி யெனுந்தீரன்
சார்ந்தபகை வானூர்தி தனைச்சுட்டு வீழ்த்தியிசை
கோலமுடன் தமிழ்வீரம் குறித்தனனே வரலாற்றில்
கொள்கைவிடாச் செல்வனவன் குமரன் எழிலிளைஞன்
சீலப் புகழ்பாடி அவன்வீரம் நாம்பாடி
சிந்தை மிகமகிழ்ந்தே செந்தமிழில் முரசறைவோம்.

தென்பாண்டி நாட்டவராம் திருநெல்வேலிச் சீமையராம்
திருக்கோவில் பட்டியைச்சேர் திகழ்கடலை யூரதனில்
நன்மைதரு நல்முத்தாய் நாடுகாக்கத் தோன்றியவன்
நனிமுத்து வேலென்ற தமிழ்மகனும் கணபதியும்
வன்மைவெங் கொடுபோரில் வாகைபெற் றுயிரீந்தான்
மறுகுசேர் கடைசல்குளம் மாண்புறவே ஈன்றளித்த
பொன்மகனும் பெருமாளும் போருக் கெனவெழுந்தான்
புகழுடம் பெய்திநமைப் பூரிக்கச் செய்தனரே.



# இணையிலா வெற்றி

திரு. மு. பி. பாலசுப்பிரமணியம்
எம். ஏ.,
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
பச்சையப்பன் ஆடவர் கல்லூரி,
காஞ்சிபுரம்.

இந்திய மண்ணைக் கவர்ந்திட வந்த
இழிகுண யாயா தோற்றான்—பகை
சிந்திய இரத்தமும் இந்திய மண்ணில்
சிவப்புடன் தோன்றுது பாரீர்!

இந்திரா முயற்சிக்(கு) ஆதரவு ஈந்து
எல்லோரும் ஓரணி நின்றார்—நம்
பைந்தமிழ் நாட்டு முதல்வர் கலைஞர்
பார்வெற்றி நமதென மொழிந்தார்!

வானொலி மூலம் முழங்கினார் கலைஞர்
வரிப்புலி யானார் தமிழர்—தம்
ஊனோ(டு) உயிரையும் நாட்டுக்கே ஈந்திட
ஒவ்வொருவ ரும்தயார் ஆனார்!

இந்திரா காந்தியின் போர்க்குரல் கேட்டார்
இந்திய முப்படை வீரர்—நரித்
தந்திரங் கொண்டோரைப் போரினில் வென்று
தனியான தேசம் அமைத்தார்!

பாரினில் வங்காள தேச விடுதலை
பாரதம் முன்வந்து காக்க—யாயா
சீரிலாக் கொள்கையைச் சிந்தையில் கொண்டதால்
சீக்கிரமே தோல்வி கண்டான்!

கோணல் வழியிலே யாயாகான் சென்றதால்
    கோசிசின் கூட வெறுத்தார்—அக்
கூனல் மதியினன் இட்லரைப் போலக்
    குவலயம் தூற்ற ஒழிந்தான் !

தானகப் போரைத் தொடங்கிய 'யாயா'
    தன்மானம் கெட்டுத் தொலைந்தான் — பாவம்
வீணை தொல்லையில் மாட்டிய தால்இன்று
    வெற்றி இழந்தே அழிந்தான் !

இணையிலா வெற்றி இந்திரா பெற்றார்
    எதிரிகள் மூக்குடை பட்டார்—பக்கத்
துணையென ஐ. நா. வில் பேசிய ரஷ்யர்
    தூயநல் வாழ்த்தினைப் பெற்றார் !

வங்கக் கடலிலே கப்பல் 'படை'யுடன்
    வந்தவர் ஏமாந்து போனார்—பலர்
அங்கம் இழப்பினும் வங்காள தேசம்
    அமைத்தவர் நண்பராய் ஆனார் !

---

## தேர்தல் முறை மக்களாட்சி


மக்களாட்சி என்பதற்குப் பலவகையில் பொருள் கூறுவார்கள். நம் நாட்டிற்கு நாம் வரித்துள்ளது தேர்தல் முறை மக்களாட்சியாகும். ஏன் இந்த முறையைத் தேர்ந்தெடுத்தோம்? நாளடைவில் இந்த முறையாலேயே நன்மை விளையும் என்ற காரணத்தால்தான். நாட்டின் நலன், கோடிக் கணக்கான மக்களின் இன்பம் - இவை விளையவேண்டும் என்றுதான் இந்த முறையை ஏற்று நடத்துகின்றோம்.

பண்டித சவகர்லால் நேரு

(21-12-54இல் மக்கள் மன்றத்தில் பேசியது).

# கொட்டு பேரிகை

கவியரசு புலவர்
கு. நடேச கவுண்டர்
கோயமுத்தூர்.



வெற்றி வெற்றி வெற்றி என்று கொட்டு பேரிகை—தர்ம
வீர பார தத்து வீர கொட்டு பேரிகை
பெற்றி யற்ற பாகி தானி கொட்ட மாளவே—அவன்
பேணு பூமி மீதிலேறி கழ்த்து போரிலே (வெற்றி)

பாகி தானி யாகி யாவி வேகி யாகிலான்—கடை
பட்ட புட்டொ என்ற துட்டன் உட் கொதித்து மேல்
ஊகி யாது பார தத்தின் மீதெ டுத்த போர்ப்—படை
உற்ற பாடு கெட்ட கேடு திக்கெ லாஞ்சொல (வெற்றி)

தங்கள் பங்கி ருந்த பங்க ளாவி லேகுடி—எனத்
தங்கி னோர்சு தந்தி ரத்தை யுந்தொ லைக்கவே
வெங்கண் யாகி யானி ழைத்த துன்பி னால்உளம்—மிக
வெந்து வந்த கோடி பேரை யும்பு ரந்தனம் (வெற்றி)

காஜி நாச மாகி வாரி நீர்பு குந்ததே—பல
கப்பல் சுக்கல் சுக்க லாகி யேயொ ழிந்தவே
தூசி தூசி யாகி நங்கள் குண்டு பட்டதால்—சில
துறைமு கங்கள் மறைமு கங்க ளாய்மறைந்தவே
(வெற்றி)

உக்கி ரன்சி ரிக்க உக்க அக்கி னிக்கிறை—யான
ஊர்கள் மூன்று போல பாகி தானி யார் வீடும்
பொக்க வான வூர்தி என்ப துக்கு மேல்நமர்
போடு குண்டி லேபொடிந்த சேதி பாடியே (வெற்றி)

[1]டாங்கி மந்தை ஓட்டு கின்ற [2]டோபி மார் கொலோ—பாகித்
தானி வீர ரோடி ரண்டு நூறு டாங்கிகள்
ஓங்கு போரி லேமு டங்க ஏங்கி ஓடினர்—கையில்
உற்ற போர்ப்ப டைக்க லங்கள் விட்டெ றிந்தரோ
(வெற்றி)

எலிப்ப கைச்செ ருக்கி னலெ திர்த்து நிற்குமோ—புற்
றிருந்த பாம்பு யிர்ப்ப அஞ்சி ஓடி மாயுமே
கெலிக்க வந்த பாகி தானி போர்த்த ரைப்படை-மாய்ந்து
கெட்ட கேடு ரைத்து நாடெ லாஞ்சி ரிக்கவே (வெற்றி)

துஞ்சு கின்ற புலியின் மீது வீழ்ந்து கண்ணிலான்—உயிர்
துஞ்சு சேதி போல பாகி தானி வீரர்கள்
துஞ்சி னேரை யன்றி யோரி லக்கர் அஞ்சியே—படை
சோர விட் டடைக்க லம்புகுந்த துஞ்சொலி (வெற்றி)

சாதி யாதி பேத மேதும் இன்றி நீதியே—செயும்
தர்ம பார தத்தின் மீது வர்ம மாகியே
சாதி மோது பாகி தானி கல்லின் மோதிய—குயக்
கலமு டைந்த வாறு போல பலமு டைந்த னன்
(வெற்றி)

இன்று வென்றி வந்த தென் றசந்தி ருந்திடோம்—பகை
என்ன சூழ்வன் என்ன முன்ன மேய றிந்துளோம்
ஒன்று கூடி யாம்வி ழிப்பு டன்னிருந்து நம்—ஜெய
இந்தி ராவி னுக்க ணுக்க ராகி வாழுவோம் (வெற்றி)

வீட ணற்கி லங்கை நாடி ராம னீந்தவா—தானும்
வென்ற நாடு பங்க ளாவி னர்க்க ளித்தலால்
ஈடி லாத போரின் வீரம் ஈகை வீரமும்—பெற்ற
இந்தி ராவின் ஆட்சி வாழ்க என்று பாடியே (வெற்றி)


இந்த வெற்றி தந்த வீரர் யாரும் வாழ்கவே—போரில்
ஏகி யாவி ஈந்த வீரர் கீர்த்தி வாழ்கவே
உந்து முப்ப டைக்கும் நற்க ணுன மூன்றுபேர்—புகழ்
ஓங்கு தானை அதிபர் நீடு வாழ்க வாழ்கவே.

———

1. டாங்கி - கழுதை. 2. டோபி - வண்ணான்.

# வங்க வாகை

பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆசிரியர் : தென்மொழி,
தமிழ்ச்சிட்டு, கடலூர்.



**களக்காட்சி :**

நுனிவளைந்த கூருகிர்வாய் நெடுங்கழுத்து
நுண்ணேக்குக் கருவிழிகள் செஞ்சிறைகள்
பனிபடர்ந்த கருமுகில்கள் ஊடே பாயும்
பருத்ததலைப் பெரும்பருந்துக் கூட்டம் எல்லாம்
கனிமுதிர்ந்த பேரால மரத்தைச் சுற்றும்
கருங்காக்கைக் கூட்டம்போல் பறந்துசுற்றி
தனிதின்று தசைகிழித்து நரம்பைச் சீய்க்கும்
நரக்காடாம் கீழ்வங்கம் காண்மின்! காண்மின்!

எஃகம்பாய்ந் தெடுத்தெறிந்த தசைதுடிப்ப
எலும்புகளை நரிகடிப்ப நாயிழுப்ப
அஃகம்போல் செங்குருதி ஊற்றெடுக்க
அடுக்கடுக்காய்ப் பசும்பிணங்கள் சாய்ந்துவீழ
ஒஃகியவெண் விழிபிதுங்க வாய்திறப்ப,
ஒழுகியசெந் நாவெயிற்றில் இடுகிக்கொள்ள
வெஃகாமை மனம்பெருக்கி விடுதலைக்கே
வேட்கைதரும் போர்க்களங்கள் காண்மின்! காண்மின்!

**கீழ்வங்காளியரின் துணிவைப் புகழ்ந்தது :**

வங்காளத் திருநாடே! உணர்வுக் காடே!
வன்னெஞ்சப் பேய்கிழித்த மறவர் மண்ணே!
எங்கோவென் னுடலுக்குள் ஊற்றெடுக்கும்
எம்நிலத்து விடுதலைக்கே உணர்வைச் சாய்க்கும்

மங்காதே பெரும் புகழே! வயிரக் குன்றே!
மாநிலத்தின் பெருமூச்சை வரலாருகச்
செங்காட்டின் குருதியைக்கொண் டெழுதிவைத்த
செந்தமிழின் புறப்பாட்டே வாழ்க! வாழ்க!

படைமுகத்துப் பைந்நிறச்சீ ராடை பூணீர்!
பயிற்சியின்றிப் பெருங்களத்தைத் துகைக்க லானீர்!
கடைமுகத்து நெஞ்சினரைக் கிழிக்க லானீர்!
கன்னியரின் உடல்மோந்த நாய்கள் தம்மின்
புடைமுகத்தின் எலும்புகளை நொறுக்க லானீர்!
பூணிகர்த்த தலைவர்க்கொளி ஏற்றலானீர்!
பெடைமுகத்தைப் பெற்றுரைத் துறந்தீர்! யாண்டும்
பெறற்கரிய பெரும்பேற்றைப் பெறல்கொண் டீரே!

**போரில் இறந்துபட்ட படை மறவர்க்கு இரங்கல்!**

மைத்தடங்கண் மொய்த்தவழி வெறித்த தையோ!
மார்பகலத் துழுஞ்சிறுவர் கலுழ்வர் ஓ! ஓ!
வெய்த்தடந்தோள் தழுவவரும் உடன்பிறப்பார்
விம்மியழும் பேரவலம் யாண்டும்! யாண்டும்!
வைத்துமிழ்ந்த பெருவயிற்றின் தாயர்தம்மின்
வார்த்தெழுந்த விழிநீர்க்குள் வெற்றிபூண்ட
கைத்துமுக்கிப் பெருமறவீர்! கீழ்வங்கத்தைக்
கனவினின்று நினைவுலகம் மீள்கொண் டீரே!

நிலவரணும் நீரரணுந் தாண்டிச் சென்றீர்!
நெஞ்சுருக நடை நடந்தீர்! வான்பறந்தீர்!
குலவரணும் மதவரணும் கடந்து நாட்டின்
கொடி மரத்தைக் காப்பதற்குப் பெரும்போ ரிட்டீர்!
புலவருளம் துடிதுடிக்க மொழியழுங்கப்
புறப்பட்டீர்! பொருதுகளஞ் செல்ல லானீர்!
நிலவுவரும்; காற்றுவரும்; வருவீர்' என்றே
நின்றிருந்தோம்! வெற்றிவந்த தும்மைக் காணேம்!

**பாக்கித்தானியர் கோட்டம்:**

கரிபுகுந்த வயல்போலக் கழுகு பாய்ந்த
கவின்மாடத் திளம்புறவின் குஞ்சைப்போல
நரிபுகுந்த சிறைக்கோழிக் கூட்டைப்போல
நாய்புகுந்த தனிவீட்டின் அடுக்களைபோல்

எரிபுகுந்த வைத்தூறு போலக் கோடி
எலிக்கூட்டம் குடிபுகுந்த நெற்சாலைப் போல்
பரிபுகுந்த கொல்லையைப்போல் பாக்கித்தானின்
படைபுகுந்த கீழ்வங்கஞ் சிதைந்த தம்மா!

குற்றுயிராய்க் குலையுயிராய்த் துடிக்கக் கொன்றார்!
கூட்டத்தின் உட்புகுந்து சிதைத்தார்! எங்கும்
சுற்றிவந்து தெருத்தெருவாய் மக்கள் தம்மைச்
சுட்டழித்தார் இடையிடையே கண்ணில்பட்ட
நெற்றிளமைக் கன்னியரைக் கற்ப ழித்தார்
நிற்கவைத்தே உடைகளைந்து குலைக்க லானார்!
வற்றலிலாப் பெண்வேட்கை! மண்ணின் வேட்கை!
வஞ்சகருக் கென்வேட்கை மிஞ்சிற் றம்மா!

**இந்தியப் படைஞர் வீரம்!**

மொழியுரிமை விடுதலைப்போ ராய்முகிழ்த்து
முசுபீர்இ ரகுமானின் தலைமையின்கீழ்
வழியொன்று கண்டிடவே எழுச்சிகொண்ட
வங்கத்துப் புலிக்கூட்டம் வேண்டிநிற்க
"விழியன்றே; எரிப்பந்தம்! எங்கள் கைகள்
வேலன்றே; வேட்டெஃகம்! தோள்கள் குன்றம்!
பழியன்றே எங்கட்கு! பாக்கித்தானே
பார்த்துக்கொள்"—என்றெழுந்தோம்; துணைநின் றோம்,நாம்.

நாமென்றால், நம்படைகள்! அரிமாக் கூட்டம்!
நரிக்கூட்டம் நடுங்கிற்று; பாய்ந்தோ டிற்று!
'தாமெ'ன்று 'தூமெ'ன்று துவைத்திட் டார்கள்!
தரங்கெட்டுச் சிதறிற்று, படைகள்! ஐயோ!
'ஈமெ'ன்றார்; 'ஆம்' என்றார்! எவர்தாம் விட்டார்?
இருகிழமை போர்மூட்டம்! அடடா! த்சொ! த்சொ!
தீமென்ற வாயினராய்த் துடித்தார்! நம்மின்
செருத்தலைவர் தம்காலைத் தொட்டார்! விட்டோம்!

**இந்தியர் ஒற்றுமை!**

ஐம்பத்துக் கோடியரும் ஒன்றாய் நின்றே
அரசுக்குக் கைகொடுத்த மாட்சி தன்னை
மொய்ம்பற்ற கோழையரும் உணர்வ துண்டோ?
மூக்கற்ற தோல்விக்குப் பேச்சும் உண்டோ?

பைம்புற்கள் குத்துவதால் களிறு சாமோ ?
பாக்கித்தான் படைநமக்கிங் கெந்தமூலை ?
ஐம்புலனும் வென்ருன்முன் ஆற்றலற்ற
அரைக்கிறுக்கன் என்செய்வான்? தோற்றுப் போனன்!

நம் வெற்றி!

வாயுரத்துக் கத்திநின்ருன் யாகியாக்கான்!
வயிரத்துத் தோள்களெல்லாம் எழுந்துநின்று
பாயிரத்தைப் பாடுகையில் படுத்துப் போனன்!
பாட்டொன்றை முடித்திருந்தால் என்னவாகும்?
நாயுரத்தை நம்பிஅமெ ரிக்கன் வந்தான்
நம்முரத்தை நம்பியன்ரே நாமிருந்தோம்!
ஆயிரத்து நானூறு சதுரக் கற்க
ளன்ரே நாம் பெற்றநிலம்! இழப்பைம்பத்தே!

வெற்றிகொண்ட நம் படைஞர்க்கு வாழ்த்து!

அறம்பாய்ந்த நன்னெஞ்சம், அருள்செய் நோக்கம்,
அடிநிலமும் பிறர்வெளவ இடங்கொடாத
மறம்பாய்ந்த வல்லுடலம், இணைந்த தோள்கள்,
வாழ்ந்திருந்த பழம்பெருமை—இவற்றை எண்ணிச்
செறும்பார்ந்த மிகுதுணிவு! செற்றம் பாய்ச்சும்
செங்கண்ணர் எம்படைஞர்! அவரைப் போலும்
திறம்பாய்ந்த படைமறவர் உலகில் உண்டோ?
திசையெட்டும் புகழ்பெற்றே அவர்கள் வாழி!

சில அருஞ்சொற் பொருள்:

| | | |
|---|---|---|
| அஃகம் | — | நீர் ஊற்று |
| ஒஃகிய | — | இடுகிய |
| கைத்துமுக்கி | — | கைத்துப்பாக்கி |
| வேட்டெஃகம் | — | துப்பாக்கி |
| மொய்ம்பு | — | வீரம் |
| செற்றம் | — | சினம் |
| செறும்பு | — | மறச்செருக்கு |

---

# சிலம்பட்டும் போர் முரசு

கவியரசு முடியரசன்
காரைக்குடி.

மதவுணர்ச்சி ஒருபுறத்தே ஒதுங்கி நிற்க
மானமிகு மொழியுணர்ச்சி நிமிர்ந்து நிற்கப்
புதுமலர்ச்சி கொண்டெழுந்தே உரிமை வேண்டிப்
போர்முரசு கொட்டியது கிழக்கு வங்கம்
விதிர்விதிர்த்துக் கொதித்தெழுந்த யாகி யாகான்
வீரத்தை மறந்துவிட்டு வீம்புக் காகக்
கொதிகலத்தில் கைவிட்டார்; வங்க மக்கள்
குருதிதனைப் பருகுதற்கு வெறியுங் கொண்டார்.

போர்வெறியர் ஏவிவிட்ட படையின் கூட்டம்
புன்மைமிகு வெறியாட்டம் ஆடக் கண்டோம்;
கார்குழலார் கற்பழித்துக் கொடுமை செய்து
கருவுற்ற மாதர்தமைச் சீர ழித்து
நீர்வழியும் விழியுடனே குழந்தை யெல்லாம்
நின்றலறப் பெற்றோரைச் சுட்டெ ரித்துச்
சார்மன்னன் ஆட்சியினை விஞ்சி விட்ட
சரித்திரத்தைப் படைத்ததுகாண் அந்தக் கூட்டம்.

குண்டுமழை பொழிந்தாலும் தமது மெய்கள்
குருதிமழை பொழிந்தாலும் கலங்கா வுள்ளங்
கொண்டெழுந்த வங்கத்தார் அஞ்சா ராகிக்
கொடுங்கோலர் கொட்டத்தை எதிர்த்து நின்றார்;
பெண்டிழந்தார் மகவிழந்தார் வீடி ழந்தார்
பெருமான மட்டுமவர் இழக்க வில்லை;
"கண்டிடுவோம் உரிமைபெறும் வங்க தேசம்
காத்திடுவோம்" என்றெழுந்தார் சிங்க மாந்தர்.

தூண்டிவிடும் அமெரிக்கா சொல்லை நம்பித்
தூண்டிலுறும் புழுவான பாகித் தானம்
தாண்டியது நீதிதனை; வெறியின் வேகம்
தலைக்கேறி ஆடியது; தேர்தல் நாளில்
வேண்டுமிவர் எனமக்கள் வாக்க ளிக்க
வென்றுவரும் ரகுமானை வஞ்சப் பேச்சால்
கூண்டதனில் அடைத்துவிட்டு மேடை ஏறிக்
கொக்கரித்தார் அறப்போரை அறியா வீரர்.

முறையற்ற செயலிதுவென் றுலகை நோக்கி
முறையிட்டோம் மனமுள்ள காரணத்தால்;
தரைமுற்றுஞ் சென்றுநிலை சொல்லி வந்தோம்
தவித்துவரும் மக்களுக்குப் புகலும் தந்தோம்;
வெறியுற்ற மனப்போக்கர் வலிய வந்து
விண்வெளியில் பறந்துநமைத் தாக்கி நின்றார்;
நெறிகெட்டு வந்தவர்க்குப் பழைய பாடம்
நினைவூட்ட நிமிர்ந்தெழுந்தோம் ஒன்று பட்டோம்.

குண்டொன்று தலைவீழக் குருதி வெள்ளம்
கொட்டிடவும் வானத்தில் பகைவன் ஊர்தி
கண்டங்குச் சுட்டெரித்து வீழ்த்தி விட்டுக்
கண்மலர முகமலர அதனைப் பார்த்துக்
கொண்டுயிரை விட்டானே எனது நாட்டுக்
கொற்றவனும் ஆறுமுகம் அவனைப் போன்றோர்
மண்டமரில் திறங்காட்டப் பாகித் தான
மாவீரர் புறங்காட்ட வெற்றி கண்டோம்.

மூட்டிவிட்ட சினத்தீயில் யாகி யாகான்
முகம்பொசுங்கி அகம்நசுங்கி இருளில் வீழ்ந்தான்.
பூட்டுடைத்து வெளிவந்தார் வங்க மக்கள்;
பூத்துவிட்டான் புதுக்கதிரோன் கிழக்கு வானில்;
கேட்டுமனங் கொண்டிருக்கும் பூட்டோ மட்டும்
கிலிபிடித்துத் தோல்வியினால் புலம்பு கின்றான்
நாட்டவரை ஏமாற்ற உளறு கின்றான்
நல்லறிவு பெற்றதுபோல் தோன்ற வில்லை.

புலம்பட்டும் நமக்கென்ன! புத்தி கெட்டுப்
போர்முறையே விருப்பமெனில் வந்த பின்னர்க்
கலங்கட்டும் தனித்திருந்தே; அமைதி ஒன்றே
காலமெலாம் விரும்புகின்றோம்; அதைக்கெடுத்தும்
புலங்கெட்ட பூட்டோவும் போர்தொடுத்தால்
பொன்றட்டும் நமக்கென்ன! நமது நாட்டில்
சிலம்பட்டும் போர்முரசு; மக்கள் எல்லாம்
திரளட்டும் ஒருமுகமாய்; ஒருகை பார்ப்போம்

# பாரத வெற்றிப் பதினொன்று

''பாசொலி''

திரு. பா. சொக்கலிங்கம்

தமிழரசு, சென்னை.

முழங்கினவே சங்கம் முரசங்கள் ; போந்தைக்
கிழங்கெனவே ஒன்னார்க் கிழித்தார்—தழங்கருவி
தண்டமிழ் மாமறவர் பாக்கித்தான் தானையினைக்
கண்டதுண்டம் செய்தார் கனன்று.

வீரக் கணபதிதான் விண்பறந்த பாக்கித்தான்
சோர விமானத்தைச் சுட்டெரித்து—தீரமதை
செந்தமிழ் நாட்டார் சிறிதும் மறவார்காண்
வந்தனைகள் செய்வார் மகிழ்ந்து.

ஆறு முகமறவன் ஆற்றல் மிகவுடையான்
சீறு புலியனைய செந்தமிழன்—கூறும்
பகைப்புலத்திற் செய்த படைமாட்சி வீரத்
தகைமைக்கிங் கொப்புண்டோ தான்.

சென்னியிலே குண்டு சிதறத் துளைத்தமையால்
செந்நீர்தான் சிந்துவதும் தேராமல்—அந்நிலையில்
விண்ணில் பறந்த விமானத்தை ஆறுமுகம்
மண்ணில் விழச்சுட்டான் மாய்த்து.

சுட்டான் விமானமது சுட்டு விழக்கண்டு
விட்டான் தனதாவி மெய்யுடனே—நட்டோராய்
விண்ணோர் அழைக்க விருந்தானான் ஆறுமுகம்
மண்ணோர் தொழவே மகிழ்ந்து.

பாக்கித்தான் சேனை பதைபதைத்துப் பின்வாங்கத்
தாக்கிய கௌரிசங்கர் தண்டமிழன்—நீக்கரிய
'' பாபாநக் கெ ''ன்றுரைக்கும் பாலம் பிடித்த செயல்
ஆவா நாம் என்னென்போம் ஆர்த்து.

குண்டு பலதுளைத்த குன்றொக்கும் வீரனையே
கொண்டுவந்தார் புண்கள் குணப்படுத்த—கண்டஅவன்

"என்னை விரைவினிலே ஏகவிடும்" என்றுரைத்தான்
"ஒன்னலரை மாய்ப்பேன்" ஒழித்து.

முப்பதினோ டெண்மர் முழங்கு தமிழகத்தார்
இப்போரில் வென்றிங்கே ஏற்றமுற்றார்—எப்போதும்
அன்னவரை வாழ்த்தி அழியாத் தமிழ்மறத்தை
பொன்னெனவே காப்போம் மகிழ்ந்து.

முப்படைகள் செய்திட்ட மூவாத் தமிழ் மறத்தை
இப்புவியோர் என்றும் மறப்பாரோ?—ஒப்பரிய
பாரத அன்னைமறம் பல்லாண்டு வாழியவே!
வீரம் பலவும் விளைத்து.

வெற்றி நமதென்றே வீரரெலாம் ஆர்த்தெழுந்தார்
கொற்றவையாம் இந்திராவைக் கும்பிட்டார்—பற்றலரை
வென்ற முரசுடனே வெண்சங்கும் ஆர்த்தனவால்
என்றும்நாம் வாழ்வோம் இனிது.

வீரத்தமிழ் வாழ்க! வெற்றியென்றும் வாழியவே!
பாரத அன்னை பதம்பணிவோம்—தீரமொடு
அன்பு தழைக்க அருள்பரப்பி—வாழ்த்திடுவோம்
இன்பம் செழித்திடவே இங்கு.

---

## பீரங்கிகளால் அடக்கிவிட முடியாது!

"படைவீரர் வரட்டும்; என்னைச் சிறைக்கூடம் கொண்டு செல்லட்டும்; அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறது, அவர்களால் என்னைக் கொல்ல முடியும்; என்னுடைய குடும்பத்தையும் அவர்களால் அழிக்க முடியும். ஆனால் ஏழரைக்கோடி மக்களின் உள்ள உணர்வை அவர்களால் அழிக்க முடியாது. அந்த மக்கள் என் பின்னால் நிற்கிறார்கள். தங்கள் உரிமைக்காக அவர்கள் உயிரை விடுவார்கள். அந்த மக்களின் உரிமைக் குரலை பீரங்கியால் அடக்கிவிட முடியாது.

முஜிபுர் ரகுமான்

(சென்ற மார்ச்சுத் திங்களில் செய்தியாளரிடம் கூறியது)

# பூத்தது வங்கதேசம்!

[கவிஞர் மணிமொழி]
'முரசொலி', சென்னை.

மண்ணுக்கு மகிமை சேர்க்கும் மகத்தான உரிமைப் போரில்
பொன்னுயிர் நீத்தவர்க்கும் போர்க்களக் காதைபாடும்
அன்னைமண் புதல்வர்க்கெல்லாம் அழியாத தமிழில் வாழ்த்துப்
பண்ணினைப் பாடி வீரர் பாதப்பூ வணங்கு கின்றேன்!

வசந்தப்பூங் காற்று வீசி வலம்வரும் வங்க மண்ணை
வசப்பட்டே வருவ தில்லை வணங்குதல் இல்லை யென்றே
கசந்தவன் வல்ல ரக்கன் கண்மூடி யாகி யாகான்
கசக்கியே எறியப் பார்த்தான் விடுதலைக் கனலும் கண்டான்!

கோலடி கொடுத்தா லாடும் குரங்குபோல் தனது ஆட்சிக்
காலடி யிருப்பா ரென்றே கனவுகள் கண்டி ருந்தான்
வாலடித் தெழும்பும் வேங்கை வழியினர் பாகிஸ் தானின்
மேலடி கொடுப்ப தைப்போல் முஜிபீரே தலைவ னென்றார்!

வாக்கினைத் தந்தே முஜிபீர் ரகுமானை வங்க மக்கள்
காக்குமோர் தெய்வ மென்றே கரங்கூப்பித் தொழுதி ருந்தார்!
போக்கினைக் கண்டான் முற்றிப் போனதென் றெண்ணிப் படையால்
தாக்கினான் தகர்த்தான் சிறையில் தள்ளினான் ரகுமான் தன்னை!

வங்கமா? எரிம லைதான் வெடித்ததோர் வடிவந் தானா?
வங்க-மா கடலே பொங்கி வழிந்ததா? இதுதான் அந்த
வங்கமா எனவி யக்க மானப்போர் நடத்த லானார்!
அங்கங்கள் பிய்ந்த போதும் அரிமாக்கள் ஓய வில்லை.

எங்கணும் குருதிப் பாய்ச்சல்! எங்கணும் பிணத்தின் நாற்றம்!
எங்கணும் மரண ஓலம்! எங்கணும் துயரச் சாயல்!
வங்கமே பிணக்கா டாக மாற்றினான் மற்றோர் இட்லர்
பொங்கினாள் பாரதத் தாய்; புன்செயல் நிறுத்தச் சொன்னாள்!

சித்தத்தில் என்றென் றைக்கும் சிறுமையே கொண்ட யாயா
யுத்தத்தில் இறங்கி விட்டான்; இந்திய மண்மேல் வேட்டுச்
சத்தத்தை எழுப்பி விட்டான்; சத்தியம் அறம் அகிம்சை
தத்துவம் தவழும் பூமி தனைப்போரில் இழுத்து விட்டான்!

ஏ—ஏய் யாயாகானே !

சொத்தைகள் நாங்களென்றே சொப்பனம் கண்டாய்; மானம்
சொத்தென்று நினைப்போர் நாங்கள்; சோதனை அதற்கென்றாலோ
ரத்தத்தைத் தான மாக்கும் ரணகளச் சூர ராவோம்
பித்தனே உணர வில்லை பிறகுநீ அனுப வித்தாய் !

பூட்டோவும் அயுப்கா னென்னும் புல்லனும் எம்நாட் டின்மேல்
'பாட்டனை' முடுக்கி விட்டார்; பாரதம் படுமென் றெண்ணி
பாட்டனு ? உங்கள் அப்பன் பாட்டனே வந்த போதும்
ஓட்டுவோம் ஒழிப்போ மென்றே உடைத்துநா றுக்கிப் போட்டோம் !

மூட்டைகள் அல்லநாங்கள் முடவனும் நசுக்கிப்போட;
வேட்டைநா யாகநீங்கள் வேடமிட் டோடி வந்தால்
வேட்டினைக் கிளப்பி உம்மை விரண்டோட வைப்போம்; எங்கள்
'நாட்'டினைக் கிளப்பி உங்கள் நாட்டையே கலக்கி வைப்போம் !

செந்நெலும் கம்பும்ராகி சோளமும் கரும்பும் தானு,
இந்திய மண்ணில் விளையும் ? எத்தனே யாயா கானே !
பந்தயம் வைத்தால் இந்தப் பாறையே வெல்லும் வீரம்
இந்தமண் பிறப்ப துண்டு இனியேனும் எச்ச ரிக்கை !

போர்ப்புயல் ஓய்ந்தது
புதிய சரிதம் பிறந்தது !

பூத்தது விடிவான் வெள்ளி ! புலர்ந்தது புதிதோர் காலை !
பூத்தன புதிய பூக்கள் புகழ்மணம் விரிந்த தெங்கும் !
பூத்தது இனிய ராகம் புவியெலாம் கவிதா கானம் !
பூத்தது மக்க ளாட்சிப் போரிலோர் புதிய பூமி !

பூத்தது வங்க தேசம் ! புனிதப்போர் நடத்திப் பகையைச்
சாய்ந்தது வங்க தேசம் ! சரியாத சரித்தி ரத்தை
யாத்தது வங்க தேசம் ! யாகியா கான ரக்கன்
வேர்த்திட வீரம் காட்டி விளைந்தது வங்க தேசம் !

தன்மான எழுச்சி பெற்ற தண்முகச் செல்வப் பிள்ளை !
பொன்வான விளிப்பு நோக்கிப் புறப்பட்ட கூட்டுக் கிள்ளை !
விஞ்ஞான யுகத்தில் ரத்த வீரத்தின் திருவி ளக்கு !
அஞ்ஞான ஆதிக் கத்தை அழித்ததோர் புதுவ ழக்கு !

சுதந்திர வேட்கை கொண்டோர் சுவாசிக்கும் புதிய காற்று !
நிதம்நிதம் உரிமை வேண்டி நிற்போர்க்கு வாய்த்த பேச்சு !

மதம்பிடித் தலைவோர் தம்மை மடக்கியே அடித்துப் போட்டு
மதிவிளக் கேற்றி வைக்கும் மகத்தான திருப்பு மையம்!

கிழக்கிலோர் ஒளியின் கற்றை கிளர்ந்தது! மேற்கு வானம்
சுழக்கரால் இருள்பா விற்று! சர்வாதி பத்தி யங்கள்
வழக்கமாய் சரிந்து போன வரலாறே கதை பாடிற்று!
முழக்கமிட் டெழுந்த முக்தி வாகினி கொடியே றிற்று!

வங்கக் கொடி உயர
கைகொடுத்தார் நம் இந்திரா!

யாரந்த இந்திரா? யாயா எருமைக்கு எறியும் ஈட்டி!
ஆரந்த இந்திரா? எங்கள் அன்னை கை இருக்கும் போர்வாள்
ஆரந்த இந்திரா? பெண்ணுள் அழியாத வீரசக்தி!
யாரந்த இந்திரா என்றால் அலகாபாத் கண்ணகித்தாய்!

ஜான்சியின்ராணி லட்சுமி! சரித்திரம் பாடும் பிரான்சின்
ஜோன்ஆப் ஆர்க்! தமிழ்நாட்டின் சுடரொளி வேலுநாச்சி!
மாண்டவர் எல்லாம் மீண்டும் மண்ணிலே ஒருவ ராகித்
தோன்றினர் போலே வந்த தோற்றமே இந்திரா வென்பேன்!

வாழிய வங்க தேசம்! வருபகை அழித்து மண்ணில்
வாழிய வங்க தேசம்! வளம்மிகப் பெற்ற நாளும்
வாழிய வங்க தேசம்! மங்காத புகழி னோடே
வாழிய வங்க தேசம்! வையமே வாழ்த்த வாரீர்!

---

## உரிமைப் போர்

உலகில் நிகழும் போர்கள் பலதிறத்தன. மண்ணைப் பற்றிய போர்கள் சில; பொன்னைப் பற்றிய போர்கள் சில; பெண்ணைப் பற்றிய போர்கள் சில; வேறு சில போர்களும் உண்டு. எல்லாப் போர்களிலும் தலையாய போர் உரிமைப் போராகும். இப்போர்புரிவோரே சிறந்த வீரர். இப்போரில் தலைப்படுவோர்பால் பொதுவகையில் பல நல்லியல்புகளும், சிறப்பு வகையில் பல நல்லியல்புகளும் மிளிர்தல் வேண்டும். இந் நல்லியல்புகள் அமையப் பெறாது வெறுங் கிளர்ச்சி செய்வோர் உரிமைப் போர் வீரராகார்.

—திரு. வி. கலியாணசுந்தரனார்.

# வெற்றித்தாய் சிரித்தாள் இங்கே!

[கவிஞர் காரா. நாச்சியப்பன்]

சென்னை-14.

கீழ்நாட்டார் என்ப தாலே கீழ்ப்பட்டார் எனநி னைத்துப்
பாழ்நாட்டங் கொண்ட மேற்குப் பாக்கிஸ்தான் ஆள வந்தார்
வாழ்நாட்டங் கொண்டெ ழுந்த வங்கத்தை நசுக்கி வந்தார்
சூழ்வாட்டம் போக்க மக்கள் சுழற்காற்றுப் போலெ ழுந்தார்.

ஆதிக்க வெறிக்கும் எல்லை அளவுண்டே மக்கள் தம்மைப்
பாதிக்கும் ஆட்சி தன்னைப் பலநாட்கள் பொறுப்ப துண்டோ?
சாதிக்கும் பொய்யும் ஒற்றைச் சமயத்தார் என்னும் கூற்றும்
வாதிக்கும் உயிரை யென்றால் மறுப்பின்றி ஏற்ப துண்டோ?

எண்ணத்தால் தொலையர் நாட்டின் எல்லைக்குந் தொலையர் பேசும்
வண்ணத்தாய் மொழிக்கும் அந்த வன்னெஞ்சர் தொலையர் ரத்தம்
உண்ணத்தான் அலைந்தி ருக்கும் ஓநாயைப் போன்றோர் வங்க
மண்ணைத்தாம் விட்டொ ழிந்தால் வாழ்வுண்டென் றுணர்ந்தார் மக்கள்

வங்கத்தின் எண்ணம் முஜ்புர் ரகுமானாய் வடிவெ டுத்துத்
தங்கத்தாய் நாட்டை மீட்கத் தகுஞ்சேனை யாய்வ ளர்ந்து
சிங்கத்தைப் போலெ ழுந்து சீற்றத்தைக் காட்டி மேலைப்
பங்கத்தான் யாயா கானின் படைமேலே பாய்ந்த தம்மா!

ஊரெல்லாந் திரண்டெ ழுந்தே உரிமைக்குக் குரலெ ழுப்பப்
பாரெல்லாம் பார்த்தி ருக்கப் படைகளை யனுப்பி வாழ்வின்
வேரெல்லாம் இற்று வீழ வெடிகுண்டைப் போட்டு நற்றாய்
மாரெல்லாங் கற்ப ழித்து மாபாவி கொடுமை செய்தான்.

படையாட்சி கொண்ட மேற்குப் பாகிஸ்தான் வெறியொழிக்கத்
தடையாக எழுந்த வங்கத் தலையெல்லாம் சாய்த்து நாட்டின்
கடையாணி போலி ருந்த கற்றோரைச் சுட்டுக் கொன்று
தொடைதட்டி மேலும் மேலும் துள்ளாட்டம் போட்டி ருந்தான்.

உரிமைக்குக் கிளர்ந்தெ ழுந்த ஊராரைக் கொன்றொ ழித்தல்
சரிதானா என்று கேட்கத் தக்கோர்கள் உலகத் தில்லை
சிரிமாவும் இதுகு றித்துச் சிந்திக்க வில்லை ஆனால்
அரிமாப்போல் பெண்ணொ ருத்தி ஆர்ப்பரித்துக் குரல்கொ டுத்தாள்!

ஆகாத செயல்கள் செய்யும் யாயாகான் பூட்டோ கும்பல்
போகாத நெறியிற் போகும் போக்கினைத் தடுக்க எங்கள்
மாகாளி சக்தி வீர மாதாவே பதைத்தெ ழுந்தாள்
ஆகாகா! பார தத்தாய் அவள்பேர்தான் இந்தி ராவே!

உள்ளூரின் கலகத் தைத்தான் ஒழிப்பதற்குப் படைய னுப்பி
வெள்ளம்போல் குண்ட டித்து வீழ்த்துகின்றோம் என்று ரைத்தார்
கள்ளத்தால் அவர்கள் செய்யும் கயமையை வைய மெங்கும்
விள்ளத்தான் பறந்து சென்றாள் வெற்றித்தாய் இந்தி ராவே.

பூட்டோவும் யாயா கானும் பொங்கித்தான் பொரும லானார்
கூட்டான நிக்சன் மாவோ கொடுப்பார்கள் தோட்டா வென்று
தீட்டாத திட்டந் தீட்டிச் சிங்கத்தை இடறி னாற்போல்
போட்டார்கள் இந்தி யாவில் போர்க்குண்டு போட்டே விட்டார்.

கீழ்வங்க மக்கள் செய்த கிளர்ச்சிக்குத் தோள்கொ டுத்து
வாளேற்கச் சூளு ரைத்து வரமீந்தாள் இந்தியத்தாய்!
பாழாக்க வந்த மேற்குப் படைக்கொடியர் அட்ட காசக்
கீழாண்மைச் செயல்த டுக்கக் கிளர்ந்தெழுந்தார் வீர ரெல்லாம்!

வம்புக்குப் போவ தில்லை வந்தாலோ விடுவ தில்லை
தெம்புக்குக் குறைவில் லையெம் தேசத்திற் கோழை யில்லை
கும்பிட்ட கையைப் போற்றிக் குறுக்கிட்ட கைமு றித்துச்
செம்பாலைச் சிந்தும் வீரச் சிங்கத்தின் கூட்டம் நாங்கள்

ஐந்தாண்டின் முன்னே உங்கள் அய்யூப்கான் வெள்ளோட் டத்தில்
செந்தேளாய்க் கொட்டிக் கொட்டித் தீர்த்தோமே மறந்து போச்சோ?
வந்தீரே புத்தி கெட்டும் வான்படையும் கடற்ப டையும்
வெந்தேதான் போயிற் றேஎம் வீரத்தைக் கண்டீ ரன்றோ?

வெறியாட்டம் தவிர்க்கச் செய்த விளையாட்டுப் போரி லேசெம்
மறியாட்டைப் போல்வி ழுந்து மடிந்தீரே சரண டைந்தீர்!
பறியுற்ற பின்னே அங்கே பலவாறு பேசி நிற்றல்
அறிவாமோ? உலகம் உங்கள் அழிவைத்தான் கண்ட தின்றே!

வெற்றித்தாய் சிரித்தாள் இங்கே! வெற்றுரக் கூச்சல் அங்கே!
முற்றத்தான் தோற்று லன்றி முடிக்கீரோ வெறிப்போ ராட்டம்?
கற்றுத்தான் கொடுக்க லாகும் கண்மூடிக் கொண்டே பாம்புப்
புற்றுக்குள் கையை விட்டால் பொறுத்துக்கொண் டாயிருக்கும்?

---



# இலக்கண உவமைவழிப் போர் வெற்றி முரசு

கவிஞர்
அரங்க. சீனிவாசன்

கட்டுப்ப டாத திறலாலே,
கர்ச்சித்த சீயக் குரலாலே,
விட்டுக்கொ டாத விறலாலே
வெற்றிக்கு வாழும் படையாலே
குட்டுப்ப டாமல் அகல்வாரோ,
கொட்டத்தில் வீழ வருவாரே ?
எட்டிச்செல் லாமல் எதிர்வாரேல்,
ஏற்றிக்கொல் லாமல் விடுவாரோ ?

## இலக்கண உவமைகள்

கனிச்சுவை தருவெண் பாவிற்
காய்எதிர் நிரை நில்லாது
தனிச்சிறப் படைய மாமுன்
நேர்வரும் தகுதி எது ?

இசைகுறைந் திடினும் பாட்டி
னிடைக்குறில் அளபெடாது
நசைபிறக் கினும்மு ழுத்தேங்
காயினை நாய்பெறு து.
வயப்படும் எழுவா யாக
மாறிய போதின் அல்லால்,
செயப்படு பொருள்தான் என்றும்
பயனிலை சேர்வ துண்டோ ?

அடும்பகை தனைவிட் டேநட்
பாடிய போதின் அல்லால்,

நெடும்பகை வருக்குப் போரிற்
பயனிலை யாவ துண்டோ ?

வேறு

உயிர்மெய் எழுத்தில் உயிர்போனல்
ஒற்றுக் கொலிக்கும் இயல்புண்டா ?
செயிரில் வங்கம் போயினபின்,
திருடர்க் கிகலும் திறலுண்டா ?

இரட்டைக் கிளவி ஒருபகுதி
இழந்த பின்னும், பொருள் தருமா ?
புரட்டுக் காரர்க் கொருவங்கம்
போன பின்னும் திறல்வருமா ?

வேறு

முதலெழுத்தொடு புடையெ ழுத்துமுன்
முதன்மை பெற்றிட முடியுமா ?
சிதல் எழுப்பிய எளிய புற்று, நல்
இமய வெற்பொடு சிவணுமா ?

அயல்மொழித்துணை நம்பி யேவரும்
அன்மொழித்தொகை நிகர, அன்
னியர்படைத்துணை நம்பி வந்தவர்
நீறு பட்டிடல் உறுதியே ?

வேறு

சந்தியிலே முளைத்தஒற்றுத்,
தனித்தபொருள் கொள்வதுண்டா ?
இந்தியர்க்குத் தீங்கெண்ணும்
எண்ணம், வெற்றி கொள்வதுண்டா ?

குற்றுகரம் உயிர்வந்து
கூடியதும், ஓடாதோ ?
ஒற்றெழுத்துப் பலஎனினும்
ஒருசொல்லின் முதலாமோ ?

———

# வாழ்க வங்கதேசம்

## கவிஞர் முத்துலிங்கம்

### முரசொலி, சென்னை

வங்காள தேசத்தில் வாழ்கின்ற மக்களுடைப்
பொங்கும் உணர்ச்சிகளின் போக்குப் புரியாமல்

புழுப்போல அவர்களைத்தாம் பொசுக்குவோம் என்ற
கொழுப்போடு திமிரோடு கொடியமனத் தோடு

மங்கையரைப் பால்குடியை மறக்காத குழந்தைகளைத்
தங்கையரைப் பெரியவரைத் தாயாரைப் போன்றவரை

அங்கங் களைவெட்டி அப்படிவெட் டியவுறுப்பை
கங்கை நதியோரம் கரைபோலப் போட்டார்கள்;

புலியிடத்தில் சிக்காமல் புள்ளிமான் தப்பிவரும்
நிலைபோல வங்கமக்கள் நிலைகுலைந்(து) ஓடிவந்தார்

பக்கத்தில் இருக்கின்ற பர்மாவுக் கேகாமல்
தக்கதென்று சீனத்தில் தஞ்சம் நினைக்காமல்

கருணையுடன் நம்மைக் காக்குமிந்த நாடென்றே
இரக்கமுள்ள பாரதத்தை எதிர்நோக்கி ஓடிவந்தார்.

தஞ்சம் புகுவோர்க்குத் தஞ்சம் அளிப்பதனுல்
தஞ்சையென்றே ஓரூர்க்குத் தமிழ்நாட்டில் பெயருண்டு.

இந்நாட்டை உள்ளடக்கி இருக்கின்ற இந்தியா
கண்கலங்கி வந்தவர்க்குக் கருணையே காட்டாதோ?

ஊர்விட்டுக் கிளம்பிவந்த ஒருகோடிக் கிழக்குவங்கப்
பேர்களுக்குப் பாரதம் பேரபயம் அளித்தது.

இதுதவரு? பாக்கிஸ்தான் இதைத்தவறு என்றதனுல்
முதுகளப் பெரும்போர் மூண்டுதணிந் திருக்கிறது

சத்தியத்தை நம்பியுள தர்மத்தாய்ப் பூமியின்மேல்
புத்தியற்ற போக்கிரிகள் போர்தொடுத்து நின்ருர்கள்

சாது மிரண்டால் தனிக்காடு கொள்ளாது
சாதுபோல் இருக்கின்ற சாந்தமுள்ள இந்திய

நாடு மிரண்டால் நானிலம் தாங்குமா ?
கேடு கெட்டவர்கள் கிஞ்சிற்றும் உணர்ந்தாரா ?

பாரதத்தின் மீது பாக்கிஸ்தான் தொடுத்தயுத்தம்
தாரணியில் தன்னழிவைத் தானேமேற் கொண்டயுத்தம்

இந்தியாவை வெல்ல இதனுல் இயலுமா ?
தந்தமுள்ள யானையைச் சப்பாணி யால்அடக்க

முடியுமா ? புலியை முயல்எதிர்த்து வெல்லுமா ?
உடல்சிலிர்க்கும் சிறுத்தையை ஓநாயும் வீழ்த்துமா ?

இந்திராஎனும் சிங்கம் இருக்கையிலே யாஹ்யாகான்
சுண்டெலிகள் நம்நாட்டைத் துளைத்துவிட முடியுமா ?

பாக்கிஸ்தான் மக்கள்தொகை பத்துக்கோ டிக்கும்கீழ் ;
நீக்குப் போக்குத்தெரிந்த நெடிய புகழ் இந்தியாவில்

ஐம்பத் தறுகோடி மக்கள் அடங்கியுள்ளார்
வெம்பகை காட்டுகின்ற விவேகமில்லா யாகியாவின்

பட்டாளக் கூட்டமே பார்த்துக்கொள் எம்தொகையை
வெட்டாமல் விடமாட்டோம் விரியுலகில் உன்திமிரை

அயிரோப்பாக் கண்டத்தை ஆட்டிவைத்த இட்லரும்
உயிரோடு வாழ்ந்ததில்லை ; ஒன்றுக்கும் உதவாத

பாக்கிஸ்தான் இராணுவமே பகர்வதைக்கேள் எம்மைத்
தாக்குதற்கு அமெரிக்கா தந்திட்ட மிக்கபெரும்

பாட்டன் டாங்கிகளைப் பாரதத்தில் முன்புவாழ்ந்த
பாட்டன் காலத்துப் பழையஆ யுதம்கொண்டே

ஓட்டம் பிடிக்கவைத்தோம் உமையறுபத் தைந்தில் ;இவ்
ஆட்டம் அடங்குமுன்னே அமர்க்களம் வரலாமா ?

எடுத்தபோர் தோற்று ஏழாண்டு முடியுமுன்னே
அடுத்தபோர் நடத்த அறிவிருந்தால் வருவாயா?

ஆதி பராசக்தி அந்நாளில் சூலத்தால்
சூதுமதி மகிசா சுரனை வதைத்தொழித்தாள்

சூலியென்று அதனாலே சொன்னார்கள்; தீயவரை
நீலி வடிவெடுத்து நீணிலத்தில் அவள்கொன்றாள்;

உலகத்தை அழியாமல் ஒருநாள் காத்ததனால்
உலகநா யகியென்று உரைப்பார்கள் அன்னவளை!

அத்தகைய பராசக்தி அகிலத்தில் இந்நாளில்
வித்தைமிகும் பாரதத்தை வீழாமல் காப்பதற்கு

இந்திரா எனும்பெயரில் இங்குபிறந் திருக்கின்றாள்
தந்திரக் காரர்களே சாக்கிரதை யாயிருங்கள்

வாழ்க பாரதம்! வளர்க நம்வெற்றி!
வாழ்கவாழ்க முஜிபுரின் வங்காள தேசம்!

---

## நாடே பெரிது

*கட்சி என்பது ஒன்று; அரசு என்பது வேறொன்று; நாடு என்பது இன்னொன்று; கட்சியைவிட அரசு நிலையானது. அரசைவிட நாடு நிலையானது.*

—அறிஞர் அண்ணா

*என் தாய் நாடு யாதாயினும் ஆகுக; என்ன குறைகள் உடையதாயினும் ஆகுக; அஃது எப்படியும் என் தாய் நாடே.*


—சார்ல்ஸ் சர்ச்சில்

*நாடு என்பது இறவாத ஒன்று. மக்கள் வருவர் போவர். ஆனால் நாடு தன்னுள் அழியாத ஆற்றல் ஒன்றை அடக்கிவைத் துள்ளது*

—பண்டித சவகர்லால் நேரு.

# வாழ்க வங்கம் !

புலவர்மணி
தி. கி. சுந்தரமூர்த்தி
மதுரை.



அன்னை யடிமை நிலைபோக்க
அறப்போர் கண்ட அருந்தலைவன்
மன்னும் முசிபர் ரகுமானின்
மாண்பு பெருக நின்றுதவி
பொன்னும் உயிரும் ஈந்தெங்கும்
புகர்சேர் வெற்றி நிலைநாட்ட
பன்னற் கரிய பணிசெய்தார்
பார தத்தின் வீரர்களே !

ஈரம் இரக்கம் சிறிதின்றி
இருபத் திலக்க மாந்தர்களை
சேர அழியப் படையேவிச்
செற்ற பாக்கித் தானியரைப்
பார தத்தின் நம்வீரர்
பதைத்தே எழுந்து சின்னாளில்
வேரோ டழித்து வியப்புறவே
வெற்றி வாகை சூடினரே !

காந்தி நேரு கலைத்திலகர்
காட்டும் நெறியில் தாம்நின்று
மாந்தர் போற்றச் செயலாற்றி
மன்னும் புகழைத் தாம்சேர்த்தார்
சாந்தம் நிறைந்த நம்முதல்வர்
சலியா துழைக்கும் நன்மனத்தால்
ஈந்தார் வெற்றி ! வியனுலகில்
எதிர்த்தார் பகையை எறித்தாரே !

வங்க நாடு வலம்மிக்க
வாகை சூட, பாகித்தான்
பங்கம் உற்றுப் பல்லுதிரப்
பதறி ஓட, நம்படைகள்
எங்கும் சூழ்ந்தே கொடுத்தஅடி
ஈரைஞ் ஞூறு ஆண்டுவரை
தங்கு மன்ரே ! அவர்தஞ்சம்
சான்றே ! வீரம் வாழ்ந்திடுக !

ஓடி வந்த ஒருகோடி
மக்க ளுக்கு உதவியினை
நாடி யன்பு தானளித்து
நல்ல குடிசை தனிலிருத்திக்
கூடி யுண்ணச் சோறளித்துக்
குளிரை நீக்க உடையுதவி
தேடி வந்த எல்லார்க்கும்
தெய்வம் அன்ரே நம்நாடே !

பீடு மிக்க முப்படைக்குப்
பெருமை சேர்க்கத் தளபதிகள்
பாடு பட்டுப் பகலிரவாய்
பாக்கியரைப் புறங் கண்டார்
நாடு புகழ் மானேக்சா
லால்நந்தா என்றிவர்கள்
நீடு வாழ வாழ்த்திடுவோம்
நிலைத்த வெற்றி முரசொலிப்போம்!

---

## "நான் 'ஜோன் ஆப் ஆர்க்' ஆகப் போகிறேன்"

இந்திரா காந்திக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும் போது ஒரு நாள், தனக்குள் தானே ஏதோ பேசிக்கொண் டார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அவர் பாட்டனர்,

"என்ன தனிமையில் முணுமுணுக்கிருய் ?" என்று கேட்டார்.

அதற்கு இந்திரா,

"இப்போதுதான் 'ஜோன் ஆப் ஆர்க்' வரலாற்றைப் படித்தேன். அவள் தன் நாட்டு மக்களுக்கு எப்படி விடுதலை தேடித் தந்தாளோ அப்படியே செய்ய நானும் 'ஜோன் ஆப் ஆர்க்' ஆகப் பழகிக் கொண்டிருக்கிறேன்" என்ருர்.

அன்று சொன்னவாறே இன்று இவர் வங்க தேசத்து மக்க ளுக்கு விடுதலை தேடித் தந்தார்.

# தேவியின் வீரம் வாழ்க



கவிஞர்
பு. ஆ. முத்துக்கிருஷ்ணன்
புதுப்பாளையம், (வ. ஆ.)

தங்கமாம் கிழக்குவங்கம் தன்னாட்சி உரிமை வேண்டிப்
பொங்கிடும் புரட்சி வெள்ளம் போந்ததைப் பொறுத்தி டாமல்
பங்கமே செய்ய வந்தார் பாகித்தான் வெறியர் கூட்டம்
எங்கணும் பிணக்கா டாக இரத்தஆ றோடிற் றந்தோ!

ஐநாவும் பொய்நா வாகி அவையினில் வீற்றி ருக்க
சைனாவும் அமெரிக் காவும் சதித்திட்டம் தனில் இறங்க
மெய்நீதி வேண்டி இந்திரா மேதினி வலமாய் வந்தார்
கைநாவுக் குதவுதமா போல் ரஷ்யாவின் கனிவைக் கண்டார்!

நடுங்கவே வங்க மக்கள் நல்வாழ்வைச் சூறை யிட்ட
கொடுங்கோலன் யாகி யாகான் குற்றந்தான்ஒன் றிரண்டா?
படுந்துயர்ப் பார்த்திரங்கா பாவி(த்)தான் பாகித் தானா?
கெடுமதி கண்க ளுக்குக் கிட்டுமோ கிட்டா தன்றோ!

வகைகெட்டே இடறி வீழ்ந்தான் மாபார தத்தின் மீதில்
குகைவிட்டே சிங்கம் போன்றோர் கொதித்துமே திரண்டெ ழுந்தார்!
தொகைதொகை யாய்நி றுத்தி தோல்வியாம் பாடம் சொல்லிப்
பகைமுற்றும் பணிய வைத்த பாரத வீரர் வாழ்க!

இடையூற்றிற் கிடையூ றானார் இடுக்கணுக் கழியா வீரர்
தடைப்பட்ட இடங்கள் தோறும் தாண்டியே சென்றார் வென்றார்:
உடைப்பட்ட படைக்க லங்கள் உற்றவா றுரைக்கப் போமோ?
படைப்பட்ட பாட்டைச் சொல்லப் பாரத வில்லி வேண்டும்!

இனக்கொலை புரிந்த யாகி யாகானின் இடுப்பொ டிக்க
சனநாய கத்தைக் காக்க சமாதான வாழ்வ ளிக்க
தினப்போரில் தீர்த்துக் கட்டி சிறுநாட்டிற் குரிமை தந்து
சினப்போரும் தணிய வைத்த தேவியின் வீரம் வாழ்க!

முப்பெரும் படைகள் சேர முக்திவா கினிமுன் னேற
செப்பரும் கிழக்கு வங்கம் திருமுடி சூடிக் கொள்ள
இப்போது ரகுமா னுக்கும் விடுதலை வாங்கித் தந்து
ஒப்பிலாக் கீர்த்தி பெற்ற உயர்பெருந் தலைவி வாழ்க !

இன்றுபோய் நாளை வாவென் றிராவணன் தனக்கு முன்னால்
நன்றுரை செய்த ராமன் நல்வழிப் போர்நி றுத்தம்
இன்றுநாம் காணப் பெற்றோம் ! இந்திரா காந்தி அன்பால்
என்றாலும் விழிப்புக் கொள்வோம் எதிர்ப்போரை அடக்கி
வெல்வோம் !!!

அரும்பெரும் சமர்முடிக்க அன்னைகா ணிக்கை யாக
பெருஞ்சோற்று உதியன் போன்று பேரன்பு மிகவுங் கொண்டு
தரும்பத்துக் கோடி எங்கள் தமிழக நிதியாம் என்ற
நறுந்தமிழ்க் கலைஞர் வாழ்க! நல்லாட்சி நாளும் வாழ்க !!


வந்தபோர் முரசு வெற்றி மலர்கண்டோம்! மணம்நுகர்ந்தோம்!
எந்தவே ளையும்வீ ரர்க்கு இதயத்தின் நன்றி சொல்வோம் !
இந்தியா சோவி யத்தின் இணக்கமாம் நட்பு வாழ்க !
செந்தமிழ் செல்வி வெற்றிச் சிலம்பொலி இசைக்க வாழ்க !

## இந்திராகாந்தி அம்மையார் பற்றிய நூல்கள்

1. Dear to Behold : an intimate portrait of Indira Gandhi. —*Krishna Nehru Hutheesing.*
2. Indira Gandhi —*K. A. Abbas.*
3. We Nehrus —*Krishna Nehru Hutheesing.*
4. The Nehrus —*B. R. Nanda.*
5. With No regrets —*Krishna Nehru*
6. Discovery of India (Letters from a Father to his daughter) —*Jawaharlal Nehru.*
7. Glimpses of the world History —*Jawaharlal Nehru.*
8. Our Indira Pictorial Calendar—1972
9. Indira Gandhi—Speeches vol I : *Publications Division*

# பேருரையாசிரியர்
# பெருமழைப் புலவர் மறைவு

சங்கநூற் புலவரும் இந்த நூற்றுண்டில் தலைசிறந்த உரையாசிரியரும், கழகப் புலவருமான புலவர் திரு பொ. வே. சோமசுந்தரனுரவர்கள் 1909இல் தஞ்சை மாவட்டத்தில் மேலப் பெருமழை என்னுஞ் சிற்றூரில் முக்குலத்தோர் மரபில் பிறந்தவர். தந்தையார் வேலுத்தேவர் உழவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்க்கை நடத்திவந்தார். தம் மகனுக்குக் கல்வி கற்பிக்க விருப்பமின்றி உழவுத் தொழிலில் ஈடுபடுத்த முயன்றார். சோமசுந்தரனுரோ அதனை விரும்பாது தமிழ் நூல்களை மறைவாகவிருந்து படிப்பதிலேயே கருத்தூன்றி வந்தார். பின்னர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே சேர்ந்து கையினுலே



சமைத்துண்டு கல்வி பயின்று புலவர் பட்டம் பெற்றுர். அதன் பின்னரும் தாமே தொல்காப்பிய உரை நூல்களையும் சங்க நூல்களையும் பிற்கால இலக்கியங்களையும் சமய இலக்கியங்களையும் நன்கு பயின்று புலமை பெற்றுத் தம் ஊரிலேயே அமைதியாக வாழ்வாராயினர்.

உரையில்லாத சூளாமணிக்கு உரை எழுதவேண்டுமென்று யான் கருதியபோது கழகப் புலவர் திரு. சு. அ. இராமசாமிப் புலவர் தமதூர்ப்பக்கம் தம்மினத்தவர் புலவர் சோமசுந்தரனுர் இருக்கிறுர். அவர் நுண்மாண் நுழைபுலமிக்கவர். அவரைத் துணைக்கமர்த்தித் தாம் சூளாமணிக்கு உரை எழுதுவதாகச் சொன்னுர். திரு. சோமசுந்தரனுரைக் கொண்டு சில பாடல்கட்கு உரை எழுதச்செய்து வாங்கி யனுப்பினுர். அவ்வுரை பண்டை உரையாசிரியர் நடைக்கொத்துத் தெளிவும் விளக்கமுமுடையதாக விருப்பது கண்டு தொடர்ந்து எழுதுமாறு சொன்னேன். சூளாமணி முழுமைக்கும் புலவர் இருவருமாக உரை எழுதி முடித்தனர். அடுத்துப் புலவர் சோமசுந்தரனுர்

தாமே தனித்த முறையிற் கழகம் விரும்பும் நூல்கட்கெல்லாம் உரை எழுத ஒப்புக்கொண்டனர். அது முதல் அவர்களுடைய தொடர்பு வளர்மதிபோல் வளர்ந்து பத்துப்பாட்டுக்கள் ஒவ்வொன்றுக்குந் தனித்தனி விளக்கவுரையும் ஆராய்ச்சி முன்னுரையும் எழுதித் தந்தனர். பின்னர் முறையே எட்டுத் தொகை நூல்களில் பரிபாடல், ஐங்குறுநூறு, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நான்கு நூல்கட்கும் விரிவுரை எழுதினர். அதன்பின் உரையில்லாத பெருங்கதை, வளையாபதி, குண்டலகேசி, உதயணகுமார காவியம் ஆகிய நான்கு நூல்கட்கும் விரிவுரை எழுதினர். பின்பு நற்றிணை பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரைக்கு விளக்கமும், கலித்தொகை நச்சினார்க்கினியர் உரைக்கு விளக்கமும் வரைந்து தந்தனர். அதன்பின் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, கல்லாடம், பட்டினத்தார் பாடற்றிரட்டு ஆகிய நூல்கட்கு விரிவுரையும், திருக்கோவையார் பேராசிரியர் உரைக்கு விளக்கமும் எழுதியுதவினர். புறப்பொருள் வெண்பாமாலைக்கு இவர்கள் எழுதிய விளக்கத்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் பெரிதும் போற்றிப் பயிலுகின்றனர்.

இவர்கள் எழுதிய பண்டிதமணி வரலாறும், பெருங்கதை மகளிரும் பள்ளிகட்குப் பாடமாக வைப்பதற்குத் தகுதியுடையன. இவர்கள் படைத்த செங்கோல் நாடகமும், மானனீகை நாடகமும் கல்லூரி வகுப்புகட்குப் பாடமாக வைப்பதற்குரிய தகுதி நோக்கி இவ்வாண்டிலே சென்னைப் பல்கலைக் கழகப் பட்டப்படிப்புக்குச் செங்கோல் நாடகம் பாடமாக வைக்கப் பெற்றுள்ளது. இவர்கள் பெருங்கதை முழுவதையும் உரை நடையில் எழுதியிருப்பது மிகவும் போற்றிப் படித்தற்குரியது. இவர்கள் 'செந்தமிழில் இன்சுவையூட்டும்' பாக்கள் இயற்றுந் திறத்தினர் என்பது இவர்கள் 1952இல் நடந்த புயலைப் பற்றிப் பாடிய பாட்டுக்களாலும் 1966இல் மழையின்றி வறட்சி ஏற்பட்டபோது மழைவேண்டிப் பாடிய பாமாலையாலும் விளங்கப்பெறும்.

இவர்கள் நான்காண்டுகளாக இடையிடையே தம் வலக்கையில் கடுப்பு ஏற்பட்டு அதனால் தம் கைப்பட உரை எழுத முடியாமல் சொல்லுவதை எழுதுதற்கு ஆள் அமர்த்தி எழுதியனுப்பியும் வந்தார்கள். அந்தக் கடுப்பு பக்கவாதமாக

மாறவே 21-12-1971இல் புதுவை 'சிப்மர்' மருத்துவ மனையிற் சேர்க்கப்பெற்றனர். சேர்ப்பதற்குச் சிறிது முன்னர்தான் உணர்வை இழந்தனராம். புதுவை மருத்துவ மனையிற் சேர்க்கப் பெற்ற செய்தி அவர்கள் மகன் செல்வன் பசுபதி எழுதிய கடிதம் 27-12-71இல் கிடைக்கப் பெறவே யானும் கழகப் பொது மேலாளரும் 28-12-71 இல் புதுவை மருத்துவ மனைக்குச் சென்று புலவரவர்கள் உணர்விழந்து படுக்கையிற் கிடப்பதைக் கண்டு இத்தனை பழந்தமிழ் நூல்கட்கும் உரை எழுதிய கை, என் உளங்கவரும் வகையில் அன்புகாட்டி எனக்கு நூற்றுக் கணக்கான இலக்கியமாய்த் திகழும் கடிதங்களை எழுதிய கை உணர்வற்றுக் கிடப்பதையும் அக்டோபர் 12ஆம் நாள் என் இல்லத்தில் விருந்துண்டு பின்னர் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி மகிழ்ச்சியுரை பகர்ந்த வாய் பேச முடியாமல் உணர்விழந்த நிலையினையுங் காண என் கண்கள் கண்ணீர் உகுத்தன ; எனது நெஞ்சம் நீராக உருகிற்று.

அந்த நிலையில் நீண்டகாலம் அவர்கள் இருத்தல் வேண்டிவரும் என்று மருத்துவர் சொல்லவே, இறைவனே! விரைவில் முழுநலமருளுங்கள், அல்லது வாயும் கையும் அறிவும் செயலிழந்த நிலையில் வைப்பதைவிட விரைவிலே அழைத்துக் கொள்ளுங்கள், மீண்டும் பிறப்புண்டேல் தமிழ்த்தொண்டு செய்யத் தமிழகத்திலே பிறப்பிவியுங்கள் என்று வேண்டினேன்.

அவர்கள் இப்பிறவியில் ஆற்றவேண்டிய பணிகள் முடிந்து விட்டன எனக் கருதிப் போலும் 3-1-1972இல் தன் திருவடி நீழலுக்கழைத்துக் கொண்டனன் என நாம் நினைந்து அமைதியுறுவோம்.

தங் குலத்தில் இத்தகைய ஒப்பில் பெரும் புலவர் இருக்கிறார் என்பதை முக்குலத்திலுள்ள பெருமக்கள் அறிந்திலர் என்றே கருதுகின்றேன். அவர்களுடைய பிரிவு கழகத்துக்கு மட்டுமல்லாமல் தமிழுலகுக்கே பேரிழப்பாகும். அவர்கள் அறிவுச் செல்வத்தை நன்கு பயன்படுத்துவதே நாம் அவர்கட்குச் செய்யும் கைம்மாருகும்.

வ. சு.

# செய்திகளும் குறிப்புக்களும்

## பாரோர் போற்றும் பாரதரத்ன

இந்திய அரசு வழங்கும் பட்டங்களுள் மிக உயர்ந்த பட்டம் "பாரதரத்ந" என்பதாகும். இப் பட்டம் 1955ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. கடந்த 16 ஆண்டுகளில் 14 பெருமக்களுக்கு இப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் எதிர்ப்பைப் பக்குவமாகச் சமாளித்தமைக்காகவும், 'பங்களாதேசு'க்கு விடுதலை தேடித் தந்தமைக்காகவும் 18-12-71இல் நாடாளுமன்றத்தில், எல்லாக் கட்சியினரும் கலந்து கொண்ட ஆர்வ மிக்கதொரு கூட்டத்தில், எல்லாருடைய பாராட்டுக்களுக்குமிடையே இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்கட்கு, இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு வி. வி. கிரி அவர்களால் இப் பட்டம் வழங்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்டது. இப் பட்டம் பெற்றோரில் அம்மையார் அவர்கள் முதல் பெண்மணி யாவார். முன்னர் இப் பட்டம் பெற்ற பதினன்கு பெருமக்களுள் திரு. இராசகோபாலாச்சாரியார் அவர் களும், காலஞ்சென்ற லால்பகதூர் சாத்திரி அவர்களும் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

ஈண்டு 'பாரதரத்ன' பட்டம் பெற்றுள்ள இந்திரா காந்தி யவர்கள் பல்லாற்றானும் இப் பட்டத்திற்குரிய சீரியர் ஆவர். அவர் கட்கு நம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வாழ்க இந்திரா காந்தியார்.

## அறிவியல் அறிஞர் விக்ரம் சாராபாய் மறைவு

இந்திய அணுசக்தி ஆராய்ச்சிக்குழு விண்வெளி ஆராய்ச்சி நிறு வனம் ஆகியவற்றின் தலைவர் டாக்டர் விக்ரம் ஏ சாராபாய் அவர்கள் கடந்த 30-12-71இல் தமது 52ஆவது அகவையில் திருவனந்தபுரத்தில் காலமானார்கள் என்ற செய்தி யறிந்து பெரிதும் வருந்துகின்றோம்.

அறிஞர் விக்ரம் சாராபாய் அவர்கள் 1919ஆம் ஆண்டு ஆகஸ்டு 12-இல் ஆமதாபாத்தில் பிறந்தவர் குஜராத் கல்லூரியிலும் பின்னர் செயின்ட் ஜான் கல்லூரியிலும் கல்வி பயின்றார். இரண்டாம் உலகப் போரின்போது டாக்டர் சி. வி. ராமன் தலைமையில் காஸ்மிக் ஒளி' பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார்.

1962இல் எஸ். எஸ் பட்நகர் நினைவுப் பரிசினையும் 1966இல் 'பத்ம பூஷன்' விருதினையும் பெற்றார். இந்திய அறிவியல் கழகம், நாட்டு அறிவியல் கல்விக்குழு ஆகியவற்றில் உறுப்பினராக இருந்தார்.

இங்ஙனம் அறிவியற்றுறையில் பல அரும்பணிகள் ஆற்றிய இவர் இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண் டிருந்தது குறிப்பிடத் தக்கதாகும். 1970இல் வியன்னாவில் நடை பெற்ற அனைத்து நாட்டு அணு ஆற்றல் ஆய்வாளர் மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இத்தகைய அறிவியல் பேரறிஞரின் மறைவு இந்தியத் துணைக் கண்டத்திற்குப் பேரிழப்பாகும். மறைந்த அறிஞரின் குடும்பத் தார்க்கும் உற்றார் உறவினர் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.